இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 131 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 24 வியாழக்கிழமை 06.04.2017

## 5 வருடங்களில் சட்டவிரோதமாக வெளிநாடு சென்ற 6,176 பேர் கைது

கொழும்பு, ஏப். 6
இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் 6 ஆயிரத்து 176 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி பதில் நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பிய >> 24

## குளத்தில் மூழ்கி குடும்பத்தலைவர் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 6
இருபாலை கிழக்கு பெரியகுளத்திலிருந்து குடும்பத் தலைவர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப் பட்டது. அந்தக் குளத்தில் தாமரைப் பூ பறிக்கச் சென்றவரே கொடிக்குள் >> 25

## வேலைதேடும் பட்டதாரிகள் நேற்று பெரும் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 6
வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் 5 மாவட்டங்களை உள்ளடக்கியதாகக் கவனவீர்ப்புப் பேரணி ஒன்றை நேற்று நடத்தினர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றிலில் இருந்து ஆரம்பித்த பேரணி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நிறைவு பெற்றது.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வேலைதேடும் >> 24




## வெளிநோயாளர் பிரிவுகள் நாளை இயங்காது

யாழ்ப்பாணம், ஏப். 6
மருத்துவர்கள் நாளை வெள்ளிக்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதால், வடக்கில் உள்ள வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவுகள் இயங்காது என்று மருத்துவமனைகளின் நிர்வாகங்கள் கூறின.
எனவே பொதுமக்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தித் தேவையற்ற அலைச்சலைத் தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளனர். >> 24



## போருக்கான காரணத்துக்கு தீர்வு காண்பது அவசியம்

*ஆஸி. அமைச்சரிடம் விக்கி எடுத்துரைப்பு*

யாழ்ப்பாணம் ஏப். 6
"இலங்கையில் போர் ஏற்பட எவை காரணமாக அமைந்திருந்தனவோ, அவற்றுக்குத் தீர்க்கமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்"
இவ்வாறு ஆஸ்திரேலிய அமைச்சரிடம் வலியுறுத்தினார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.
வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் ஆஸ்திரேலிய பன்னாட்டு அபிவிருத்தி மற்றும் பசுபிக் விவகாரங்களுக்கான அமைச்சர் கொன்சீற்றா பியராவன்ற தலைமையிலான >> 23

# இழுத்தடிக்காமல் மிகத் தெளிவாக செயற்படுவதற்கான அவகாசமே இது

**ஜெனிவாவில் வழங்கப்பட்ட இருவருட காலம் குறித்து ரணிலிடம் அழுத்திக் கூறியது பன்னாட்டு மன்னிப்புச் சபை**

கொழும்பு, ஏப்ரல் 6
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வழங்கப்பட்ட கால அவகாசத்தை, கால இழுத்தடிப்புக்காகப் பயன்படுத்தக் கூடாது. தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்ற வழங்கப்பட்ட காலத்தைப் பயன்படுத்த வேண்டும்.
இவ்வாறு கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அழுத்தம்



திருத்தமாக எடுத்துரைத்துள்ளதாக, பன்னாட்டு மன்னிப்புச் சபையின் செயலர் சயில் செட்டி தெரிவித்தார்.
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சயில் செட்டி தலைமையிலான குழுவினர், வடக்குப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று >> 04

## காணாமற்போனோர் அலுவலகம் எங்கே?

*அரசிடம் ஜே.வி.பி. கேள்வி*

கொழும்பு, ஏப்.6
காணாமற்போனோர் அலுவலகம் எங்கே? அதை அமைப்பதற்கு இன்னும் எத்தனை நாள்கள் எடுத்துக்கொள்வீர்கள்? இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார். காணாமற்னோரைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி அவர்களின் >> 22

## இந்தியப் படகுகளை விடுவிக்கவே கூடாது

*மன்னார் மாவட்ட மீனவர் சங்கம் போர்க்கொடி*

யாழ்ப்பாணம், ஏப். 6
அரசுக்காக மட்டுமே கருத்துரைக்கும் சில மீனவர் அமைப்புகளின் தலைவர்கள் கொழும்பு சென்று மீனவர்களின் விருப்புக்கு மாறாக இந்திய இழுவைப் படகுகளை.விடுவிப்பதற்கான அனுமதியை வழங்கியமை >> 24

**புங்குடுதீவு மாணவி படுகொலை:**

## முதலாவது சந்தேகநபருக்கு எதிராகப் புதிய குற்றச்சாட்டு

ஊர்காவற்றுறை, ஏப். 6
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் முதலாவது சந்தேகநபருக்கு எதிராக கொலை மிரட்டல் குற்றச்சாட்டு வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் >> 25

## சிலாவத்துறைக் காணிகள்; புத்தாண்டுக்குப் பின் தீர்வு

*சபையில் கூறினார் ரணில்*

கொழும்பு, ஏப். 6
சிலாவத்துறைக்கடற்படை முகாமினால் காணிகளை இழந்துள்ள மக்களின் பிரச்சினை தொடர்பில் புத்தாண்டுக்குப் பின்னர் >> 24

**பன்னாட்டு விசாரணைக்கு ஏற்றவாறு**

## அரசமைப்பை மாற்றுவதற்கு ஒருபோதும் அனுமதியோம்

*சுதந்திரக் கட்சி திட்டவட்டம்*

கொழும்பு, ஏப். 6
பன்னாட்டு நீதிபதிகளை இலங்கைக்குக் கொண்டு வரும் வகையில் அரசமைப்பை மாற்றியமைக்க ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.
கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற் >> 24

## ரணிலின் அமைச்சரவையே அரசமைப்புக்கு இடையூறு

*சபையில் வாசுதேவ காட்டம்*



கொழும்பு, ஏப். 6
அரசு தற்போதைய சூழ்நிலையில் பொது வாக்கெடுப்புக்குச் செல்லுமானால், அரசை வீட்டுக்கு அனுப்புவதற்குரிய முடிவையே மக்கள் வழங்குவார்கள். >> 25

## மின்சாரக் கதிரையில் மகிந்தவை அமர்த்த மைத்திரி அரசு முயற்சி

*சாடுகிறார் சரத் வீரசேகர*

கொழும்பு, ஏப் 6
மின்சாரக் கதிரைக்கு மகிந்த ராஜபக்சவை அனுப்புவதுதான் காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பதன் நோக்கம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்தவின் ஆட்சியில் மின்சாரக் கதிரை பற்றி அதிகம் பேசப்பட்டது. >> 24

**சிரிய இரசாயனத் தாக்குதல்:**

## சாவு எண்ணிக்கை 100ஐ தாண்டியது

*போர்க் குற்றம் என ஐ.நா. அறிவிப்பு*



பெய்ரூட், ஏப். 6
சிரியாவில் அரச படைகள் அல்லது அரச ஆதரவு பெற்ற நாடுகள் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் வான் வழி இரசாயனத் தாக்குதலில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 100 இனைத் தாண்டியது.
சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழு உள்ள இட்லிப் மாகாணத்தில் சேகுன் நகரில் அரசுக்கு எதிராகச் செயற்படும் கிளர்ச்சிக் குழுவை இலக்கு வைத்து நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட வான் வழி இரசாயனத் தாக்குதல் இலக்குத் தவறியதை அடுத்து >> 24

**வழிநடத்தல் குழுவில் இணங்கப்பட்ட விடயங்கள் குறித்த**

## இடைக்கால அறிக்கை மேலும் தாமதமாகும்!

யாழ்ப்பாணம், ஏப். 6
இந்த மாதம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை, அடுத்த மாதமே நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று தெரிகின்றது.
வழிநடத்தல் குழுவின் இறுதி >> 25

## அரச காணியிலேயே உள்ளனர் முள்ளிக்குளம் கடற்படையினர்

*கூட்டமைப்பின் கேள்விக்கு ரணில் பதில்*

கொழும்பு, ஏப். 6
பாதிக்கப்பட்ட மக்களை அவர்களது பூர்வீக நிலங்களில் குடியேற்றவே அரசு எதிர்பார்த்துள்ளது. இராணுவ முகாம்களை அரச காணிகளுக்குக் கொண்டு செல்ல முயற்சிக்கப்பட்டு வருகின்றது. முள்ளிக்குளத்தில் கடற்படையினரின் முகாம் அமைந்துள்ளது அரச காணியிலேயே. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க >> 24

## அரசமைப்புத் திருத்தத்துக்கே ஆதரவென சுதந்திரக் கட்சி சொல்லவேயில்லையாம்!

*வழிநடத்தல் குழுக் கூட்டம் தொடர்பில் வெளியான செய்திகள் பொய் என்கிறார் சுமந்திரன்*

யாழ்ப்பாணம், ஏப். 6
புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் பொது வாக்கெடுப்பு ஒன்றுக்குச் செல்ல வேண்டியிருக்கும் எந்தவொரு விடயத்துக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்காது அரசமைப்புத் திருத்தத்துக்கு மட்டுமே ஆதரவளிக்கும் என்று வழிநடத்தல் குழுவின் கூட்டத்தில் >> 04

## பத்திரிகைச் செய்தி குறித்து வழிநடத்தல் குழுவில் சீற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 6
புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிநடத்தல் குழுவின் நேற்றைய கூட்டத்தில் தமிழ்ப் பத்திரிகைகள் மீது சரமாரியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. சுதந்திரக் கட்சியைப் பற்றி மக்களிடம் தமிழ்ப் பத்திரிகைகள் தவறான தகவல்களை வழங்குவதாக அதன் தலைவர்களில் >> 22

## சுமந்திரன் கொலை முயற்சி; ஐந்து பேரின் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஏப். 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சுமந்திரன் கொலை முயற்சி வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள ஐந்து சந்தேகநபர்களினதும் விளக்கமறியல் தொடர்ந்து ஏப்ரல் 12ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட முன்னாள்போராளிகளான ஐந்து பேரும் நேற்றுக்கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில்முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

வெளிநாடொன்றில்வசிப்பதாகக் கருதப்படும் ஆறாவது சந்தேகநபருக்குப் பன்னாட்டுப்பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் ஐவரும் நேற்றுப் பலத்த பாதுகாப்புடன் கிளிநொச்சி நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்டனர்.

மன்றில் கூடியிருந்த சந்தேகநபர்களின் குடும்பத்தினர், நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் சந்தேகநபர்கள் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்படும்போது அழுது புலம்பியதைக் காண முடிந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக்கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் யாழ். வடமராட்சி கிழக்கு மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த இந்த ஐந்துபேரும் 2017 ஜனவரி 14ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

காராளசிங்கம் குலேந்திரன், வேலாயுதம் விஜயகுமார், முருகையா தவேந்திரன், லூசி மரியநாயகம் அஜந்தன் மற்றும் ஞானசேகரலிங்கம் ராஜ்மதன் என்ற ஐவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் மீது பிரமுகர் ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்தமை, ஆயுதங்கள் வைத்திருந்தமை மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பு வைத்திருந்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

## 14 நாள் கால நீடிப்பு வழங்கியும் பதிலளிக்காத வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், ஏப். 6

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக, வடக்கு முதலமைச்சரின் அமைச்சிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்குவதற்கு 14 நாள்கள் மேலதிக கால நீடிப்புக் கோரப்பட்டு, அந்தக் கால நீடிப்பும் முடிவடைந்துள்ள நிலையிலும் இன்னமும் பதில் வழங்கப்படவில்லை.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் வெளிநாட்டுப்பயணம் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக, வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் தகவல் கோரும் விண்ணப்பப் படிவம் தகவல் வழங்கும் அலுவலரிடம், பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

இதற்குரிய தகவலை வழங்குவதற்கு 14 நாள்கள் கால அவகாசம் தேவை என்று மார்ச் 8 ஆம் திகதி, தகவல் வழங்கும் அலுவலர் ப.ஜெயராஜா கடிதம் ஊடாகக் கோரியிருந்தார். முதலமைச்சர் சுகவீனம் காரணமாக அலுவலகத்தில் இல்லை என்பதால் பதில் வழங்குவதற்கு மேலதிக கால அவகாசம் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

கோரப்பட்ட 14 நாள்கள் கால அவகாசம் முடிவடைந்துள்ள நிலையிலும் இன்னமும் பதில் வழங்கப்படவில்லை. பதில் வழங்கப்படாமைக்கான காரணமும் எழுத்துமூலமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (த-5)

## எதிர்காலப் போராட்டங்களால் நெருக்கடிக்கு உள்ளாகும் அரசு

### கஜேந்திரகுமார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 6

பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் குறித்து பாராமுகமாக இருக்கும் அரசுக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் போராட்ட வடிவத்தை மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்துகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 30, 40 நாள்களாகத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றபோதிலும், அரசு பாராமுகமாகவே செயற்பட்டு வருகிறது. எனவே, அரசைத் தவிர்க்க முடியாத நிலைக்குத் தள்ளும் வகையில் போராட்ட வடிவங்களை மாற்றத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (த)

# தப்பமுடியாது இராணுவம்

## மகிந்த அணியின் கருத்துக்கு பொலிஸ் பேச்சாளர் பதிலடி



கொழும்பு, ஏப். 6

சர்ச்சைக்குரிய விசாரணைகளில் இருந்து இராணுவத்தினருக்கு விலக்கு அளிக்க முடியாது என்று பொலிஸ்பேச்சாளர் பிரியந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

பல உயர் மட்ட வழக்குகளில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரை இலக்கு வைத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதாக மகிந்த அணியினர் குற்றம்சாட்டியிருந்தனர்.

இதனை நிராகரித்துள்ள பொலிஸ் பேச்சாளர், விசாரணைகளில் இருந்து இராணுவத்தினருக்கு விலக்கு அளிக்க முடியாது என்று கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பல்வேறு காரணங்களால் தாமதிக்கப்பட்டு வந்த ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் வழக்கு, ஊடகவியலாளர் கீத் நொயார் தாக்கப்பட்ட வழக்கு, வசீம் தாஜுதீன் கொலை வழக்கு, ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட வழக்கு விசாரணைகள் தற்போது தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

மேற்படி சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளில், இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் பலர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (த-4)



## கேப்பாபிலவு விடுவிப்பு தகவல் எதுவுமே இல்லை

### முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 6

கேப்பாபிலவு மக்களின் காணிகள் விடுவிப்பது தொடர்பாக உத்தியோபூர்வமான தகவல்கள் எதுவும் முல்லைத்தீவு மவாட்டச்செயலத்துக்குக் கிடைக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கேப்பாபிலவில் உள்ள 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி 138 குடும்பங்கள் 36ஆவது நாளாகவும் தங்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்ட நிலையிலும் மக்களால் தொடர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கேப்பாபிலவில் உள்ள தங்கள் காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். காணிகள் விடுவிப்பது தொடர்பாக உத்தியோபூர்வமான தகவல்கள் எதுவும் முல்லைத்தீவுமாவட்டச்செயலத்துக்குக்கிடைக்கவில்லை" என மாவட்டச் செயலர் கூறினார். (த-7)

## இலங்கைக்கு வருகிறார் சீன அரசியல் ஆலோசகர்

சீனாவின் உயர்மட்ட அரசியல் ஆலோசகர் யூ செங்செங் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று சீன ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான நான்கு நாள்கள் பயணத்தை அவர் இன்று ஆரம்பிக்கவுள்ளார்.

இலங்கை நாடாளுமன்றச் சபாநாயகர் கருஜெயசூரிய மற்றும் பாகிஸ்தான் செனட் தலைவர் மியான் ராசா ரப்பானி ஆகியோரின் அழைப்பின் பேரிலேயே அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். (த-4)

# 45 ஆடுகளைப் புத்தளத்துக்கு கடத்தும் முயற்சி முறியடிப்பு

## இரணைமடுவில் வாகனத்துடன் மூன்று பேர் பொலிஸாரால் கைது



கிளிநொச்சி, ஏப். 6

திருடப்பட்டதாகக் கருதப்படும் 45 ஆடுகளைச்சாவகச்சேரியில் இருந்து இரவிரவாகச் சட்டவிரோதமாகப் புத்தளத்துக்குக் கடத்தியபோது அவை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் 3 பேரைக் கைது செய்துள்ளதாகவும், வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் சாவகச்சேரிப் பகுதியில் இருந்து ஆடுகள் கடத்தப்பட்டு வருவதாகப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து பொலிஸ் சிறப்பு முறியடிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உதவி பொலிஸ் பரிசோதகர் ஜசிந்தன் தலைமையில் சென்ற குழுவினர் இரணைமடுப் பகுதியில் வாகனம் ஒன்றை மறித்து சோதனையிட்டனர்.

இதன்போது சாவகச்சேரியில் இருந்து புத்தளத்துக்குக் கடத்தப்பட்ட 45 ஆடு கள் மீட்கப்பட்டன. அனுமதிப்பத்திரம் இன்றி இறைச்சிக்காக அவை கொண்டு செல்லப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

அதனைக் கொண்டு சென்ற 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். ஆடுகளைக் கடத்திச் செல்லப் பயன்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டுக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆடுகள் களவாடப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டனவா என்பது தொடர்பில் விசாரணை இடம்பெறுகிறது. அதன்பின்னர் சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சிமுல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்னவின் கண்காணிப்பின் கீழ் கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்சவின் வழிநடத்தலின் கீழ் பொலிஸ் சிறப்பு முறியடிப்புப் பிரிவு இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-4,6)

## அநுரவுக்கு மறியல் நீடிப்பு



கொழும்பு, ஏப். 6

றக்பி விளையாட்டுவீரர் வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பிலான சாட்சிகளை மறைக்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள, முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்கவுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, மாலபே தனியார் வைத்தியக் கல்லூரியில் இருந்து மீட்கப்பட்ட உடற்பாகங்களில் தாஜுதீனின் உறுப்புகள் இருப்பது உண்மையா என ஆராய்ந்து, பெற்றுக்கொள்ளப்பட்ட மரபணு அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதாக, முறைப்பாட்டை ஆராயும் பிரதி சொலிசிடர் ஜெனரல் நேற்று நீதிமன்றத்தில் குறிப்பிட்டார். (த4)

# மும்மொழி கொள்கையை வடக்கு ஆளுநர் உதாசீனம்

ஊடக அறிக்கைகள் தனிச் சிங்களத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 6

மும்மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்குத் தனியாக அமைச்சு நிறுவப்பட்டுள்ள போதும், இன்னமும் தனிச் சிங்களத்தில் அறிக்கைகள் அனுப்பும் நடவடிக்கை முடிவுக்கு வரவில்லை. வடக்கு மாகாணத்தின் ஆளுநர் அலுவலகத்தினால் ஊடகங்களுக்கு, பத்திரிகை அறிக்கை இப்போதும் தனிச் சிங்களத்தில் மாத்திரமே அனுப்பி வைக்கப்படுகின்றது. வடக்கு மாகாண ஆளுநராக றெஜினோல்ட் குரே பதவியேற்ற பின்னர், ஆளுநர் கலந்து கொள்ளும் நிகழ்வுகள் தொடர்பான விவரங்கள் ஊடகங்களுக்கு, ஆளுநர் ஊடகப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. இந்த அறிக்கைகள் யாவும் தனிச் சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுகின்றன. அரச தலைவர் ஊடகப் பிரிவினால் மும்மொழிகளிலும் ஊடக அறிக்கைகள் அனுப்பப்பட்டு வரும் நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் தனிச் சிங்கள மொழியில் ஊடக அறிக்கைகளை அனுப்புகின்றது.

மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சு அமைக்கப்பட்டு, அரச திணைக்களங்களில் அதனைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ஆளுநர் அலுவலகம் அதனைக் கணக்கில் எடுக்காமல் தொடர்ந்தும் சிங்களத்தில் அறிக்கைகளை அனுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-5)

# அரியாலையில் வீடுடைத்து 30 பவுண் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 6

அரியாலை கலைமகள் வீதியில் உள்ள வீடொன்றில் 30 பவுண் நகைகள் நேற்றுத் திருடப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 'வேலைக்காக நாம் வெளியில் சென்றிருந்தோம். மாலை திரும்பி வந்து பார்த்தபோது வீட்டில் உள்ள பொருள்கள் சிதறிக் கிடந்தன. வீட்டின் பின்பக்கக் கதவும் உடைக்கப்பட்டிருந்தது. திருடர்கள் உள்நுழைந்துள்ளார்கள் என்பதை ஊகிக்க முடிந்தது. வீட்டில் அறைக்குள் வைக்கப்பட்டிருந்த தாலிக் கொடி உள்ளிட்ட 30 பவுண் நகைகள் திருட்டுப் போயிருந்தன. பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம். பொலிஸார் வந்து தடயப் பொருள்களைத் தேடினர்' என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-5,8)

# கணக்காய்வுகள் தாமதமாவதற்கு ப.நோ.கூ. சங்கங்களே காரணம்

## கூட்டுறவு உதவி ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 6

கணக்காய்வுகளை விரைவாக முடிக்க முடியாமல் இருப்பதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளே காரணம் என்று கூட்டுறவு உதவி ஆணையாளர் மோகன் தெரிவித்தார்.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 22 கிளைகள் மூடப்பட்டமை தொடர்பில் 'உதயனில்' கடந்த திங்கட் கிழமை செய்தி வெளியாகியிருந்தது. அதில் 6 வருடங்களாக கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை என்றும், அதிகாரிகளும் அதனைக் கவனிக்கவில்லை எனவும், சங்கத்தின் தலைவர் தெரிவித்திருந்தார் என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் விளக்கமளித்த உதவி ஆணையாளர், 2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கணக்காய்வுகள் மேற்படி சங்கத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கடந்த ஆண்டு இரண்டு வருடங்களுக்குரிய கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களின் இருப்பு நிலையை தயாராக வைத்திருப்பதில்லை.

இதனால் கணக்காய்வில் தாமதம் ஏற்படுகின்றது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பு நிலையை தயாராக வைத்திருக்காமையால், அவர்களின் ஒரு வருட கணக்காய்வை முடிப்பதற்கு 3 தொடக்கம் 5 ஆண்டுகள் செல்கின்றன. இருக்கின்ற ஆளணியில் இதனைச் செய்வதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது என்றார். (வ5)

# குடாநாட்டுக்குக் கஞ்சா: படையினரா பின்னணி?

## சபையில் சிறிதரன் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஏப். 6

யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாகக் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டு வருகின்றது. அது தொடர்பான புகைப்படங்களும் ஊடகங்களில் வெளிவருகின்றன. ஆனால், இவற்றை யார் கடத்தி வருகின்றார்கள் என்ற தகவலும், அவர்கள் தொடர்பான படங்களும் வெளிப்படுத்தப்படுவதில்லை. எனவே, இத்தகைய கடத்தல்களின் பின்னணியில் படையினர் இருக்கின்றனரா என்று சந்தேகம் எழுகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தலைமை நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கான சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளல் தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதி என்பது அனைவருக்கும் பொதுவான வகையிலேயே இயங்கவேண்டும். அது வேறு கோணங்களில் செயற்படக்கூடாது. ஆனால், இந்த நாட்டில் கடந்த காலங்களில் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்புகளை எடுத்து நோக்கினால் நீதித்துறை என்பது சுயாதீனமாகச் செயற்படுகின்றா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுகின்றது.

அதேவேளை, வடக்கில் இன்று ஒன்றரை இலட்சம் வரையான படையினர் இருக்கின்றனர். கடற்பாதுகாப்பும் பலமாகவே இருக்கின்றது. நிலமை இப்படியிருக்கும் நிலையில்தான் கஞ்சா கடத்தலும் இடம்பெறுகின்றது.

கேரளாவிலிருந்து வந்த கோடி ரூபா பெறுமதியான கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது எனப் படத்துடன் செய்தி வெளியானாலும் அதை யார் கடத்தி வந்தனர் என்பது குறித்த படங்கள் தகவல்கள் வெளிவருவதில்லை. எனவே, வடக்குக்கு இவற்றை எடுத்து வருவது யார்?

இப்படி போதைப்பொருள்கள் வந்தால் மாணவர்களின் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும். போதைப் பொருள் பாவனையைத் தடுக்கும் புனர்வாழ்வு நிலையங்களும் அங்கு இல்லை.

வடக்கில் படையினர் கையூட்டல்களைப் பெறுகின்றனர். எனவே, இவ்வாறான கடத்தல்களின் பின்னணியில் படங்கள் வெளிவராததால் அவர்கள் தான் இருக்கின்றனர் என்ற சந்தேகம் எழுகின்றது. யார் கொண்டு வருகின்றனர் என்ற விடயத்தை நீதித்துறையாலும் கண்டுகொள்ள முடியாதுள்ளது என்றார். (கு-4)

# இன்றைய அமர்வில் பங்கேற்பேன்

## வடக்கு முதல்வர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 6

வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் நிச்சயமாகப் பங்கேற்பேன் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

"சுகவீனம் காரணமாகக் கொழும்புக்குச் சென்றதால் வடக்கு மாகாண சபையின் சில அமர்வுகளில் கலந்து கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டது. இனிமேல் கொழும்புக்குச் செல்வதை இயன்றளவு குறைத்து இங்கேயே இருக்கலாம் என முடிவெடுத்துள்ளேன். இன்று இடம்பெறவுள்ள மாகாண சபை அமர்வில் நிச்சயமாக கலந்துகொள்வேன்"என்றார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண முதலமைச்சர் நடப்பாண்டில் இடம்பெற்ற எந்த அமர்விலும் கலந்துகொள்ளவில்லை. நான் கேட்கவிருக்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் காலம் கடத்தவே அவர் அவ்வாறு நடந்து கொள்கின்றார். அவர் இல்லாவிட்டாலும் எனது கேள்வியை எடுங்கள் எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்குப் பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன், இன்றைய அமர்வில் தவராசாவின் கேள்விகள் எடுத்துக் கொள்ளப்படும் எனக் கூறியிருந்தார். (கு-8)

# அலைபேசி கொள்ளையிட்டவருக்கு 3 வருட கடூழியச் சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், ஏப். 6

வீதியில் நின்ற நபரைத் தாக்கிவிட்டு அவரிடமிருந்து அலைபேசியை அபகரித்த நபருக்கு 3 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த மல்லாகம் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், அவரை 3000 ரூபா தண்டம் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த 3 நபர்கள் இணுவில் பகுதியில் வீதியில் நின்றிருந்த நபரைத் தாக்கிவிட்டு அவரிடம் இருந்த அலைபேசி ஒன்றை அபகரித்துச் சென்றனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தின் போது கொள்ளையர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளின் இலக்கம் பொலிஸாரிடம் வழங்கப்பட்டது.

விசாரணைகளின் போது 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மல்லாகம் நீதிவான் மன்றால் சில மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்

நீதிம்ன்றவிசாரணையின் போது கைது செய்யப்பட்ட 3 சந்தேகநபர்களும் ஆரம்பத்தில் குற்றச்சாட்டை மறுத்து வந்தனர். எனினும் முதலாவது சந்தேகநபரான ஞானசேகரன் குருபரன் கடந்த தவணை விசாரனையின் போது மன்றில் தவறை ஏற்றுக் கொண்டார்.

மல்லாகம் நீதிமன்றில் மல்லாகம் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுக்கப்பட்டது.

முதலாவது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் அவரது முதலாவது குற்றமான அலைபேசியைத் திருடியதற்கு 2வருட கடூழிய சிறைத்தண்டனையும் 1500 ரூபா தண்டமும் விதித்து மன்று கட்டளையிட்டது. திருட்டுப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றத்துக்கு 1 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 1500 ரூபா தண்டமும் விதித்து மன்று கட்டளையிட்டது.

மேலும் ஏனைய 2 சந்தேகநபர்களும் தவறை ஏற்றுக்கொள்ளாததையடுத்து குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்தி வைத்தார்.

இதேவேளை, குற்றவாளியாகத் தண்டனை வழங்கப்பட்டவர் இந்த வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த வேளையில் நல்லூர் அரசடியில் இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புபட்டதாக யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண நீதிவான் மன்றால் விளக்கமறியலில் வைக்கப்படடுள்ளார். (வரி-1)

# மாணவியின் நிர்வாணப் புகைப்படத்தை வைத்துப் பணம் உருவிய சக மாணவன்

## கைது செய்தனர் பேலியகொடைப் பொலிஸார்

கொழும்பு, ஏப். 6

கொழும்புப் பாடசாலை மாணவி ஒருவர் வட்ஸ் அப்பில் தனது நிர்வாணப் புகைப்படத்தைக் காதலன் எனநம்பிசகமாணவனுக்கு அனுப்பியுள்ளார். அதனை இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்போவதாக அச்சுறுத்திப் பணம் பறித்த குற்றச்சாட்டில் பாடசாலை சக மாணவரொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

களனி பேலியகொடைப் பிரதேசப் பாடசாலையொன்றில் குறித்த இருவரும் உயர் தரத்தில் கல்வி கற்கின்றனர். மாணவியின் நிர்வாணப் புகைப்படமொன்றை வட்ஸ் அப்பில் அனுப்புமாறு பல தடவைகள் மாணவன் கேட்டுள்ளார். ஆரம்பத்தில் அதற்கு மறுப்புத் தெரிவித்த மாணவி, காதலன் கோபித்துக் கொண்டதால் பின்பு விருப்பமில்லா மல் தனது நிர்வாணப் புகைப்படத்தை வட்ஸ்அப் மூலம் மாணவனுக்கு அனுப்பியுள்ளார் எனப் பொலிஸார் நடத்திய விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

புகைப்படத்தைப் பெற்றுக் கொண்ட அந்த மாணவன், அதை இணையத்தில் வெளியிடாமல் இருக்கவேண்டுமென்றால் தான் கேட்கும் பணத்தைத் தருமாறு கோரியுள்ளார்.

இதனால் என்ன செய்வதென்று தெரியாத குறித்த மாணவி தனது வீட்டில் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த பணத்தைப் பெற்றோருக்கு தெரியாமல்திருடிகுறித்தமாணவனுக்குக் கொடுத்து வந்துள்ளார் எனத் தெரிகிறது.

சுமார் ஒரு இலட்சம் ரூபா வரை குறித்த மாணவியிடம் இருந்து அந்த மாணவன் இவ்வாறு அச்சுறுத்திப் பணம் பறித்துள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

அண்மையில் அந்த மாணவன் மாணவியிடம் மேலும் 20 ஆயிரம் ரூபா கேட்டுள்ளார். தன்னிடம் பணம் இல்லாததால் குறித்த மாணவி, அவசர தேவைக்காக 20 ஆயிரம் ரூபா பணம் தருமாறு உறவினரொருவரிடம் கேட்டுள்ளார். சந்தேகம் கொண்ட குறித்த உறவினர் இது தொடர்பில் மாணவியிடம் விசாரித்தபோது உண்மை தெரியவந்தது.

இது தொடர்பில் குறித்த மாணவியின் பெற்றோருக்கு உறவினர் தகவல் தெரிவித்துள்ளார். இதனையடுத்து மாணவியின் பெற்றோர் பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். 18 வயதுடைய அந்த மாணவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். விசாரணை இடம்பெறுவதாகப் பொலிஸார் கூறினர். (கு-4)

## இழுத்தடிக்காமல்...

பி.ப. 2.30 மணிக்கு, கொழும்பு இதழியல் கல்லூரிக் கேட்போர் கூடத்தில் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினர்.

போர்க்குற்றங்கள் தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை ஏற்றுக் கொள்ளமாட்டோம் அங்கீகரிக்கமாட்டோம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரசின் தலைமைகள் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றன. இது தொடர்பில் மன்னிப்புச் சபையின் நிலைப்பாடு என்ன என்று பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த சயில் செட்டி, அரசியல்வாதிகள் வேறுபட்ட கருத்துக்களைச் சொல்ல முடியும். இறுதிப் போரில் பாரதூரமான சம்பவங்கள் இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டு இருக்கின்றது. இதன் உண்மைத் தன்மை கண்டறியப்படவேண்டும். அதற்குப் பன்னாட்டுப் பங்களிப்புடன் கூடிய கலப்பு நீதிமன்றம் நிறுவப்பட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். குற்றமிழைத் தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கால இழுதடிப்புக்கு பயன்படுத்தக் கூடாது. ஐ.நா. தீர்மானத்தில் சொல்லப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கே பயன்படுத்தவேண்டும். இதனை தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்கவிடம் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளோம்.

வடக்கு மாகாணத்தில் நடைபெறும் போராட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளோம். வடக்கில் அதிகளவு இராணுவப் பிரசன்னத்தை உணர முடிகின்றது. இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படவேண்டும். மக்களின் காணிகள் அவர்களிடமே திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். காணாமற்போனோர் விடயங்களையும் ஆராய்ந்துள்ளோம். ஒருவர் காணாமற்போயிருப்பினும் அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவருக்கு என்ன நடந்தது என்பது கண்டறியப்பட வேண்டும். பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்றார்.

இதேவேளை பன்னாட்டு மன்னிப்புச் சபையின் செயலாளர் அடங்கிய குழுவினர் நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் அவரது இல்லத்தில் சந்தித்து பேசினர். இதன் போது மன்னிப்புச் சபையினால் தயாரிக்கப்பட்ட "நீதி மட்டுமே எமது காயங்களை ஆற்றுப்படுத்தும்" என்ற ஆவணம் வடக்கு முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. (த-5-4-101)

## அரசமைப்புத்...

அந்தக் கட்சி தெரிவிக்கவில்லை என்று நேற்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

"குழுவின் கூட்டங்களில் பேசப்படுகின்ற விடயங்களை ஊடகங்களுக்கு வேண்டுமென்றே சிலர் திரிபுபடுத்தி தவறாக வழங்குகின்றனர். அவர்கள் எத்தகைய நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுவதால் அவ்வாறு செய்கின்றார்களோ தெரியாது" என்றார் அவர். அந்தச் செய்தி முழுப் பொய் என்றும் அவர் கூறினார்.

வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமைஆரம்பமானது. இந்தக் கூட்டத்தில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியதாவது:

அனைத்துக் கட்சித் தலைவர்களும் கடந்த மாதம் 27ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சின் போது ஆராயப்பட்ட விடயங்களை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன்போது ஜே.வி.பி. உறுப்பினர், புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவும் பொது வாக்கெடுப்புத் தேவையில்லை என்று இணங்கி முடிவெடுத்தனர் என்று பத்திரிகைகளில் வெளியிட்ட செய்தி உண்மையா என்று கேள்வி எழுப்பினார். அதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அப்படி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அது பொய்யான தகவல் என்று பதில் வழங்கினார்.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சுசில் பிரேமஜயந்த வந்தார். அரசமைப்பு உருவாக்கத்தில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன என்று தலைமை அமைச்சர் அவரிடம் கேட்டார். அதற்கு சுசில், அரசியல் தீர்வு, தேர்தல் முறைமை மறுசீரமைப்பு,நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் வழிநடத்தல் குழு ஆராய வேண்டும். இதில் பொதுவாக்கெடுப்புக்கு போக வேண்டிய தேவை ஏற்பட்டால் அதற்கும் தயார் என்று பதில் வழங்கினார். இதனையடுத்து தலைமை அமைச்சர் ரணில், சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை அறிந்து கொண்டீர்கள்தானே என்று கூறினார்.

இதன் பின்னர் மீளவும் கருத்துத் தெரிவித்த சுசில், வழிநடத்தல் குழுவில் எமது கட்சிக்குத் தலைமை தாங்கி பிரதிநிதித்துவப்படுத்துவது நிமல் சிறிபால டி சில்வா. எனக்குத் தெரிந்த வரை எமது கட்சியின் நிலைப்பாடு நான் மேற்கூறியவாறுதான் உள்ளது என்று குறிப்பிட்டார்.

மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன, அதிகாரப் பகிர்வு தொடர்பில் நான் (சுமந்திரன்) பத்திரிகைகளுக்குக் கூறியவை பொய்யானவை என்றும் அப்படி ஒரு முடிவு வழிநடத்தல் குழுவில் எடுக்கப்படவில்லை என்றும் கூறினார். முடிவு எடுக்கப்பட்டதாக நானும் கூறவில்லை. இணக்கம் காணப்பட்டுள்ளது என்றுதான் சொல்லியுள்ளேன் என்று தெரிவித்தேன். இதனை தலைமை அமைச்சரும் ஏனையவர்களும் ஆமோதித்தார்கள்.

வழிநடத்தல் குழுவில் பேசப்படும் விடயங்கள் ஊடகங்களுக்கு திரிபுபடுத்தி வழங்கப்படுகின்றது. எனவே வழிநடத்தல் குழுவில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாம் உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிட வேண்டும் என்று கேட்டேன். அதற்கு யாரும் பதில் வழங்கவில்லை. இவ்வாறான நிலையில் இன்றைய (நேற்றைய) ஊடகங்களில் வழிநடத்தல் குழுவில் தெரிவிக்கப்படாத விடயங்கள் வெளியாகியுள்ளன - என்றார்.

வழிநடத்தல் குழுவில் நேற்று முன்தினம் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் அலைபேசிக்கு உதயன் பத்திரிகை பலமுறை அழைப்பு எடுத்தபோதும் அது இயங்கு நிலையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)









**சிவன் ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள

**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**

**076 585 9977 , 077 835 7307**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.

தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**

நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

**யாழ்மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி**
**கூட்டுறவுப் பணியாளர் உயர்பிரிவு - 2017**
**விண்ணப்பம் கோரல்**

மேற்படி பயிற்சி நெறிக்கு கல்விப் பொது தராதரப்பத்திர உயர்பிரிவில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

பணியாளர்களுக்கான தகைமை, விவரங்கள் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப படிவங்களையும் விவரங்களையும் சபையில் பெற்று **25.04.2017** இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய மூகவரி** யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை, இல 12, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**அதிபர்**

**குறிப்பு : இப்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து சித்தியடைபவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு உண்டு.**

# வீட்டுத் திட்டம் கிடைத்தும் கட்டுவதற்கு மணல் இல்லை

## *பயனாளிகள் கவலை*

யாழ்ப்பாணம் ஏப். 6

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கபட்ட வீடுகளின் கட்டுமானப் பணிகள் மணல் கிடைக்காமையால் தடைப்பட்டுள்ளன என்று வீட்டுத் திட்டப் பயனாளிகள் கவலை தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வீட்டு திட்டம் வழங்கபட்டது. அதற்கான கட்டுமான வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. கட்டுமான வேலைகளுக்கான மணலை நாகர்கோயில் பகுதியில் எடுப்பதற்கான அனுமதியை யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மணலை விநியோகிக்கும் உரிமையாளர்களுக்கு வழங்கியிருந்தது. எனினும் கடந்த ஒருவார காலமாக நாகர் கோயில் பகுதியில் மணல் எடுப்பதற்கு வன வளத் திணைக்களம் தடை விதித்துள்ளது.

"மணல் அள்ளும் பகுதி தமக்குச் சொந்தமானது என்று தெரிவிக்கும் வன வளத் திணைக்களம், மணல் எடுக்க வேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்கியது. இது தொடர்பாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட பணிப்பாளருக்கு தகவல் வழங்கப்பட்டது. அவர் யாழப்பாண மாவட்டச் செயலாளரின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்றார். யாழ். மாவட்டச் செயலாளர் மணல் எடுப்பது தொடர்பான பிரச்சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுதருவதாக கூறியுள்ளார்" என்று நாகர்கோவில் மணலை விநியோகிக்கும் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

"தேசிய வீடமைப்பு அதிகாரக சபையால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் நாவற்குழிப் பகுதியில் 250 வீடுகள், தெல்லிப்பழையில் 50 வீடுகள் அமைக்கும் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. மணல் இல்லாத காரணத்தால் கட்டுமான வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் அடுத்த வாரம் பொன்னாலை பிரதேசத்துக்கான வீடமைப்புப் பணிகள் ஆரம்பிக்கபடவுள்ளன" என்று தேசிய வீடமைப்புப் அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட பணிப்பாளர் இரவீந்திரன் தெரிவித்தார்.

மணல் இல்லாத காரணத்தால் வீடமைக்கும் பணிகள் தாமதமாகலாம் என்று வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவித்தனர். எனவே மணல் எடுப்பதில் உள்ள பிரச்சினையைத் தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்கமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரிடம் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-ரி)

# கவனிப்பாரற்றுக் கிடக்கும் காணிகள் மீது நடவடிக்கை

## *ஊர்காவற்றுறை பிரதேச சபை அறிவிப்பு*

ஊர்காவற்றுறை, ஏப். 6

"ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் துப்பரவு செய்யப்படாத, கவனிப்பாரற்றுக் காணப்படும் காணிகள் மற்றும் டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவான வகையில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்"

இவ்வாறு ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் அறிவித்தார்.

"காணிகளை துப்புரவு செய்ய அறிவித்தல் வழங்கப்பட்டு எதிர்வரும் 14 நாட்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் காணிகள் பிரதேச சபையால் கையேற்கப்படும். பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலுடன் ஆதன உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்களுக்கு எதிராக 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவுகள் 153(1),100,101 மற்றும் 2007ம் ஆண்டு 11ஆம் இலக்க நுளம்பு பெருக்கத் தடுப்புச் சட்டத்துக்கமைவாக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

# பெரும்போக வெங்காய பயிர் செய்கை 50 வீதம் அழிவு

அச்சுவேலி, ஏப்.6

யாழ்.மாவட்டத்தில் கடந்த பெரும்போக வெங்காயச் செய்கை 50 வீதம் வரையில் அழிந்துள்ளது. பெரும்போகத்தில் 750 ஹெக்ரேயரில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. எதிர்பாராத காலநிலை முரண்பாடு வெங்காயச் செய்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் அ.செல்வராசா.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த பெரும் போகத்தில் மழை உரிய அளவு உரிய வேளையில் பெய்யவில்லை. கடும் பனிப்பொழிவும், கடும் குளிரும் காணப்பட்டதோடு பகலில் கடும் வெயில் மற்றும் வெப்பநிலை வீச்சு அதிகமாகக் காணப்பட்டது.

இந்த முரண்பாடான காலநிலை வெங்காயப்பயிர் செய்கையைப் பெருமளவில் பாதிப்படையச் செய்துள்ளது. விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதுடன், அடுத்த போக நடுகைக்கான விதை வெங்காயத்துக்கும் பெருமளவில் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. என்றார். (ற - 11)

# எறிகணை குண்டு மீட்பு

தென்மராட்சி, ஏப். 6

தண்ணீர் தாங்கி நிர்மாணிக்க வெட்டிய அத்திபாரத்தினுள் வெடிக்காத நிலையிலிருந்த எறிகணைக் குண்டு மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று மீசாலை மேற்கு காளி கோவிலடியில் இடம்பெற்றது. இந்தப் பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர் தண்ணீர்த் தாங்கி அமைக்க அத்திவாரம் வெட்டியுள்ளார். குழாயினுள் வெடிக்காத நிலையில் எறிகணைக் குண்டு காணப்பட்டது. அது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அவர் அறிவித்தார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் சிறப்பு அதிரடிப் படையினர் மூலம் எறிகணைக் குண்டை அப்புறப்படுத்தி செயலிழக்க வைக்குமாறு உத்தரவிட்டார். (வ - 9)

# மூத்த பத்திரிகையாளர் கதிர்காமத்தம்பி மறைவு

யாழ்ப்பாணம், ஏப். 6

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் செல்லையா கதிர்காமத்தம்பி அவரது 89ஆவது வயதில் நேற்றுக் காலை, கொக்குவில் தாவடியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

கடந்த இரண்டரை வருடங்களாக நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியிருந்த அவர், நேற்றைய தினம் உயிரிழந்தார்.

பட்டதாரியான இவர் ஆரம்பத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் உப அதிபர், அதிபராகவும் பணியாற்றினார்.

1995ஆம் ஆண்டு வரையில் கொழும்பு ஆங்கில ஊடகங்களின் ஊர்காவற்றுறைப் பிரதேச செய்தியாளராகவும், 1996ஆம் ஆண்டிலிருந்து அரச ஊடகமான லேக்ஹவுஸ் செய்தியாளராகவும் செயற்பட்டார். அதேவேளை உதயன் பத்திரிகையில் 1987ஆம் ஆண்டு தொடக்கம் 1993 ஆம் ஆண்டு வரை உதவி ஆசிரியராகவும் பணிபுரிந்தார். அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை வெள்ளிக் கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-5-173)

# ஆன்மிகப் பாதயாத்திரை

கொழும்புத்துறை, ஏப். 6

தவத்திரு யோகர் சுவாமிகளின் பங்குனி ஆயிலிய நட்சத்திரக் குருவழிபாடுத் தின ஆன்மிகப் பாதயாத்திரை இன்று வியாழக் கிழமை காலை 7 மணிக்கு நல்லூர்த் தேரடி முன்றிலில் ஆரம்பமாகி கொழும்புத்துறை சுவாமிகளின் சமாதிக் கோயிலில் நிறைவுபெறும் என்று இந்துமா மன்றம் அறிவித்தது. (வ)

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**யாழ்ப்பாணம்**
**விலைமனு கேள்விக்கான அழைப்பு**
**சுத்திகரிப்பு பொருள்களிற்கான பெறுகைகள்**

பிராந்திய பெறுகைகள்குழு தகுதியான, தகைமைவாய்ந்தவர்களிடம் கீழ்வரும் பொருள்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | பெறுகை விவரம் | கேள்வி பத்திர பணம் | வங்கி உத்தரவாத முறி |
|---|---|---|---|
| RDHS/CLE-ME/2017-2018 | சுத்திகரிப்பு பொருள்களுக்கான வழங்கல் சேவை | 500.00 | 10,000.00 |

★ மேற்குறித்த பெறுகைக்கு மீளளிக்கமுடியாத கேள்வி பத்திர பணம் ரூபா 500/=ம், பாதுகாப்பு வைப்பு முறி ரூபா 10,000/=ம் ஆகும்.

1. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 222 6253 அல்லது 021 222 2278/4557. ext 20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேற்காட்டிய பெறுகைக்கு மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 06.04.2017 தொடக்கம் 25.04.2017 வரையான காலப்பகுதியில் 09.00மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைக்கேள்விகள் **26.04.2017 திகதி 10.00 மணிக்கு** முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்விநேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
4. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள்குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**

**மரண அறிவித்தல்**

**திருமதி பத்மாவதி அரியராசா**



யாழ்ப்பாணம்கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் வத்திராயன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியராசா பத்மாவதி 04.04.2017 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகளும் அரியராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற றெட்ணாவதி மற்றும் பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம் புஸ்பவதி மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை, இராசரத்தினம், செல்லாச்சி, பாக்கியம், கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவநேசன் (லண்டன்), செல்வநேசன் (நோர்வே), தவநேசன் (சுவிஸ்), ஐங்கரன் (நோர்வே), தயாளன் (சாருஜா உணவகம், மருதங்கேணி), செல்வரூபன்(ஜேர்மனி), சாந்தசொரூபன்(பிரான்ஸ்), யசோதா(மீசாலை), சுயாத்தா (உடுத்துறை), பிரதீபா (பிரான்ஸ்), பிரதீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெனிக்காமெலானி, இராஜேஸ்வரி, இந்திரவதனா, ஜெயப்பிரதா, றொக்ஸினி, கமலினி, சிவறூபி, உதயகுணசிங்கம், தங்கநிதி (சந்தணம்), பிரபாகரன், உசேனிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அனுஷன், அனுஷா, அனுபா, அதிரன், தனுஷன், விதுஷன், கௌஷிகன், சுவிகா, லக்ஷிகா, சரீனா, மேனகன், தனோஜா, ஷாருஜா, விபூசனா, திஷாளினி, அபிஷேக், ஷகித், ஷயித், டஸ்மிகா, அஸ்வின், ஆதுஷன், பிரியங்கா, வனோஜன், யனுஷன், காவிஜா, தரணிதன், கஸ்வின், அபினாஷ், தம்ஷிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2017) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதங்கேணி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வத்திராஜன் தெற்கு,**
**தாளையடி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**வீடு வாடகைக்கு**

A9 வீதி கிளிநொச்சி நகரில்
வீடு வாடகைக்கு உண்டு.

077 698 5317

**தேவை**

உழவு இயந்திரமொன்றிற்கு பொருத்திப் பாவிக்கக்கூடிய தண்ணீர்த்தாங்கி (பவுசர்) 4000L மற்றும் TATA 1210க்கு பொருத்தக்கூடிய பவுஸ் ஸ்ரேரிங் வொக்ஸ் தேவை.

077 116 5968

# ஜி.சீ.ஈ.சாதரணதரப் பரீட்சை 2016 பெறுபேறுகள்

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மேலும் சில மாணவர்களின் விவரம்

**யா/புற்றளை மகாவித்தியாலயம்**

ஆர்.ஜதுர்சன்7ஏ2பி, எஸ்.டிசாந்தன் 6ஏ3பி, ஐ.ருக்சியா 6ஏ3பி, ஆர் தாரணி 6ஏ3பி, எஸ்.தர்சனா 2ஏ4பி2சிஎஸ், என்.ஸ்ரீவிசாகசர்மா ஏ4பி2சி2எஸ், வி.அஜிதா ஏ2பி3சி2எஸ், எஸ்.குயினன் ஏபி5சிஎஸ், ஜே.கொன்சிகா ஏபி5சிஎஸ், கே.மிதுலா ஏபி3சி3எஸ், ஜே.கஜீந்தன் ஏ3சி4எஸ், எம்.மாதூரன் ஏ3சி3எஸ், என்.நகுலன் 2பி3சி4எஸ், கே.கோகிலதாசன் 2பி3சி3எஸ், து.கவீனன்பி4சி4எஸ், எஸ்.விதுர்சனன்பி2சி4எஸ், எம்.ஜசோதன்பி2சி4எஸ், ஆர்.சாருஜன்2சி6எஸ், ஆர்.கணேஸ் 2சி6எஸ்

*****************************************************

**வரணி மத்திய கல்லூரி**

கு.கார்த்திகா 8ஏபி, சி.சாருகா 6ஏ3பி, அ.அஜினா5ஏ3பிசி, சி.சிந்துயன்4ஏ2பிசி2எஸ், ர.சாதனா3ஏ4சி2எஸ், பா.கார்த்திகா3ஏ4பிசிஎஸ், ந.பாலகுமாரன்2ஏ5பிசி, க.நிருவதன்2ஏ4பிசிஎஸ், த.சதுர்சன்2ஏ3பி2சிஎஸ், ப.கோபிகா 2ஏ2பி2சி2எஸ், ப.நசாங்கன்2ஏ2பி4சிஎஸ், நா.நிதர்சன்2ஏ3பி2சிஎஸ், வை.திவாகரன் 2ஏபி4சிஎஸ், ப.நிந்தாஜினி 2ஏ4சி2எஸ், அ.சுகன்யா 2ஏபி5சி, க.டிலானி 2ஏபி2சி2எஸ்

*****************************************************

**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

ந.கீர்த்திகா 6ஏ2பிசி, இ.சில்வியா 5ஏ3பிசி,அ.நேருஜா 5ஏ3பிசி, கு.நிஸ்மியா5ஏபி2சிஎஸ்,பொ.வாசுகி 5ஏ2பிசிஎஸ்,ப.வைஸ்ணவி 5ஏ3சிஎஸ், தே.தர்சி 4ஏபி3சி,வி.பானுஜா 4ஏபி3சிஎஸ், சூ.தனுசா 2ஏ2பிசி3எஸ், ம.கீர்த்தனா 2ஏ2பிசி4எஸ், ம.சங்கீர்த்தனா 2ஏ2பி2சி2எஸ், சி.சாம்பவி 2ஏ5பிசிஎஸ்,ஜீ.கியானி 3ஏபி5சி, மு.சரணியா ஏ2பி3சி2எஸ், ப.ஆருஷா ஏபிசி5எஸ், பி.மதுவதனி ஏ5சி2எஸ், கி.சாளின் 2ஏ2பி3சி2எஸ், ச.துஸ்யந்தினி 2ஏபி3சிஎஸ், பா.தேனுஜா ஏ2பி3சி2எஸ்

# மரண அறிவித்தல்கள்



## திருமதி சிவமணி (சந்தணம்) கந்தசாமி

வடமராட்சி அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வதிவிடமாக வும் கொண்ட திருமதி சிவமணி (சந்தணம்) கந்தசாமி 03.04.2017 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (இராசதுரை) அவர்களின் அன்பு மனை வியும், காலஞ்சென்ற வர்களான இரத்தினம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சின்னப்பொடி - கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காந்தமலரின் அன்புச் சகோதரியும், மணிவாசகன் (அல்வாய்), மணிவண்ணன் (லண்டன்), இராதமணி (அரியாலை), வரலக்ஸ்மி (முன்பள்ளி ஆசிரியை - தென்னிந்திய திருச்சபை - சாலோம் நகர் புதுமுறிப்பு), மணிமாறன் (ஜேர்மனி), கீதாமணி (முகாமைத்துவ உதவியாளர் வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயும், கௌரி, வளர்மதி, காலஞ்சென்ற அரசகேசரி (முன்னாள் பிரதம எழுது வினைஞரும் மேலதிக மாவட்டக் காணிப்பதிவாளரும் மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி), தயாபரன் (தனியார் பேருந்து உரிமையாளர் - கிளிநொச்சி), ஜெகதீஸ்வரி, உமாசங்கர் (அதிபர் - கிளி/ ஊற்றுப்புலம் -அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான தங்கத்துரை, அருளானந்தம், புனிதவதி, தர்மவதி மற்றும் தர்மநாதன் (கிளிநொச்சி), கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கௌதமி,கௌதினி,கௌதசி, மதுசூதனன், மயூரி, மதுரா, மதுசிகன், புருஷோத்தமன், மதிவர்மன், காலஞ் சென்ற மதிவதனி, சுகிர்தன், கோபிராகவன், கோகுலராகன், கோசலரூபினி, ஆதவன், மாதுரி, மாதவன், ஆர்த்திகா, ஆருஜன், ஜெனித்தக்ஷயன், ஜெஸ்னோலக்சயன், சாருசன், சௌமியா, சச்சின், சாங்கீத், சுஞ்சிகா ஆகியோரின் பேர்த்தியும், பிருதுவி, தருண், விகாஸ், மிகாஸ்,அனிஸ், ஆஜித், ஆருதி, டினுஜன், பிரவஸ்தி, சமீரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் இல. 159/3, நொத்தாரிஸ் வீதி, அரியாலையிலுள்ள அரசகேசரி இராதாமணி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப் பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**159 / 3 நொத்தாரிஸ் வீதி,**
**அரியாலை மேற்கு,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

077 087 3431 / 077 770 7343

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை விஜயரட்ணம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, கல்லுவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை விஜயரட்ணம் 03.04.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அழகம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற யோகம்மாவின் கணவரும், சாந்தகுமாரி (கிச்சி), விஜயகுமாரி (லேகா), காலஞ்சென்ற தேவகுமாரி (சரேகா) மற்றும் உருத்திரலிங்கம் (உருத்திரன்) ஆகி யோரின் தந்தையும், ஜெயமோகன் (குஞ்சன்), சிவசுப்ரமணியம் (றஞ்சித்), காலஞ்சென்ற சிவபாதம் (இன்பன்) மற்றும் பிரியா ஆகியோரின் மாமனும், நிலானி, ஆதவன், அபிஷா, டிலுஷா, சாம் பவி, சாரங்கன், பிரவீன், உஷானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக் கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்லுவத்தில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
**குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**

| | | |
|---|---|---|
| கிச்சி | (கனடா | - 0019 0549 31983) |
| லேகா | (சுவிஸ் | - 0041 6168 91661) |
| உருத்திரன் | (சுவிஸ் | - 0041 3266 55122) |

077 024 8088

## இராமுப்பிள்ளை இராசலிங்கம்



உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கு காளி கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை இராசலிங்கம் 03.04.2017 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப் பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் செல்வப்புதல்வனும், காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கிருஷ்ணவேணியின் அன்புக் கணவரும், சயந்திரனின்பாசமிகுதந்தையாரும், சவிதரன், தவப்பிரியா ஆகியோரின் பெரியப்பாவும், கர்ணனின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான வடிவேலு, இயேசு ரட்ணம், இராசதுரை மற்றும் தவத்துரை, பத்மலோசனி (வேவி) ஆகியோரின் மைத்துனரும் ஜெனி, ரதி, மாலா, ரமணி, ரமணன், தயாளன் ஆகியோரின் அன்பு மாமனும் மருதலிங்கம், நளினாசினி, சிவராணி ஆகியோரின் அன்பு சகோதரரும், புவனேஸ்வரியின் அன்பு ஐயாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளிற்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளி கோயிலடி,**
**சுன்னாகம் கிழக்கு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 18.03.2016 வெள்ளிக்கிழமை
இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர் கணேசலிங்கம் மீனாம்பிகை**

அவர்களின் முதலாமாண்டுத் திவசம்
இன்று (06.04.2017) வியாழக்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில் எமது
இல்லத்தில் நடைபெற உள்ளது.
அத்தருணம் தாங்களும் தங்கள்
குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**141/5, மங்கையர்க்கரசி**
**ஒழுங்கை, நல்லூர்.**

**குடும்பத்தினர்.**

# யோகர் சுவாமிகளின் குருவழிபாடு இன்று

யாழ்ப்பாணம், ஏப். 6

யோகர் சுவாமிகளின் 53ஆவது குருவழிபாட்டுத் தினம் இன்று வியாழக்கிழமை (பங்குனிமாத ஆயிலியம்) மு.ப.10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஓய்வுநிலை சுகாதாரப் பரிசோதகர் சிவநெறித் தொண்டர் பொ. சிவப்பிரகாசம் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ)

# டெங்கு நுளம்பு பெருகக்கூடிய ஏதுநிலையில் குடியிருப்புகளை வைத்திருந்தோருக்குத் தண்டம்

தென்மராட்சி, ஏப். 6

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய ஏதுநிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த 10 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்து சாவகச்சேரி நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.

தேசிய டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் கடந்த 29ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் வரை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் பிரதேசத்தில் உள்ள ஆறு பொது சுகாதார பரிசோதகர் பகுதிகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் பரிசோதனைகளின் போது மதில்களில் வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகள், பறவைகள் மற்றும் விலங்குகள் ஆகியவற்றுக்கு நீர் வைக்கப் பயன்படுத்திய நீர்த் தொட்டிகள் போன்றவற்றில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் காணப்பட்டன என்ற குற்றச்சாட்டில் 29 குடியிருப்பாளர்களுக்கு எதிராக பொலிஸாரும் பொது சுகாதார பரிசோதகர்களும் இணைந்து சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குகளைப் பதிவு செய்திருந்தனர்..

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட 5 வழக்குகளும் பொது சுகாதார பரிசோதகர்களால் வரணி, மந்துவில், மீசாலை மற்றும் சரசாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த 5 குடியிருப்பாளர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் மன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான், குடியிருப்பாளர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார்.

இதேவேளை, சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட 11 குடியிருப்பாளர்களுக்கு எதிரான வழக்குளை விசாரித்த நீதிமன்று, அவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தது. (வ-9)

## சிலுவைப் பவனி

சாவகச்சேரி, ஏப். 6

சாவகச்சேரி கத்தோலிக்க பங்கு மக்களின் புனித சிலுவைப் பாதை பவனி நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கையில் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும் பவனி ஏ - 9 சாலை, விநாசித்தம்பி சாலை, வைரவநாதர் ஒழுங்கை, கச்சாய் சாலை, தேவாலய சாலை, கடற்கரை நாகலிங்கம் சாலை போன்றவற்றினூடாக கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலயத்தை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சிகை ஒப்பனை நிலையங்களுக்கு கட்டுப்பாடு தளர்வு

யாழ்ப்பாணம், ஏப். 6

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சிகை ஒப்பனை நிலையங்களுக்கான நேரக்கட்டுப்பாடுகள் நாளைமறுதினம் சனிக்கிழமை தொடக்கம் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தளர்த்தப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட சிகைஒப்பனையாளர் கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம் அறிவித்தது.

"எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிகை ஒப்பனை நிலையங்கள் திறந்திருக்கும். எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் நேரக்கட்டுப்பாடு வழமை போல் நடைமுறைப்படுத்தப்படும். அதன் பின்னர் நேரக் கட்டுப்பாட்டை மீறுவோர் மீது ஒன்றிய கண்காணிப்புக் குழு தகுந்த நடவடிக்கை எடுக்கும்" என்றும் ஒன்றியம் தெரிவித்தது. (வ)

# கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் 10 ஆம் திகதி முதல் பணிப் புறக்கணிப்பு

## தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.6

தொடருந்துக் கடவைக் காப்பாளர்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாவிட்டால் வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் காலவரையற்ற பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்படும்.

இவ்வாறு வடக்கு, கிழக்கு தொடருந்துக் கடவைக் காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் ஏஸ்.ஜே.ரொகான்ராஸ்குமார் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தொடருந்துக் கடவைக் காப்பாளர் ஒன்றியத்தின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு ஊறணி தொடருந்துக் கடவைக்கு அருகிலுள்ள தனியார் கல்வி நிறுவன மண்டபத்தில் ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சீ.ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே ஒன்றியத்தின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

கடந்த 4 வருடங்களாக வடகிழக்கில் ஆயிரத்து 230 பேர் தொடருந்துக் கடவைக் காப்பாளர்களாக நாள் ஒன்றுக்கு 250 ரூபா வீதம் மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளத்துக்கு அரச, தனியார், தற்காலிக ஊழியர்கள் போன்ற எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி பணியாற்றுகின்றனர். அடிப்படைத் தொழிற் சட்டத்துக்கு முரணான விதத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டு நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலம் கடமை செய்கின்றோம்.

தொடர்ந்து 180 நாள்கள் பணியாற்றினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். இதுவரை எமக்கு நிரந்தர நியமனமோ அல்லது தற்காலிக கடமையாளர்களோ என்று எந்தவிதமான எழுத்துமூலமான கடிதங்கள் கூட வழங்கப்படவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம தென்னிலங்கையைச் சேர்ந்த ஆயிரம் பேரை புதிதாக தொடருந்து திணைக்கள ஊழியர்களாக நியமித்தார். அதையடுத்து போக்குவரத்து அமைச்சர் பொலிஸ்மா அதிபர் தொடருந்து திணைக்களப் பொது முகாமையாளர் போன்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து எமக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தோம். அதற்கு எந்த விதமான தீர்வும் வழங்கப்படவில்லை. மதவாச்சியில் பிரதான தொடருந்து நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினோம். வடமத்திய மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர், விவசாய அமைச்சர் தலையிட்டு நடவடிக்கை எடுப்பதாக எழுத்து மூலம் கடிதம் வழங்கினர். பின்னர் அரசின் 24 திணைக்கள அதிகாரிகள், பொலிஸ்மா அதிபர், தொடருந்து திணைக்கள பொது முகாமையாளர், சிவில் பாதுகாப்பு பொறுப்பதிகாரி உட்பட பல அதிகாரிகள் எங்களை அழைத்து அவமானப்படுத்தி அச்சுறுத்தி அனுப்பினர்.

1985ஆம் ஆண்டில் இருந்து இதுவரை தொடருந்து வீதிக்கடவை காப்பாளர்களுக்கான வெற்றிடம் சரியாக நியமிக்கப்படவில்லை. இந்த நிலையில் ஆயிரத்து 200 பேரைப் புதிதாக தொடருந்து திணைக்கள ஊழியர்களாக நியமிப்பதற்கு பட்டியல் இடப்பட்டுள்ளது. இவர்களில் வடகிழக்கை சேர்ந்தவர்கள் எவரும் இல்லை அதேவேளை எங்களைக் கூட உள்வாங்கவில்லை.

எமது அடிப்படைக் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றவேண்டும் இல்லாவிடில் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம். பணிப்புறக்கணிப்பு வேளையில் தொடருந்து பாதை கடவையால் பிரயாணிக்கும் பொதுமக்கள் கவனமாகவும் பாதுகாப்பாகவும் பயணிக்க வேண்டும். என்றார். (ற-21)

### சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோரல்

பிரதேச வைத்தியசாலை இளவாலை சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோரப்படுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் 10.04.2017 இற்கு முன்னர் கேள்வியை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கத் தலைவரிடம் சமர்ப்பிக்கவும். விவரங்களை வைத்தியசாலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

### வேலைவாய்ப்பு

பிரபல கையடக்கத்தொலைபேசி வலையமைப்பான எடிசலாட் நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிற்கு விற்பனைப்பிரதிநிதிகள் தேவை. அடிப்படை ஊதியம் உள்ளடங்களாக ரூபா 50,000 இற்கு மேல் மாதாந்த ஊதியமாக பெற்றுக்கொள்ளமுடியும்.

Viji- 072 102 6261 (யாழ்ப்பாணம்)
Now Shath- 072 229 8459 (வவுனியா)

### கூறுவிலை

எமது சங்கத்தின் பால் பொருள்கள் உற்பத்திப்பகுதிக்கு கண்காணிப்புக் கமரா (CCTV) பொருத்துவதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. எனவே கூறுவிலை சமர்ப்பிப்பவர்கள் சங்கத்திற்கு வருகை தந்து பார்வையிட்டு உரிய படிவங்களைப் பெற்று தங்களது மூடிய கூறுவிலையை 29.04.2017 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

**பொதுமுகாமையாளர்**
**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**
**தொலைபேசி இலக்கம்: 021 321 2926**

### நெஞ்சை விட்டகலா மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
03 . 08 . 1967



இறைவன் பாதங்களில்
11 . 04 . 2014

**திருமதி ஜெயவதனி ஞானேந்திரன்**
(பபி)

திதி: 06.04.2017 (பூர்வபக்க ஏகாதசி)

ஆண்டுகள் மூன்று கடந்திட்டாலும்
ஆறுதில்லையே எம் துயரம்!
தூரதேசமதில் நீயிருந்த வேளையதில்
சடுதியென நோய்வந்துன்
உயிர் பிரித்த செய்தி கேட்டு
இடிவிழுந்தாற் போலானோம்
நெஞ்சை விட்டகலா உன் நினைவுடன்
அனுதினமும் உனக்காய்த் தொழுகின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா
சாந்தி பெற அருளிடுக ஆண்டவரே!

கிளானை,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை

என்றும் உமது நினைவுகளுடன் வாழும்
அன்புக் கணவர், பிள்ளைகள்,
அம்மா, தம்பி மற்றும்
உறவினர்கள்.

# கடந்தாண்டு இஞ்சிச் செய்கை யாழ். மாவட்டத்தில் வெற்றி

## யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஏப்.6

யாழ்.மாவட்டத்தில் இஞ்சிச்செய்கை எதிர்பார்த்தளவுக்கு வெற்றி அளித்துள்ளது. நல்ல விளைச்சல் கிடைத்திருப்பதோடு பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் கணிசமான அளவு வருமானத்தையும் பெற்றுள்ளனர்.

இவ்வாறு யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்களப்பணிப்பாளர் ஏ.செல்வராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் மானிய உதவித்திட்டத்தின் கீழ் 63 விவசாயிகள் இஞ்சிச்செய்கையில் ஈடுபட்டனர். ஒவ்வொருவருக்கும் தலா 50 கிலோ நடுகைக்கான இஞ்சி வழங்கப்பட்டது. தலா இரண்டு பரப்பு நிலத்தில் நடுகை செய்தனர். மானிய உதவியுடன் இஞ்சிப் பயிர்ச் செய்கை புத்தூர், உரும்பிராய், உடுவில், தெல்லிப்பழை உள்ளிட்ட பல்வேறு பெரும்பாக கமநலசேவை நிலையப்பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டது. 63 விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். ஒவ்வொருவருக்கும் நடுகைக்காக 50 கிலோ இஞ்சி வழங்கப்பட்டது. விவசாயத்திணைக்களம் தொழில்நுட்ப ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கியது.

இஞ்சிச்செய்கைக்கான உத்தேசசெலவினம் 40 ஆயிரம் ரூபா வரையில் இருக்கும். அறுவடை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் நான்கு லட்சம் ரூபா வரையில் இருக்கும் என திணைக்கள மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. விவசாயிகள் இந்த வருடத்துக்கான நடுகைக்கான விதை இஞ்சியையும் களஞ்சியப்படுத்தியுள்ளனர். இஞ்சி ஒன்பது மாதப் பயிர். கடந்த ஏப்ரல், மே மாதங்களில் நடுகை செய்யப்பட்டது. இந்தவருடம் அறுவடைக் காலத்தில் இஞ்சியின் விலை அதிகரித்த நிலையில் இருந்ததால் கூடிய வருமானத்தைப் பெறக்கூடியதாக இருந்தது.

விவசாயிகள் இஞ்சிச்செய்கையை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இரண்டு பரப்புக்கு மேற்படாத நிலத்தில் மேற்கொள்வது சந்தைப்படுத்துவதற்கு வசதியாக இருப்பதோடு வருமான இழப்பையும் கட்டுப்பாட்டில் பேணிக் கொள்ள முடியும் - என்றார். (ற-11)




நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அதற்கான கொடிச்சீலை சம்பிரதாய பூர்வமாக கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன் ஆலயத்தில் இருந்து நேற்று மாலை அடியவர்களால் எடுத்துவரப்படும் காட்சி. (வ)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் **நடராசா இரத்தினம்**
**(பிளான் அப்பா)**

திதி: 07.04.2017

பருத்தித்துறை காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஊறணி ஆஸ்பத்திரிவீதியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட அமரர் நடராசா இரத்தினம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும். எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்ளவதுடன் நாளை (07.04.2017) வெள்ளிக் கிழமை காலை 6.00 மணிக்கு ஊறணி அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.



தோற்றம்
30.04.1932

மறைவு
08.03.2017

**ஊறணி,**
**வல்வெட்டித்துறை**

**குடும்பத்தினர்.**
**077 127 6219**

# அச்சுத்தாளின் மை பதிந்த பிஸ்கட் குழாயில் ஐஸ்கிறீம் விற்றவருக்குத் தண்டம்

தென்மராட்சி, ஏப்.6

அச்சுத்தாளின் கலர் மை பதிந்த பிஸ்கட் குழாயில் (கோன்) ஐஸ்கிறீம் வழங்கிய வியாபாரிக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று 9 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நடைபெற்ற ஆலயமொன்றில் ஐஸ்கிறீம் வகைகள் விற்பனை செய்த வாகனத்தில் வழங்கப்பட்ட பிஸ்கட் குழாயில் அச்சுத் தாளின் கலர் மை பதிந்த நிலையில் ஐஸ்கிறீம் வழங்கப்பட்டது. அங்குகடமையில் இருந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அதனைக் கைப்பற்றினார். உணவு மாசடையும் வகையில் அச்சிடப்பட்ட தாளின் மை பதிந்த பிஸ்கட் குழாயில் ஐஸ்கிறீம் விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் அதனை விற்பனை செய்த நபருக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு மன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான், வியாபாரிக்கு 9 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டார். (வ-9)

# வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞன் வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஏப். 6

காலில் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் 22 வயது இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி அல்லாரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது என்று விசாரணையில் அவரால் தெரிவிக்கப்பட்டது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று காயமடைந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலை அண்டிய பகுதியில் சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கதைத்துக் கொண்டிருந்த மூவர் மீது கும்பல் ஒன்றால் வாள்வெட்டு நடத்தப்பட்டது. படுகாயமடைந்தவர்களில் இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-9)

# பொது இடத்தில் சிகரட் புகைத்தவருக்குத் தண்டம்

## சமூகப் பணிக்கும் நீதிமன்று உத்தரவு

சாவகச்சேரி, ஏப். 6

பொது மக்கள் கூடும் இடத்தில் சிகரட் புகைத்த நபருக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதித்த சாவகச்சேரி நீதிவான் மன்று, அவரை 80 மணி நேர சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறும் உத்தரவிட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் சாவகச்சேரி பொதுச் சந்தையில் பொதுமக்கள் கூடும் இடத்தில் சிகரட் புகைத்த நபருக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு மன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதிவான், அந்த நபரை எச்சரிக்கை செய்தார். அத்துடன் குறித்த குற்றத்துக்காக அவருக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான், அவரை 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவுக்கு உத்தரவிட்டார். (வ-9)



# முள்ளிக்குளம் மக்கள் போராட்டம் 14 நாள்கள் கடந்தும் தொடர்கின்றது

## கடற்படை கையகப்படுத்திய காணிகளை விடுவிக்கும்வரை தொடரும் என உறுதி

மன்னார், ஏப்.6

கடற்படையினர் கையகப்படுத்தியுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் முள்ளிக்குளம் கிராம மக்கள் நடத்திவரும் தொடர் போராட்டம் நேற்று 14ஆவது நாளாகத் தொடர்ந்தது.

மன்னார், முள்ளிக்குளம் கிராமத்தில் மக்களின் காணிகளைக் கையகப்படுத்திக் கடற்படையினர் முகாம் அமைத்துள்ளனர். அந்தக் காணிகளை விடுவித்து கடற்படையினர் வெளியேற வேண்டும் என்று காணிகளுக்கு உரித்துடைய மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். அது நிறைவேறாத நிலையில் அவர்கள் கடந்த 23ஆம் திகதி முதல் தொடர் அறவழிப் போராட்டத்தை நடத்துகின்றனர். கடற்படையினரின் முகாம் முன்பாகக் கூடாரம் அமைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். மக்களின் போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் போராட்ட களத்துக்குச் சென்று மக்களைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவிக்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் முள்ளிக்குளம் சென்று மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். தங்களின் நிலங்கள் விடுவிக்கப்படும்வரை போராட்டத்தைக் கைவிடப் படடப்போவதில்லை என்று முள்ளிக்குளம் கிராம மக்கள் தெரிவித்தனர்.


முள்ளிக்குளம்


மறிச்சுக்கட்டி

அதேவேளை, முசலிப் பிரதேசத்தில் மக்களின் வாழ்விடங்களைக் கையகப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக் கோரி மறிச்சுக்கட்டிப் பள்ளி வாசலுக்கு முன்பாக முஸ்லிம் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அந்தப் போராட்டம் நேற்று 9ஆவது நாளாகத் தொடர்ந்தது. தங்கள் பூர்வீகக் குடியிருப்பு நிலங்களும், விவசாயக் காணிகளும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வன எல்லைப் பகுதியாக அறிவிக்கப் பட்டுள்ளது. அந்த வர்த்தமானி அறிவித்தலை அரச தலைவர் உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ற-56)



# சட்டவிரோதமாக கடத்தப்பட்ட முதிரை மரப் பலகைகள் மீட்பு

வவுனியா, ஏப்.6

சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி முதிரை மரப் பலகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் கூறினர்.

பட்டா ரக வாகனம் ஒன்றில் முதிரைப் பலகைகள் கடத்தப்படுகின்றன என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுபாஸ் ஆரிய ரத்ன தலைமையில் நிர்பான், கரன், பாரதிராஜா, வித்தான, நவின், அவதிசங்க, குணரத்ன, முரிஸ் ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழு சோதனையில் ஈடுபட்டது. அதில் மரப் பலகைகள் கடத்திய வாகனம் சிக்கியது. கைப்பற்றப்பட்ட மரப் பலகைகளின் பெறுமதி சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா என்று கூறப்படுகின்றது.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற21)

# 600 மாணவரை ஒன்றிணைத்து சித்திரப் போட்டி

வவுனியா, ஏப்.6

வன்னிப் பிராந்தியத்திலுள்ள பாடசாலைகளின் 600 மாணவர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் சித்திரப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

கண்டி வீதியிலுள்ள பிரதான பொலிஸ் நிலையக் கட்டடத்தில் காலை 8.30 மணியளவில் வன்னிப் பிராந்திய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் போட்டி ஆரம்பமாகும்.

இனங்களிடையே ஒன்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் ஊடாக 'நாட்டின் அபிவிருத்தி' என்னும் தொனிப்பொருளில் தரம் 7, 8, 9, 10 மாணவர்களை ஒன்றிணைத்து இந்தச் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. அதற்கான ஏற்பாடுகள் வன்னிப் பிராந்திய பொலிஸ் மா அதிபர் மேற்கொண்டிருந்தார். நிகழ்வு வவுனியா மாவட்ட செயலர் எம்.பி. றோகண புஸ்பகுமார, வவுனியா கல்வித் திணைக்கள பூரண அனுசரணையுடன் ஆசிரியர்கள், தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

## உடையாளர்கட்டுக் குளத்தின் கீழ் 560 ஏக்கரில் சிறுபோகச் செய்கை

முல்லைத்தீவு, ஏப்.6

முல்லைத்தீவு, உடையார்கட்டுக் குளத்தின் கீழ் இந்த ஆண்டு 560 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று உடையார்கட்டு கமநல சேவை நிலையப் பொறுப்பதிகாரி ந.சுந்தரமூர்த்தி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் போதியளவு மழைவீழ்ச்சி இன்மையால் குளங்களின் நீர்மட்டம் குறைந்துள்ளது. தற்போது உடையார்கட்டுக் குளத்தில் 14 அடிக்கும் குறைவான நீரே உள்ளது. கடந்த காலங்களில் 17 அடிக்கும் அதிகமாக நீர்மட்டம் இருந்தபோது ஆயிரத்து 200 ஏக்கரில் சிறுபோகம் செய்யப்பட்டது. இந்த ஆண்டு நீரின் அளவைக் கருத்தில் கொண்டு 560 ஏக்கரில் சிறுபோகம் செய்யப்படவுள்ளது. 160 குடும்பங்களுக்குத் தண்ணீர் பங்கீட்டின் அடிப்படையில் நெற்செய்கைக்கான நீர் வழங்கப்படவுள்ளது- என்றார். (ற-7)

# மீன்பிடி அமைச்சரின் உத்தரவை அசட்டை செய்யும் திணைக்களம்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஏப்.6

முல்லைத்தீவு, நாயாறு களப்பில் சட்டவிரோதமாக 23 படகுகள் தொழில் செய்கின்றன. அவற்றின் அனுமதிகளை உடனடியாக நிறுத்துமாறு பணிப்பாளர் நாயகம் எழுத்து மூலம் அறிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மாவட்ட நிர்வாகங்களுக்குத் தெரியாது நாயாறு களப்பில் தொழில் செய்ய தென்னிலங்கை மீனவர்கள் 23 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்த விடயம் மீன்பிடி அமைச்சரின் கவனத்திற் கொண்டு செல்லப்பட்டது. அவரின் அறிவுறுத்தலுக்கு அமைய அனுமதிகளை இரத்துச் செய்யுமாறு பணிப்பாளர் நாயகம் பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் உத்தரவிட்டார்.

கடந்த 10 நாள்களாக அந்த 23 படகுகளும் அந்தப் பகுதியில் தொழில் செய்கின்றன. அமைச்சர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவை மாவட்டத் திணைக்களம் உடன் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் திணைக்களம் இனஅடிப்படையில் செயற்படுகின்றது அப்பட்டமாக வெளித் தெரிகின்றது.

இந்த விடயம் தொடர்பாக நாம் மீண்டும் அமைச்சரை நாடவேண்டிய நிலை ஏற்படும்- என்றார். (ற-101)

# நந்திக் கடலில் கூட்டு வலை பயன்படுத்துவதற்குத் தடை

## மீறினால் சட்ட நடவடிக்கை எனவும் எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.6

முல்லைத்தீவு, நந்திக் கடலில் தடை செய்யப்பட்ட கூட்டு வலைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட முடியாது. மீறித் தொழில் செய்யும் மீனவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.


கோப்புப் படம்

"நந்திக் கடலில் இலாபத்தை மட்டும் நோக்காகக் கொண்டு தடை செய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடைபெறுகின்றது. எமது வளங்களை நாமே அழிக்கக் கூடாது. இந்த நிலைமை தொடர்ந்தால் எதிர்காலத்தில் யாரும் தொழில் செய்ய முடியாத நிலைமை ஏற்படும். எமது வளத்தைப் பாதுகாக்க அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று பிரதேச மீனவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்த விடயத்தில் நாம் கூடுதல் கவனம் எடுத்துக் கண்காணித்து வருகின்றோம். கடந்த ஆண்டு நூற்றுக்கணக்கான கூட்டு வலைகள் கைப்பற்றப்பட்டு எரியூட்டப்பட்டன. கூட்டு வலைகள் உபயோகித்த 70க்கும் மேற்பட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த நடவடிக்கை தொடரும்." என்று அவர் குறிப்பிட்டார். (ற-7)

### 45 நாள் கடந்தும் தீர்வில்லை

# நிர்வாகக் கட்டமைப்பை முடக்கி இனி போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தீர்மானம்





கிளிநொச்சி, ஏப்.6

கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடத்திவரும் தொடர் போராட்டம் 45 நாள்களை எட்டியுள்ள நிலையில் தமது போராட்ட வடிவத்தை மாற்றுவதற்கு அவர்கள் தீர்மானித்துள்ளனர். மாவட்ட மட்டத்தில் அரச நிர்வாகக் கட்டமைப்புகளை முடக்கி போராட்டம் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுதலையையும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் வடக்கின் 4 மாவட்டங்களிலும், கிழக்கில் ஒரு மாவட்டத்திலும் தொடர் போராட்டங்களை நடத்துகின்றனர். வடக்கில் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும், கிழக்கில் திருகோணமலையிலும் போராட்டம் நடத்தப்படுகின்றது.

கிளிநொச்சியில் 45 ஆவது நாளாகவும், வவுனியாவில் 41 ஆவது நாளாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 29 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணத்தில் 22 ஆவது நாளாகவும், திருகோணமலையில் 32 ஆவது நாளாகவும் போராட்டங்கள் தொடர்கின்றன.

"45 நாள்களாக பெரும் இடருக்கு மத்தியில் போராட்டம் நடத்துகின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் தீர்க்கமான முடிவை எதிர்பார்த்தே போராட்டம் நடத்துகின்றோம்.

இதுவரை எந்தவிதமான தீர்வும் கிட்டவில்லை. எமது போராட்ட வடிவத்தை எதிர்வரும் நாள்களில் மாற்றவுள்ளோம். மாவட்ட மட்ட அரச நிர்வாகக் கட்டமைப்பை முடக்கிப் போராடுவதற்குத் தீர்மானித்துள்ளோம்." என்று கிளிநொச்சியில் போராட்டம் நடத்தி வரும் மக்கள் தெரிவித்தனர். (ற-21-7-35-26)

## நஞ்சுப் போத்தலுடன் மூதாட்டி போராட்டம்

வவுனியா, ஏப்.6

தனது சொந்தக் காணி தனி நபர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது என்று கூறும் மூதாட்டி ஒருவர் தனது காணியை மீட்டுத் தர வேண்டும் என்று கூறி நஞ்சுப் போத்தலை ஏந்தியவாறு குடும்பத்தினருடன் இணைந்து போராட்டம் நடத்தினார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வவுனியாவில் நடந்தது.

தோணிக்கல், சேக்கிழார் வீதியில் 1978 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து வசிக்கின்றேன். போரால் இடம்பெயர்ந்து 1991 ஆம் ஆண்டு இந்தியா சென்றேன். எங்கள் காணியில் உள்ள வீட்டில் கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த குடும்பத்தினர் தங்கியிருந்தனர். அவர்களால் எங்கள் காணியில் பிறிதொரு வீடும் கட்டப்பட்டுள்ளது.

அந்தக் குடும்பத்தினர் இப்போது கிளிநொச்சியில் வசிக்கின்றனர். அவர்களது உறவினர் என்று கூறி ஒரு குடும்பத்தை எமது காணியில் குடியமர்த்தியுள்ளனர்.



நானும், எனது குடும்பத்தினரும் கடந்த 23 ஆம் திகதி இந்தியாவில் இருந்து இங்கு வந்தோம். காணியில் இருப்பவர்கள் அங்கிருந்து வெளியேற மறுக்கின்றனர். இது தொடர்பாக வவுனியா மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம் என அனைத்து இடங்களுக்கும் சென்றேன். நீதி கிடைக்கவில்லை.

மிகவும் கஸ்டத்தின் மத்தியில் இந்தியாவில் வாழ்ந்தோம். இங்கு வந்து எமது வீட்டில் நிம்மதியாக வாழலாம் என்று நினைத்தேன். இனியும் கஸ்டப்பட்டு வாழ முடியாது. இந்த இடத்திலேயே நஞ்சு குடித்துச் சாகப் போகின்றேன்." என்று அந்த மூதாட்டி கூறினார்.

இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை மூதாட்டி போராட்டம் நடத்தினார். அந்தக் காணிக்கு அயலிலுள்ளவர்களும் மூதாட்டியே அந்தக் காணியில் முன்னர் வாழ்ந்தார் என்று கூறினார்கள். அருகிலுள்ள காணிகளின் ஆவணங்களின் எல்லைகள் தொடர்பான விடயத்தில் மூதாட்டியின் பெயர் பதியப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் தமிழ் மொழி முறைப்பாட்டுப் பிரிவில் முறையிடப்பட்டுள்ளது.

போராட்டம் நடத்திய இடத்துக்கு வந்த பொலிஸார் மூதாட்டியிடம் இருந்து நஞ்சுப் போத்தலை வாங்கிக் கொண்டனர். வவுனியா பிரதேச செயலாளர், மாவட்ட செயலர் ஆகியோருடன் பேசித் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று கூறினார்கள். அதையடுத்துப் போராட்டம் நிறுத்தப்பட்டது. (ற - 21)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னப்பு வேலுப்பிள்ளை

திதி: தசமி (06.04.2017)

அன்னை மடியில் 07.02.1947

ஆண்டவன் அடியில் 13.04.2015

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்தீரே
பாசத்தை ஊட்டி எம்மை சுவாசிக்க வைத்தீரே
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உம்மைப்போல் ஓர் உறவு ஜென்மத்தில் ஏது?
இரு ஆண்டுகளல்ல இருநூறு ஆண்டுகள் சென்றாலும்
எம்முடன் இருப்பீர் உயிராக
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

கைதடி தெற்கு,
கைதடி.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
அன்பு மனைவி,
மகன், மருமகள்,
மற்றும் உறவினர்கள்.

## சொர்க்கமா? நரகமா? வாழ்வாலே தீர்மானிப்போம்

மோட்சம், நரகம் இரண்டையும் விளக்குங்கள்" என்று ஒரு வழிப்போக்கர் ஒரு குருவிடம் கேட்டார். "முட்டாளான உனக்குப் பதில் கூறவேண்டிய அவசியம் எனக்கு இல்லை" என்ற குருவை நோக்கி கோபத்தில் வழிப்போக்கர் தனது கத்தியை உயர்த்தினார். உடனே "இதுதான் நரகம்" என்றார் குரு. இதைக் கேட்ட வழிப்போக்கன் உண்மையை உணர்ந்தவராய் அமைதியான போது "இதுதான் மோட்சம்" என்றார். வழிப்போக்கனின் தன்னுணர்வு நிலையும், திறந்த மனச் செயற்பாடும் விடுதலை அளித்தது.

இன்று நாம் புறத்தளவில் சுதந்திரமாக வாழ்ந்தாலும் பல தருணங்களில் அக விடுதலையின்றி அடிமைகளாகத் தவிக்கின்றோம். உண்மையைக் கண்டு விழிப்புணர்வு நிலையில் வாழ்வதே ஆண்டவர் வழங்கும் விடுதலையை நோக்கி எம்மை வழிநடத்தும். அந்த விடு தலையைச் சுவைப்பது அவர்காட்டிய மன்னிப்பு. அன்பு, பகிர்வு, நீதி, சமத்துவம் போன்ற விழுமியங்களை வாழ்வாக்குவதில் தங்கியுள்ளது.




கிறிஸ்தவர்கள் என்று மார் தட்டும் நாம் யாரையும் அடிமைப்படுத்தாது எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் என்ற உணர்வோடு புற அக விடுதலை வாழ்வு வாழ முடியுமா? வார்த்தைகளால் அல்ல வாழ்வால் விடையளிப்போம்.

*எஸ்.யேசுதாஸ்*

## நுளம்புக்கு ஏதுவான சூழல்: 8 பேருக்கு எதிராக வழக்கு

முல்லைத்தீவு, ஏப்.6

ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் வகையில் சூழலை வைத்திருந்த 8 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பணிமனையினர் தெரிவித்தனர்.

டெங்குத் தொற்று அதிகரித்துள்ளதை அடுத்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதாரப் பணிமனையால் கடந்த வெள்ளிக்கிழமை ஒட்டுசுட்டானில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்போது இரண்டு பேருக்கு எதிராக நீதிமன்ற சட்ட நடவடிக்கையும். ஐந்து பேருக்கு எதிராக எச்சரிக்கை அறிவித்தலும் விடப்பட்டது. திங்கட்கிழமை மாங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் மூன்று பேருக்கு எதிராக நீதிமன்ற சட்ட நடவடிக்கையும், 12 பேருக்கு எச்சரிக்கை அறிவித்தலும் விடுக்கப்பட்டது. நேற்று முன்தினம் முத்துஐயன்கட்டு பகுதியில் மேற்கொளபட்ட நடவடிக்கையில் 3 பேருக்கு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதார பணிமணைக்கு உட்பட்ட பகுதியில் இந்த வருடத்தின் முதல் கால் ஆண்டில் ஆறு பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ற - 7)

## காணாமற்போனோர் அலுவலகம் திறப்பு ஒரு ஏமாற்று நாடகம்

### திருமலையில் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

திருமலை, ஏப்.06
காணாமல்போனோருக்கான அலுவலகம் கொழும்பில் திறக்கப்பட்டுள்ளபோதும் அதன் செயற்பாடுகள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய வகையில் சரியாக அமையவில்லை. இது ஒரு ஏமாற்று நாடகமாக உள்ளது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.



காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு கோரித் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு உறவினர்கள் ஒரு மாதத்துக்கும் மேலாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நேற்றுமுன்தினம் மாலை அங்கு சென்ற மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
போர் இடம்பெற்ற காலத்திலும் போர் முடிவடைந்த பின்னரும் இதுவரை 30 ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அரசுக்கு ஜெனிவாவில் இரண்டு வருடகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனை மீண்டும் நீடிக்கு மாறும் அரசு கோரலாம்.
எனவே இது தொடர்பாகப் பன்னாட்டுஅழுத்தங்களை அதிகரிக்கும் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்-என்றார். (த-ய-40-45)

## புத்தாண்டு காலத்தில் திருடர்கள் கைவரிசை

*அவதானமாக இருக்குமாறு மக்களிடம் வேண்டுகோள்*

கொழும்பு, ஏப். 6
தமிழ், சிங்களப் புத்தாண்டு காலப் பகுதியில் நகர் பகுதிகளுக்கு பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்வோர் திருடர்கள், முடிச்சு மாறிகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.
குறிப்பாக கொழும்பு, கண்டி, காலி, ஹற்றன், நுவரெலியா போன்ற பிரதான நகரங்களில் சன நெருக்கடியான இடங்களில் இவ்வாறான திருடர்கள் இருக்கலாம் எனவும், இது தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் பொலிஸ் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.
முதன்மைநகர்ப்பகுதிகளில் பொலிஸார் சீருடையிலும் மற்றும் சிவில் உடையிலும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (த-4)

## சைட்டம் அதிகாரி மீது சூடு; புதிய விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 6
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியின் நிறைவேற்று அதிகாரியான மருத்துவர் சமீர சேனாரத்னவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் புதிதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் உத்தரவுக்கு அமைய குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, பணிப்பாளர் சுதத் நாகமுல்லா ஆகியோரின் மேற்பார்வையில் மூத்த பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகரவின் ஆலோசனைக்கு அமைவாகக் கூட்டுக் கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சுனில் சரணபாலவின் கீழ் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.
இந்த விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஊடாகச் சிறப்பு விசாரணைகளைச் செய்ய பொலிஸ்மா அதிபருக்குக் கடுவலை நீதிமன்றம் உத்தரவிட்டது.
இதன்படியே தற்போது புதிதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
இந்த விவகாரம் தொடர்பில் ஏற்கனவே சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் உள்ள நிலையில், அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கக் குற்றப் புல னாய்வுப் பிரிவினருக்கு நேற்றுமுன்தினம் கடுவலை நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.
இதனை விட இந்தச் சம்பவம் தொடர்பில் ஆரம்பத்தில் விசாரணை செய்த முல்லேரிய பொலிஸாரிடமும், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவு வாக்கு மூலம் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## சாவுத் தண்டனைக் கைதிகளுக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனை

### நாடாளுமன்றத்தில் பரிந்துரை

கொழும்பு, ஏப். 6
சாவுத் தண்டனைக் கைதிகளின் தண்டனையை ஆயுட்காலச் சிறையாக மாற்றியமைக்குமாறு நாடாளுமன்றில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு தொடர்பான அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோதே இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில், சாவுத் தண்டனை பெற்றுச் சிறைகளில் இருப்பவர்களின் தண்டனையை ஆயுள் சிறைத் தண்டனையாகக் குறைக்க முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
சிறைகளில் ஆயிரத்து 82 சாவுத் தண்டனைக் கைதிகள் உள்ளனர். அவர்களில் 726 பேர் அந்தத் தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது.
இதேவேளை, சிறைகளில் தற்போது குற்றவாளிகளாக அறிவிக்கப்படாத 9 ஆயிரத்து 552 பேர் உள்ளனர். அவர்கள் மொத்தக் கைதிகளில் 50 வீதத்துக்கும் அதிகம் என்றும் கூறப்பட்டுள்ளது. (த-4)

## அதிகூடிய வருமானம் கொண்டது ஜே.வி.பி.

### தேர்தல் செயலகம் தகவல்

கொழும்பு, ஏப். 6
நாட்டில் அரசியல் கட்சிகளுக்கிடையே கூடிய வருமானத்தைக் கொண்ட கட்சியாக ஜே.வி.பி காணப்படுகின்றது.
பிரதான 6 கட்சிகளினால் தேர்தல்கள் செயலகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வருமானக் கணக்கு விவரங்கள் தொடர்பான அறிக்கைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இந்த விடயம் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
2015 டிசெம்பர் மாதம் வரையான வருமான விவரங்கள் தொடர்பாக அரசியல் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் பிரகாரம், ஜே.வி.பியினால் 8 கோடியே 71 இலட்சத்து 96ஆயிரத்து 322 ரூபா வருமானமும் , ஐக்கிய தேசிய கட்சியினால் 3 கோடியே 63 இலட்சத்து 17ஆயிரத்து 486 ரூபாவருமானமும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் ஒரு கோடியே 97 இலட்சத்து 96ஆயிரத்து 9 ரூபா வருமானமும் காட்டப்பட்டுள்ளது.
இதன்படி ஜே.வி.பியினால் காட்டப்பட்டுள்ள வருமானக் கணக்கில் நாடாளுமன்ற, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள ஜே.வி.பியின் பேச்சாளர், எமது கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் தமது சம்பளத்தைக் கட்சியிலேயே வைப்பிலிடுகின்றனர். மற்றைய கட்சியினர் போன்று வருமானத்தைத் தனிப்பட்ட கணக்குகளில் வைத்திருப்பதில்லை. நாங்கள் நேர்மையாக உண்மையான கணக்கு விவரங்களையே வழங்கியுள்ளோம் என்று கூறினார். (த-4)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசாத்தி ஜெயம்



யாழ்ப்பாணம் வெள்ளாந்தெருவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசாத்தி ஜெயம் 03.04.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டினர் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசாமி - பராசக்தி தம்பதியரின் மருமகளும் ஜெயம் (ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், இலங்கை வங்கி) அவர்களின் அன்புமனைவியும் ஸ்ரீமணி (வவுனியா), இராசலட்சுமி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற அன்னலட்சமி, ஜெயலட்சுமி, கருணாகரன், தனலட்சுமி, கிருபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரஞ்சித்காந் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஆசிரியர்), ரஞ்சித் சோபனா (மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் நாரகன்பிட்டி), சதீஷ்காந் (பிரான்ஸ்), ஸ்ரீகாந் (லண்டன்), நாகநந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் விஜிகலா (கொக்குவில் கிழக்கு நாமகள், ஆசிரியை), கலாநிதி முகுந்தன் (சிரேஷ்ட விரிவுரையாளர் திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு), சபிதா (லண்டன்), சுரேஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் அபிஷேக் (கொழும்பு), சின்மயி (கொழும்பு), நவீன், ஹாசினி, பவித்ரா, கிஷோளா (பிரான்ஸ்), திருஷிக் (பிரான்ஸ்), மகரந் (லண்டன்), திரிக்ஷா (பிரான்ஸ்), ஹஸ்வின் (பிரான்ஸ்), சமித்திரி (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.118, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்: ஜெயம் (கணவர்),**
**(ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர்
இலங்கை வங்கி)**

## எல்லை நிர்ணய அறிவிப்பு மும்மொழியில் வேண்டும்

### தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான எல்லை நிர்ணயம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் மும்மொழிகளிலும் வழங்கப்பட வேண்டும்என்றுதேர்தல்கள்ஆணைக்குழுவின் தலைவர்மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
தற்போது சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலேயே குறித்த அறிக்கை எனக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் தமிழ்ப் பிரதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகத்தின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். எனினும் அதனை அச்சிடும் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (த-4)

# இராணுவத்தை விசாரிக்க அரசு ரகசிய ஏற்பாடு

## உள்ளகப் பொறிமுறைக்கான சட்டவரைவு உருவாக்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 6

போரில் வெற்றியீட்டிய இராணுவத்தினரை விசாரிப்பதற்கான உள்ளகப் பொறிமுறையொன்றை நிறுவும் நோக்கில் சட்டவரைவொன்றை அரசு இரகசியமான முறையில் கொண்டுவந்துள்ளதாகத் தேசிய அமைப்புக்களின் சம்மேளனம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தச் சட்டவரைவு நாட்டின் இறையாண்மைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும் எனவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

இந்தச் சட்டவரைவுக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள தேசிய அமைப்புக்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி குணதாச அமரசேகர, இது பன்னாட்டுத் தொடர்புகளுடன் கூடிய உள்ளகப் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறைக்கு வழிகோலும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படலில் இருந்து அனைவரையும் பாதுகாக்கும் பன்னாட்டுச் சாசனத்தை அடியொற்றியதாக இந்தச் சட்டவரைவு வடிவமைக்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் எனவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இந்தச் சட்டவரைவு கடந்த பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுடன் மார்ச் மாதம் 7ஆம் திகதி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தேசிய அமைப்புக்கள் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் கலாநிதி வசந்த பண்டார சுட்டிக்காட்டியுள்ளார். (த4)

# ஜெனிவா தீர்மானம் குறித்து இன்று அரை நாள் விவாதம்

கொழும்பு, ஏப். 6

ஜெனிவா தீர்மானம் தொடர்பாக இலங்கை நாடாளுமன்றில் இன்று நடைபெறவிருந்த முழுநாள் விவாதம், அரை நாளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்து இன்று முழுநாள் விவாதம் நடத்துவதற்கு எதிர்க்கட்சியினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அரசு இணங்கியிருந்தது.

இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை மறைந்த அமரபுர பீடத்தின் மகாநாயக்கர் வண. தவுல்தென ஞானிசார தேரரின் இறுதிச் சடங்கு இன்று நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு, நாளை நாடாளுமன்ற அமர்வு இன்று மாலை 3 மணியுடன் நிறுத்தப்படவுள்ளது.

இதனால் இன்று நடத்தப்படவிருந்த ஜெனிவா தீர்மானம் குறித்த முழு நாள் விவாதம் அரைநாள் விவாதமாகவே இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த - 4)

# தாதியர் பாடசாலைகள் நாடு முழுக்க அமையும்

## அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 6

தாதியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தாதியர் பயிற்சிப் பாடசாலைகளை நாடுமுழுவதும் விரிவுபடுத்தி, அவற்றுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி அதிகளவானோரை இணைத்துக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மகரகம இளைஞர் சேவைகள் மன்றக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரச சேவை தாதியர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருத்துவர்கள் மற்றும் தாதியர் உள்ளிட்ட சுகாதாரத் துறை ஆளணியினரின் பற்றாக்குறையே இலவச சுகாதாரசேவையை பலப்படுத்துவதில் முதன்மைப் பிரச்சினையாகக் காணப்படுகிறது. மேம்பட்டு வரும் பௌதீக வள அபிவிருத்தியுடன் மனித வளமும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

இலவச சுகாதார சேவையின் முக்கிய தரப்பினரான தாதியரின் சேவைக்கு அன்று தொடக்கம் சமூகத்தில் பெரும் கௌரவம் மற்றும் வரவேற்பு காணப்படுகிறது. நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்துவரும் நவீன தொழில்நுட்பத்துடன் பெற்றுக்கொள்ளப்படும் அறிவு மற்றும் அனுபவத்தினூடாக மானிடச் சமூகத்திற்குச் சிறந்த பணியை ஆற்றுவதற்குச் சுகாதாரத் துறையிலுள்ள அனைவரும் செயற்படுகிறார்கள் என்று நம்புகிறேன்-என்றார்.

சுகாதாரத்துறைக்குச் சிறந்த சேவைகளை வழங்கிய தாதியர்களுக்கான விருதுகளும் அரச தலைவரால் வழங்கப்பட்டன.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, சுகாதார அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரம, அரச சேவை தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய உள்ளிட்ட சங்கத்தின் அதிகாரிகள், உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-4)

# காலிமுகத்திடலில் 20 இலட்சம் மக்கள் மே 1இல் திரள்வர்

## கூறுகிறார் பந்துல



கொழும்பு, ஏப். 6

கூட்டு எதிர்க்கட்சி காலிமுகத்திடலில் நடத்தவுள்ள மே தினக்கூட்டத்தில் இருபது இலட்சம் பேர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு பொரளையிலுள்ள ஸ்ரீவஜிராஷர்ம பௌத்த நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது எழுந்துள்ள எந்தவொரு பிரச்சினைக்கும் அரசு தீர்வு முன்வைப்பதாகத் தெரியவில்லை. எனினும் முன்னைய ஆட்சியின்போது நாட்டில் எந்தவொரு பிரச்சினை எழுந்தாலும் முன்னாள் அரச தலைவர் அதில் தலையிட்டு அதனைத் தீர்த்து வைத்தார். இதனால் தான் தற்போது போன்று கடந்த ஆட்சியில் நாட்டில் தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெறவில்லை.

மேலும் அப்போது தொழிற்சங்கங்களுக்கும் அமைச்சர்களுக்கும் இடையில் பிரச்சினை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் முன்னாள்அரச தலைவர் நேரடியாகத் தலையிட்டு அதனைத் தீர்த்து வைத்துள்ளார். அவ்வாறான நிலை இந்த ஆட்சியில் இல்லை. தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு எவரும் முன்வருவதாகத் தெரியவில்லை. இதனால் தான் தற்போது தொடர்ச்சியாகத் தொழிற்சங்கப் போராட்டங்கள் நடக்கின்றன-என்றார். (த-4)

# ஏறாவூர் இரட்டைப் படுகொலை; சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, ஏப்.06

மட்டக்களப்பு ஏறாவூரில் தாய் மற்றும் மகள் இரட்டைப் படுகொலை வழக்கின் சந்தேகநபர்கள் அறுவரையும் தொடர்ந்து ஏப்ரல் 19ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மேலதிக நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய முஹம்மத் இஸ்மாயில் முஹம்மத் றிஸ்வி நேற்று உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் ஆறு பேரும் நேற்று ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

ஏறாவூர் பிரதேசத்தில் முகாந்திரம் வீதி, முதலாவது குறுக்கு ஒழுங்கையிலுள்ள வீட்டில் வசித்து வந்த தாயான நூர்முஹம்மது உஸைரா (வயது-56), அவரது மகளான ஜெனீரா பானு மாஹிர் (வயது-32) ஆகியோர் கடந்த செப்ரெம்பெர் 11ஆம் திகதி நள்ளிரவு இனந்தெரியாதவர்களால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்களும் கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக விளக்க மறியலில் இருந்து வருகின்றனர்.

சந்தேகநபர்களில் ஒருவர் கொல்லப்பட்ட ஜெனிரா பானுவின் கணவனின் சகோதரன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(த-ய-46)

# இலங்கைக்கு செல்லாதீர்! கட்டார் அரசு எச்சரிக்கை

கட்டார் குடிமக்களை இலங்கைக்குப் பயணிக்கவேண்டாம் என்றுகட்டார் அயலுறவுத்துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. கட்டார் அயலுறவுத்துறை அமைச்சின் அதிகாரிகள் அவர்களது டுவிட்டர் தளத்தின் ஊடாக இதனைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் எச்.1.என்.1 என்ற பன்றிக்காய்ச்சல் தொற்று பரவிவருவதால், கட்டார் நாட்டு மக்கள் இலங்கைக்குச் செல்ல வேண்டாம். இலங்கையில் பன்றிக் காய்ச்சல் தொற்று பரவியுள்ளதாக இலங்கை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். பலர் குறித்த தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளதாகவும் கட்டார் அயலுறவுத் துறை அமைச்சு எச்சரித்துள்ளது. (த-4)

பத்தாம் ஆண்டு
பசுமையான நினைவுகள்





அமரர்கள்
வைரமுத்து சிவகணேசதாசன் | சிவகணேசதாசன் சறோஜினி
(முன்னாள் சர்மிலா றேடர்ஸ் கபிலன் ரான்ஸ்போட் உரிமையாளர்கள் )

மலர்வு 10.12.1948 உதிர்வு 28.03.2007
மலர்வு 05.02.1954 உதிர்வு 28.03.2007

திதி: வளர்பிறை ஏகாதசி

நீங்கள் இருவரும் எம்மை விட்டு பிரிந்து பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன
நீங்கள் உயிரோடு இருந்தவரை எமக்கு இழப்பு எதுவுமில்லை
உங்கள் இறப்பிற்கு பின் எம்மிடம் இனி இழக்க எதுவும் இல்லை
வலிகள் நிறைந்த வாழ்வில் போராட்டமே முடிவானது
கண் துடைக்க கைகள் இல்லை, ஆறுதல் சொல்ல நாதியில்லை
நாம் தடுமாறிய போதும் பதறாமல் இருக்கின்றீர்கள் மீளாத் துயிலில்
நம் உடலும் சோர்கிறது உணர்வுகளும் மரிக்கின்றன
முழுவதுமாய் தலை சாய்க்க உங்கள் மடியினை தேடுகிறோம் விரைந்து வருவீரா?
நாம் நம் தாயை இழக்கும் போது பாசத்தையும்
நம் தந்தையை இழக்கும் போது பாதுகாப்பையும் இழந்து தவிக்கின்றோம்
இவை மீண்டும் கிடைக்காதா என ஏங்கி நிற்கின்றோம்.

நம் பெற்றோரின் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி சென்னையிலுள்ள எமது இல்லத்தில் இன்று (06.04.2017) வியாழக்கிழமை நடைபெறும். அத்தருணம் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

நிரந்தர முகவரி:
"கணேசபதி",
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.
சர்மிளா - 0091 971 041 7399
சர்வானந் - 0044 740 509 4455

## சுரங்கப் பாதை அமைக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப். 6
கண்டியில் இரட்டை வழிச் சுரங்கப் பாதை ஒன்றை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் உள்ள வீதி மூடப்பட்டுள்ளமையால், கண்டி நகரத்தில் பெரும் போக்குவரத்து நெருக்கடி காணப்படுவதாகப் பலரும் குற்றம் சுமத்தியுள்ளனர்.
அதற்கான தீர்வாகச் சுரங்க வழிப்பாதை யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. கண்டி சுதுஹூம்பொலவில் இருந்து தென்னெகும்புர வரை இந்த இரட்டை வழிச் சுரங்கப்பாதை விஸ்தரிக்கப்படவுள்ளது.
இந்தச் சுரங்கப்பாதை நிர்மாணிக்கப்பட்டால் கண்டி நகரம், விலியம் கொபல்லவ மாவத்தை, கண்டி ஏரி சுற்றுப் பாதை, தலதா மாளிகையில் இருந்து தென்னேகும்புர வரையிலான வீதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக அமையும் என அரசு எதிர்பார்க்கிறது.
பாதுகாப்பான நிறுத்துமிட வசதி உள்ளடங்கலாக, பன்னாட்டுத் தரத்தில் இந்த நவீன சுரங்கப்பாதைநிர்மாணிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது. (த - 4)

## தீர்ப்பை மதிக்காது போராடினால் எம்மால் எதுவும் செய்யமுடியாது

### சைட்டத்துக்கு எதிரான போராட்டம் குறித்து சபையில் கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 6
நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காது பேராட்டத்தில் ஈடுபட்டால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. மேன்முறையீடு செய்திருந்தாலும் வழங்கப்பட்ட தீர்ப்பு செல்லுபடியாகும். தீர்ப்புகளுக்கு எதிராகப் பணிப்புறக்கணிப்புச் செய்தால் நாட்டின் சிறு பகுதி கூட மிஞ்சாது.
இவ்வாறு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில், நடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறினார்.
சைட்டம் தனியார் பல்கலைக் கழகத்துக்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர்கள் 7 ஆயிரத்து 200 பேர் 70 நாள்களாக வகுப்புகளுக்குச் செல்லாமல் உள்ளனர். அமைச்சரவையில் உள்ள 93 அமைச்சர்கள் அவர்களைச் சென்று சந்தித்தீர்களா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க கேள்வியெழுப்பினார்.
அதற்குப் பதிலளித்த அமைச்சர், "சைட்டம் தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கிய நிலையில், அதனை மதிக்காது போராட்டத்தில் ஈடுப்பட்டால் என்ன செய்ய முடியும். அது தொடர்பில் மேன் முறையீடு செய்திருந்தாலும், வழங்கப்பட்ட தீர்ப்பு தற்போது நடைமுறையிலேயே உள்ளது. வழங்கப்படும் நீதிமன்றத் தீர்ப்புகள் அனைத்துக்கும் எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டால் இந்த நாட்டின் சிறு பகுதி கூட மிஞ்சாது" என்றார். (த - 4)

# ஒட்டாவா உடன்பாட்டில் கைச்சாத்திடுவது மிக அவசியம்

### இலங்கை அரசிடம் வலியுறுத்துகிறது பிரிட்டன்



கொழும்பு, ஏப். 6
கண்ணிவெடிகளைத் தடை செய்யும் ஒட்டாவா உடன்பாட்டில் இலங்கை கையெழுத்திடவேண்டும் என்று பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.
இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடுகளுக்குப் பிரிட்டன் உதவி வழங்கி வருகிறது. 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான காலத்தில் இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளுக்கு 1.2 பில்லியன் ரூபாவைப் பிரிட்டன் செலவிடுகிறது.
2016 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் மேலும் 600 சதுர கி.மீ. பரப்பளவு நிலத்தில் கண்ணிவெடிகளை அகற்றி மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பவும், விவசாயத்தை மேற்கொள்ளவும் பிரிட்டன் உதவும் என்று இலங்கைக்கான பிரிட்டன் துணைத் தூதுவர் லோறா டேவிஸ் தெரிவித்துள்ளார்.
2020ஆம் ஆண்டில் கண்ணிவெடிகளில் இருந்துவிடுவிக்கப்பட்ட நாடாக மாற்றும் இலக்குடன் இலங்கை செயற்படுகிறது. இந்த இலக்கை எட்டுவதற்கான இலங்கையின் ஒவ்வொரு நகர்வுகளுக்கும் பிரிட்டன் ஆதரவை அளிக்கும். அத்துடன் ஒட்டாவா உட்ன்பாட்டிலும் இலங்கை கையெழுத்திடவேண்டும் என்றும் அவர் கூறினார்.
அண்மையில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட அவர் முகமாலைக்குச் சென்று அங்கு கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த - 4)

## அரசியல் சதியில் பிரசன்ன ரணதுங்க

### ஷாந்த பண்டார குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 6
கூட்டுஎதிர்க்கட்சி காலிமுகத்திடலில் மே தினக் கூட்டத்தை நடத்தத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியுள்ள நிலையில் அதனை வேறிடத்துக்கு மாற்றுவதற்கு பிரசன்ன ரணதுங்க அரசியல் சதி செய்கின்றார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி இளைஞர் அமைப்பின் தலைவர் ஷாந்த பண்டார குற்றம்சாட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மே முதலாம் திகதியன்று அரச தலைவர் செயலகத்தையும், அலரி மாளிகையையும் முற்றுகையிடப் போவதாகக் கூறுவதன் மூலம் பிரசன்ன ரணதுங்க பாதுகாப்புப் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்.
காலி முகத்திடலை நிரப்புவதற்கு கூட்டு எதிர்க்கட்சியின் ஆதரவாளர்கள் போதாதுள்ளனர். இதனைத் தெரிவிக்க வெட்கப்பட்டு, மே தினக் கூட்டத்துக்குச் சிறிய மைதானம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முயற்சித்து வருகின்றனர். இதற்காகவே சுற்றிவளைப்புக் கதைகளைப் பரப்பி, காலி முகத்திடலை விட்டுக் கூட்டத்தை வேறிடத்துக்கு மாற்ற முயற்சித்து வருகின்றனர் - என்றார். (த - 4)

## மரண அறிவித்தல்



தோற்றம்
14 . 11 . 1935

மறைவு
04 . 04 . 2017

### தம்பு பொன்னுத்துரை

கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பொன்னுத்துரை 04.04.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் திலகவதி அவர்களின் அன்புக் கணவரும், உமாதேவன் (சுவிஸ்), வசந்தகுமாரன் (சுவிஸ்), தேவகுமார் (சுவிஸ்), சிவகுமார், செல்வகுமார் (லண்டன்) பேரின்பநாதன் (லண்டன்),கலாதேவி, கமலாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சித்திரா, மனோகரி, நடராசா, கபிராசன், அருட்செல்வி, சசிதா, வரவீணா, மே ஆகியோரின் அன்பு மாமனும், சுகந்தினி, சுதர்சன், நிருஷன், கபின்சன், திலக்ஷன் (சுவிஸ்), திலுக்சன் (சுவிஸ்), தீபிகா (சுவிஸ்), சிந்துஜா,கிருதுஷா, கிருத்திக் (சுவிஸ்), மிதுர்னா (சுவிஸ்), மயூர்னா (சுவிஸ்), தனுஷன், டர்சிகா, பாணுஷன், சோபிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும்,அபிஷா,அபிநயா, கிரிகேஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் தெற்கு, எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்

077 614 1258 / 077 922 9494

## புலிகளுக்கு நிதி சேகரித்த 4 பேரின் தண்டனை உறுதி

### நெதர்லாந்து உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஏப். 6
விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் ஹேக் நீதிமன்றினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் நால்வரின் மேன்முறையீட்டை நிராகரித்துள்ளது நெதர்லாந்து உயர்நீதிமன்றம்.
சந்தேக நபர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பையும் அது உறுதி செய்துள்ளது.
குற்றவியல் அமைப்பு ஒன்றின் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்ற வகையில், ஐந்து பேருக்கு நெதர்லாந்தின் ஹேக் நீதிமன்றத்தினால் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களுக்கு ஆறு மாதங்கள் தொடக்கம் 19 ஆண்டுகள் 3 மாதங்கள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.
2003 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்காக நெதர்லாந்தில் நிதி சேகரித்தார்கள் என்று இவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டது.
சட்டவிரோதச் சீட்டிழுப்புகளை நடத்தினார்கள், அவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட பணத்தை இலங்கைக்கு அனுப்பினார்கள் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.
தண்டனை விதிக்கப்பட்ட ஐவரில் நால்வர் தமக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைக்கு எதிராக நெதர்லாந்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தனர்.
இந்த மேன்முறையீட்டை நிராகரித்துள்ள நெதர்லாந்து உயர்நீதிமன்றம் நால்வருக்குமான தண்டனையை உறுதி செய்துள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (த - 4)

## ஐ.எஸ். அமைப்பின் கொலைப் பட்டியல்

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு உலகில் உள்ள முக்கியஸ்தர்கள் 8 ஆயிரத்து 876 பேர் தமது கொலைப் பட்டியலில் உள்ளனர் என்று அறிக்கை வெளியிட்டுள்ளது. அவர்களில் அமெரிக்க அதிபர் ட்ரம்பும் உள்ளார்.
பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களில் பலர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். இந்தத் திட்டத்துக்கு 'ஓநாய் தாக்குதல்' என்று அந்த அமைப்புப் பெயரிட்டுள்ளது. (ம)

## தேய்பிறையான தீபா பேரவை



சென்னை, ஏப். 6
ஆர்.கே. (இராதா கிருஷ்ணன் நகர்) இடைத் தேர்தலில் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆர்.கே. நகரில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால் அவரது சாவை அடுத்து அந்த நகரில் இடைத்தேர்தல் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. அ.தி.மு. கழகம் மூன்றாக உடைந்துள்ளது. ஒரு தரப்பினரை இணைத்து எம்.ஜி.ஆர். - அம்மா - தீபா பேரவை என்ற அமைப்பை உருவாக்கி தேர்தல் களத்தில் உள்ளார் தீபா.
ஜெயலலிதாவின் அண்ணன் மகள் என்பதால் ஜெயலலிதாவின் கோட்டையான ஆர்.கே. நகரில் தீபாவுக்கு வாய்ப்பு அதிகம் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவர் அங்கு கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளார் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



# வான்வழி இரசாயனத் தாக்குதல் சாவு எண்ணிக்கை 100 ஆனது

### ஐக்கிய நாடுகள் சபை கொதிப்பு

### உலக நாடுகள் கடும் கண்டனம்

### போர்குற்றம் என்றும் அறிவிப்பு

பெய்ரூட், ஏப். 6
சிரியாவில் அரசபடைகள் அல்லது அரச ஆதரவு பெற்ற நாடுகள் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் வான்வழி இரசாயனத் தாக்குதலில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 100 இனைத் தாண்டியது.
சிரிய அரசு, ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு, அரசுக்கு எதிரான ஆயுதக் குழு என்று இருமுனைப்போரில் சிக்கித் தவிக்கிறது. ஐ.எஸ்ஸுக்கு எதிரான போரில் அமெரிக்காவும், கிளர்ச்சிக் குழுவுக்கு எதிரான போரில் ரஷ்யாவும் பக்கபலமாக உள்ளன. இட்லிப் மாகாணத்தில் சேகுன் நகரில் அரசுக்கு எதிராகச் செயற்படும் கிளர்ச்சிக் குழுவை இலக்குவைத்துநேற்று முன்தினம் நடத்தப்பட்ட வான் வழி இரசாயனத் தாக்குதல் இலக்குத்தவறியதை அடுத்து 58 பொதுமக்கள் சாவடைந்தனர். இது முதல் கட்டத் தகவலாக வந்தமைந்தது. விசவாயுஏனைய இடங்களில் பரவியதாலும், பலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாலும் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.
இந்தநிலையில்நேற்று மதியம் வரையிலான நிலவரத்தின் படி சாவு எண்ணிக்கை நூறைத் தாண்டியது என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்தது. 400 பேர் சிகிச்சை எடுத்துவருகின்றனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்ற எச்சரிக்கையை அந்த அமைப்பு நேற்றும் வெளியிட்டது.
கடந்த ஆறு வருடங்களில் நடத்தப்பட்ட கொடுமையான தாக்குதல் இது என்று எதிர்க்கட்சிகள் கொதித்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபை சம்பவம் தொடர்பில் ஆலோசிக்க நேற்று அவசரஅவசரமாகக் கூடியது.
முன்னதாகச் சிரியாவில் நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதல் இலக்குத்தவறியதை அடுத்து 28 பேர் சாவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சூரியனை தோற்கடிக்கும் வெளிச்சம் ஜேர்மனி விஞ்ஞானிகளின் படைப்பு

பேர்லின், ஏப். 6
சூரியனை விட பத்தாயிரம் மடங்கு வெளிச்சம் கொண்ட செயற்கை சூரியனை ஜேர்மனி விஞ்ஞானிகள் படைத்துள்ளனர்.
ஒரே நேரத்தில் மூவாயிரத்து ஐந்நூறு சென்ட்டிகிரேட் வெப்பத்தை உமிழக்கூடியதாக இந்த செயற்கை சூரியன் உருவாக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு மாசு விளைவிக்காத, கரியமில வாயு கலப்பில்லாத, புதிய ரக எரிபொருளை கண்டுபிடிப்பதற்கான முன்முயற்சியாக இந்த ஆராய்ச்சி அமைந்துள்ளது. இயற்கையான சூரிய ஒளியை 'சன்லைட்' என்று அழைப்பதனால் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள இந்த செயற்கை சூரியனுக்கு 'சின்லைட்' என் ஜேர்மனி விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர்.
இவ்வளவு ஆற்றல் வாய்ந்த செயற்கை சூரிய ஒளியையும், வெப்பத்தையும் உருவாக்குவதற்கு சிலமணி நேரத்துக்கு மட்டும் தேவைப்படும் மின்சாரமானது, நான்கு நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் ஒரு ஆண்டு முழுவதும் பயன்படுத்தும் மின்சாரத்துக்கு இணையானது என விஞ்ஞானிகள் மேலும் குறிப்பிட்டனர். (ம)



## நைஜீரியாவில் மூளைக் காய்ச்சல்; இதுவரை 336 சிறுவர்கள் சாவு



அபுஜா, ஏப். 6
நைஜீரியாவில் பரவி வரும் மூளைக் காய்ச்சலுக்கு இதுவரை 336 சிறுவர்கள் சாவடைந்துள்ளனர் என்று பன்னாட்டு சுகாதார மையம் தெரிவித்தது.
நைஜீரியாவின் மத்தியமற்றும்வடமேற்கு பகுதிகளில் உள்ள சாம்பாரா, காட்சினா, கெப்பி, நிஜெர், சோகோடோ ஆகிய மாநிலங்களில் கடந்த டிசெம்பர் மாதம் முதல் மூளைக் காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. இந்த நோயால் 5 முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் என்று சொல்லப்படுகிறது.
கடந்த நான்கு மாதங்களில் 336 சிறுவர்கள் இந்த நோயால் சாவடைந்துள்ளனர். கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில்பலரின்நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.
நோயைக் கட்டுப்படுத்த 5 லட்சம் தடுப்பு மருந்துகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. எனினும், இன்னும் 2 மில்லியன் (20 லட்சம்) தடுப்பு மருந்துகள் தேவைப்படுகின்றன என்று உலக சுகாதார மையம் மேலும் தெரிவித்தது.
தடுப்பு மருந்துக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதால் உலக வல்லரசு நாடுகள் உதவ முன்வர வேண்டும் என்று பன்னாட்டு ஊடகங்கள் அழுத்தம் கொடுத்துள்ளன.
மூளைக் காய்ச்சல் நோய் அருகிலுள்ள மற்ற நாடுகளுக்கும் பரவலாம் என அஞ்சப்படுவதால், நைஜீரியாவுடன் எல்லையைப் பகிரும் நாடுகள் தத்தமது பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியுள்ளன. (ம)

## "ஒபாமாவின் நிர்வாகக் குளறுபடியே சிரிய அவலத்துக்குக் காரணம்"

வொஷிங்டன், ஏப். 6
சிரியாவில் மனித குலத்துக்கு எதிராக நடத்தப்படும் துயரச் சம்பவங்களுக்கு அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமாவும் அவரின் நிர்வாகக் குளறுபடியுமே காரணம் என்று அந்த நாட்டின் தற்போதைய அதிபர் ட்ரம்ப் குற்றஞ்சாட்டினார்.
சிரியாவில் மக்கள் பகுதிக்குள் வான் வழித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இவை "இலக்குத் தவறிய தாக்குதல்" என்ற ஒற்றைச் சொல்லால்முடிவுக்குக்கொண்டு வரப்படுகின்றன. நூற்றுக்கணக்கான மக்கள் தினம்தினம் செத்து மடிகின்றனர். இட்லிப் மாகாணத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வான்வழி இரசாயனத் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் சாவடைந்தனர். 400 இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா தனது கண்டனத்தைக் கடுமையாகத் தெரிவித்தது. அதிபர் ட்ரம்ப், ஒபாமாவின் நிர்வாகத்தின் மீது நேரடியாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.
"சிரியாவில் உள்ள குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்டுள்ள இந்த இரசாயனத் தாக்குதல் மிகக் கொடூரமான செயலாகும். இந்தக்கொடூரத்தைநாகரிகம்அடைந்த உலக நாடுகள் கண்டும் காணாமல் இருந்து விட முடியாது. இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்துவதற்கு எதிராக எச்சரிக்கைக்கோடு போடப் போவதாக கடந்த 2012 ஆம் ஆண்டில் அப்போதைய அதிபர் ஒபாமா குறிப்பிட்டிருந்தார். ஆனால், எமது நாட்டின் முந்தைய ஆட்சியின் பலவீனம் மற்றும் தீர்மானிக்கும் தன்மையில் உறுதிப்பாடற்ற நிலைப்பாடு ஆகியவற்றைதான் சிரியாவின் இந்தக் கொடூரமான செயல்பாடு சுட்டிக் காட்டுகிறது.
சகித்துக் கொள்ள முடியாத இந்தத் தாக்குதலை கண்டிப்பதில் உலகில் உள்ள நமது நேச நாடுகளுடன் அமெரிக்கா தொடர்ந்து குரல் கொடுக்கும்" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம)



# வடமராட்சி மக்களின் நலன் கருதி
# P.P.T Express இன் மகத்தான சேவை

**கொழும்பு - யாழ்ப்பாணம் பேருந்து சேவையில் முன்னணி வகிக்கும் P.P.T எக்ஸ்பிரஸ் நிறுவனம் புத்தம் புதிய அதி சொகுசு பஸ்களை (விமானத்தில் இருப்பது போன்றது) சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.**

**யாழ்ப்பாணம் கொழும்பு மக்களுக்காக அதி உன்னத சேவை நடாத்தும் P.P.T நிறுவனம் பிரயாணிகளின்நலன் கருதி தனது சேவையை மேம்படுத்தியுள்ளது.**

யாழ் - கொழும்பு
கொழும்பு - யாழ்
12 மணித்தியால
பொதிகள் சேவை



முதலாவது பேருந்து: யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 8.00 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்படும்.

இரண்டாவது பேருந்து: **பருத்தித்துறையிலிருந்து இரவு 8.00 மணிக்கு** புறப்பட்டு நெல்லியடி, அச்சுவேலி, கோப்பாய், இருபாலை, நல்லூர் ஊடாக யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 9.00 மணிக்கு கொழும்பை நோக்கிப் புறப்படும்.

அதேபோல் - முதலாவத பேருந்து வெள்ளவத்தையில் இருந்து இரவு 8.00 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து காங்கேசன்துறை வீதி வழியாக காங்கேசன்துறையைச் சென்றடையும்.

இரண்டாவது பேருந்து - வெள்ளவத்தையில் இருந்து இரவு 9.00 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை வீதி வழியாக பருத்தித்துறையை சென்றடையும்.

**ஆசனப் பதிவுகளை இங்கே மேற்கொள்ளலாம்.**


**யாழ்ப்பாணம்: 0775731318**
**183,கே.கே.எஸ் வீதி, 021 492 3240**

**பருத்தித்துறை: 0775736003**
**அரசடி லேன் பருத்தித்துறை, 021 492 3724**

**கொழும்பு: 0775755175**
**182,சென்றல் றோட், கொழும்பு -12**
**0112 320336**

**வெள்ளவத்தை: 0766036204**
**296, A1, காலி வீதி, கொழும்பு -06**
**0112364999**

# மரண அறிவித்தல்



**பிறப்பு**
19.10.1946

**இறப்பு**
03.04.2017

## கார்த்திகேசு தெய்வேந்திரம்

(Vista 8 print உரிமையாளரின் தந்தை)

வேலணை கிழக்கு, 3 ஆம் வட்டாரம், பெருங்குளத்து அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தெய்வேந்திரம் 03.04.2017 திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தங்கம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான அருள் பிரகாசம் - வள்ளியம்மா தம்பதியரின் மருமகனும், சாரதாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தமிழ்விழி மற்றும் கீதாஞ்சலி, துஸ்யந்தி, ஸ்ரீகாந் (அமெரிக்கா), அமிர்தகரன் ( Vista8print உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருளானந்தம், ரஜனிக்காந், ஜெயானந்தன், தர்மிகா (அமெரிக்கா), சாந்துஷா ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற துரைராசா, குலசேகரன், செல்வதி, செல்வநாயகம், அமுதகௌரி, புனிதவதி ஆகியோரின் சகோதரனும், கமலாதேவி, நாகேந்திர நாதன், பாலச்சந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,வேணுஷா, அபிசாலினி, சர்மிலன், பாமகன், நிதுசிக்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.04.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் வேலணை சாட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் மத்தி, கோப்பாய்.**
**(கோப்பாய் பிரதேச செயலகம் முன்பாக)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்துக்கான நிதி மானிய வழங்கல் செயற்றிட்டம் ஆரம்பம்

## துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஊடாக நடவடிக்கை



மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நிதி மானியங்களை பெற்றுக்கொடுக்கும் செயற்திட்டமொன்று துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்திச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அந்தப் பிராந்தியங்களில் மணல் அகழப்படுவதுடன் அங்குள்ளதான முருகைக்கற்பாறைகள் மற்றும் கடலுயிர்களின் இனவிருத்தி வலயங்கள் பாதிக்கப்படுவதாகவும் மீனவர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்ததைத் தொடர்ந்தே இந்த நிதி மானிய வழங்கல் செயற்றிட்டம் தொடர்பிலான முன்மொழிவுகள் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

குறிப்பாக மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நிதி மானியங்களை வழங்க வேண்டும் என்பதான கோரிக்கைகள் துறைசார்ந்த அமைச்சரினால் துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்ட பிரிவிடம் கோரப்பட்டுள்ளதுடன் எந்தவொருமீனவசமூகத்தின்வாழ்வாதாரத்துக்கும்பாதிப்புக்கள்ஏற்படுமாயின்அவர்களின்வாழ்வாதாரத்தைஉயர்த்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 'நாரா' நிறுவனம் மேற்கொண்டதான ஆய்வுகளின் தகவலடிப்படையில் குறித்த பிரதேசங்களில் உள்ள கடலுயிர்களின் இனவிருத்திக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பதான கருத்துக்களும் மீன்பிடித்துறை அமைச்சினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது தொடர்பில் தீர்மானங்கள் எவையுமில்லை

## மின்சக்தி மற்றும் மீள்புத்தாக்க சக்திவலு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



மின்சாரக்கட்டணத்தைஉயர்த்துவது தொடர்பில் இதுவரையாக எந்தவொரு தீர்மானங்களும் எடுக்கப்படவில்லையென்பதானகருத்துமின்சக்தி மற்றும்மீள்புத்தாக்கசக்திவலுஅமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்றுஎதிர்காலத்தில்மின்சார கட்டணத்தை உயர்த்துவது குறித்தும் அரசு எந்தவொரு எதிர்பார்ப்பையும் கொண்டிருக்கவில்லை எனவும் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

மேலும்நீர்த்தேக்கங்களில்நீர்மட்டம்குறைவாக இருக்கின்ற போதும் தொடர்ச்சியாக மின்சாரத்தைவழங்குவதற்குஅதிகசெலவுஏற்பட்டாலும் மின்சார விநியோகத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாதாந்த பண வீக்கம் சராசரியிலிருந்து அதிகரிப்பு

2015/16நிதியாண்டில்குறிப்பாககடந்தஒக்ரோபர் மாதத்தின் பணவீக்கமானது 5 சதவீகிதமாகப் பதிவாகியுள்ளது. முன்னதாக செப்ரெம்பர் மாதத்தில் 4.7சதவீதமாகபதிவுசெய்யப்பட்டிருந்தபணவீக்கமானது 0.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளமை நோக்கத்தக்கது. ஆண்டு அடிப்படையிலான சராசரியானதுதேசியநுகர்வோர்விலைச்சுட்டெண்ணில் ஏற்படுத்திய மாற்றம் என்பது நடப்பாண்டில் செப்ரெம்பர்மாதத்தில்3.8சதவீதத்திலிருந்துஒக்ரோபர் மாதத்தில் 4 சதவீதத்துக்கு அதிகரித்துள்ளது.

அந்தவகையிலே மாதாந்த மாற்றங்களைக் கருத்திற்கொள்ளும் போது, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மேற்படி மாதங்களில் 113.5 சுட் டெண் புள்ளியிலிருந்து 114.7 புள்ளியாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


# மரண அறிவித்தல்

மலர்வு
30 . 06 . 1948



உதிர்வு
02 . 04 . 2017

## திருமதி ராசமலர் தியாகராசா

யாழ். பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராசமலர் தியாகராசா 02.04.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்வேலு நடராசா - நேசம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற மார்கண்டு தியாகராசா வின் அன்பு மனைவியும் ராஜேஸ்வரி (ஜேர்மனி), சிவா (நோர்வே), காலஞ்சென்ற ராஜேஸ்வரம், செல்வலக் ஷ்மி (லண்டன்), சதீஸ்குமார் (லண்டன்), சுதாகரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு தாயாரும் இராஜேந்திரம் (நோர்வே) , காலஞ்சென்ற செல்வராணி, புஸ்பராணி(இலங்கை), சரஸ்வதி (இலங்கை), நிர்மலாதேவி (லண்டன்), வசந்தாதேவி (ஜேர்மனி), ரவீந்திரன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோகர், ராஜ்குமார், நிஷாந்தினி, பிரியா, அபிராமி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மதுசன், நிரோஜினி, நிவாஜினி, ஷர்ணிகா, சொப்னிகா, சுலக் ஷன், சாருகா, சோபிகன், சயன், காவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று(06.04.2017)வியாழக்கிழமைமுற்பகல்10.00மணிக்குஅவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டுமுகவரி
முகாந்திரம் வீதி,
மல்லாகம், யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

புஷ்பராணி (இலங்கை) - 077 251 1064,
செந்தில்வேல் (இலங்கை) - 077 226 9245
மாலா (லண்டன்) - 077 2040 585


# உள்நாட்டு சீனி உற்பத்தியை மேம்படுத்திக்கொள்ளவேண்டும்

## கமநல சேவைகள் சம்மேளனம் தெரிவிக்கின்றது

நாட்டின் சீனி உற்பத்திச் செயற்பாடுகளில் சிக்கல் நிலைமைகளை தாம் எதிர்கொண்டுள்ளதாக சீனி இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிக்கின்றது.

இதன்பிரகாரம் எதிர்காலத்தில் சீனியின் விலை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதான தகவலும் அந்தவகையிலே மக்கள் மீது வரி சுமத்தப்படுவதை தடுக்கும் வகையிலே உள்நாட்டுசீனி உற்பத்தியை மேம்படுத்த வேண்டும்என அகில இலங்கைகமநலசேவைசம்மேளனம்தெரிவித்துள்ளது.

அதேவேளை நாட்டுக்கு வருடாந்தம் 480 ஆயிரம் மெற்றிக் தொன்சீனி தேவைப்படுகின்றது. உள்நாட்டு சீனி உற்பத்தி வீழ்ச்சியடைந்துள் ளமையால் 90 வீதமான தேவை என்பது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலம் நிவர்த்தி செய்யப்படுகின்றது. இதன்படிமாதாந்தம்40ஆயிரம்மெற்றிக் தொன்சீனிதேவைப்படுவதுடன்ஒருநாளுக்கு1300மெற்றிக் தொன் சீனி தேவைப்படுகின்றது.

மேலும் பண்டிகைக்காலங்களில்ஏறத்தாழ6 லட்சம்மெற்றிக் தொன் சீனியை மக்கள் பயன்படுத்துகின்றமை நோக்கத்தக்கது. இந்தநிலையிலே உள்நாட்டில் சீனி உற்பத்திசெய்யும் கிங்குரான, பெலவத்த, செவனகல மற்றும் கந்தளாய் சீனி தொழிற்சாலைகள்செயலிழந்துகாணப்படுவதுசீனிஉற்பத்தியின் அருமைத் தன்மையைத் தோற்றுவித்துள்ளது.

இதேவேளை, கொக்ஹேய்ன்கடத்தல்காரணமாகபிரேசிலில் இருந்தான சீனி இறக்குமதி நடைமுறையை நிறுத்த வுள்ளதாகவும்அந்தசந்தர்ப்பத்தைஇந்தியாவுக்கும்தாய்லாந்துக்கும் வழங்கவுள்ளதான கருத்துக்கள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவால் அண்மையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது.



# இன்புளுவென்சா கொள்ளை நோயை சுகநலத்துறையினரே கண்டு கொள்வீர்!

மருத்துவர் சி. யமுனாநந்தா

நரக லோகத்துக்குச் செல்லத்தேவை யில்லை எம் நகரத்திலேயே நரக வேதனையை அனுபவிக்கின் றோம்.
ஆம்! தொடர்ச்சியான இருமல், தொண்டை நோ இரு நாள்களுக்குக் காய்ச்சல், இதனு டன் உடல் கடுமையான நோ இவையே இன்று எல்லா வீடுகளையும் ஆக்கிரமிக்கும் நோயின் அறிகுறிகளாகும். இதனால் பாதிக் கப்பட்டவர்களுக்கு இரண்டு கிழமைகளுக் குத் தொடர்ச்சியாக இருமல், சளி இருக்கும்.
இந்தநோய்பச்சிளம்பாலகர்முதல்முதியோர் வரைதாக்குகின்றது.
இந்தநோயாளிகளின்குருதிப்பரிசோதனை யில் வெண்குழியங்கள் குறைந்தும் குருதிச் சிறுதட்டுக்கள் குறைந்தும் காணப்படுகின்றன.
இதனால் பல நோயாளர்களுக்கு டெங்குநோய்எனத்தவறாகஅடையா ளமிடப்பட்டுச் சிகிச்சையளிக்கப்படு கின்றது.
இதனால் சில நோயாளிகளுக்குச் சாவும்சம்பவிக்கின்றது. அடுத்து இந்த நோயாளிகளுக்குவெண்குழியங்கள் குறைவால்பக்றீரியாத்தொற்றும்ஏற்ப டுகின்றது. இதற்கு சிறந்த நுண்ணு யிர்க் கொல்லி அளித்தல் வேண்டும்.
இந்த நோய்க் கிருமிகள் இருமும் போதும், தும்மும் போதும் காற்றில் பரவிமேசை, கதிரைகளில்சளிதிரவங் களாகக் கிருமிகள் பரவும். இதனைக் கைக ளால் தொட்டு, கண், மூக்கு, வாய் ஆகிய சீத மென்சவ்வு பகுதிகளில் தொடும்போது நோய்த் தொற்று ஏற்படுகின்றது. கிருமி தொற்றி இரண்டு நாள்களில் நோயின் அறி குறிகள் ஏற்படும்.
புதிதான இந்த நோய் தொடர்பாக சமூக விழிப்பை ஏற்படுத்த சுகாதாரத் திணைக்க ளம் தவறியுள்ளது. மக்களின் அவலக்குரல் உலக சுகாதார நிறுவனத்துக்கு ஒலிக்க வேண்டும்.
இந்த நோய் எமது மக்களைப் பாதித்த நிலை யிலேயேஅரசமருத்துவஅதிகாரிகள்சங்கம், வடமாகாணத்தில் பணிப்புறக்கணிப்பை கடந்த மாசி மாதம் 24 ஆம் திகதி நடத்தியது. இது ஒரு மனிதாபிமானமற்ற நடவடிக்கை.
அதேபோன்று நாளைய தினமும் பணிப்பு றக்கணிப்பைமேற்கொள்ளத்திட்டமிட்டுள்ள தாகக் கேள்வி.
ஒரு புறம் மருந்துவ நிர்வாக அதிகாரிகள் நோயின்உண்மைத்தன்மையைமறைக்க முற்படுகின்றனர். மறுபுறம் தொழிற்சங்க நடவடிக்கைகளை மருத்துவர்கள் அரசுக்கு எதிராகஎனக்கூறிக்கொண்டுநோயால்அவ திப்படும்மக்களுக்குஎதிராகசெயற்படுவதற்கு முற்படுகின்றனர்.
ஐயோ கடவுளே! நோயாளிகளை வைத்து அரசியல்செய்வதையோ, வர்த்தகம்செய்வ தையோ தற்போதைய கொள்ளை நோய்ப் பரவலில் நிறுத்தி அரசமனிதாபிமான உதவி களை மக்களுக்குக் கிடைக்க வழி செய் வோம்.



# பெண்ணடிமைத்தனமும் மதத்தின் பெயரிலான தவறுகளும்

உடுவிலூர் கலா

பெண் என்பவள் வேதனையின் முகவரியாக, அடிமையின் சின்னமாக அன்றும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். ஆண்கள் பெண்களை அடிமை களாகவே பார்க்கின்றனர். இந்த உலகத்தின் சந்ததியைப் பிரசவிக் கின்ற மகோன்னத சேவையைப் பெண்கள் செய்தபோதிலும் இன் றும் அடிமைகளாகவே வாழ்கின் றனர். ஏன்? பெண் ஆணைவிட அறிவில் குறைந்தவளா? வல் லமை இல்லாதவளா? ஒரு தனி மனிதன் தொடங்கி குடும்பம், சமு தாயம், நாடு எனப் பரந்து உல கையே ஆளுமை செய்யும் பெண் ஆணாதிக்கப் போர்வைக்குள் இதமாகக் குளிர்காய்வது ஏன்?
சமூகக் கோட்பாடுகளும், மூட நம் பிக்கைகளும் பெண்கள் அடங்கி வாழும் நிலையை நிர்ப்பந்தித் துள்ளன. பெண்ணின் உடல மைப்புகள், உடலியல் மாற்றங்க ளும் கூட மூடநம்பிக்கைகளை சமூகத்திடமிருந்து ஏற்றுக் கொண் டன. மாதவிடாய் கால குருதி வெளியேற்றம் பெண்ணை தீட்டப் படாத வைகளாகவும், பிரசவகால ஓய்வு பாலூட்டும் தாயாக உள்ள தால் அசுத்த ஆவியின் தொடு கைக்கு ஆளாவாள் என்கிற முட நம்பிக்கையைத் திணித்துப் பெண்ணை அடக்கி ஆண்டு வந் துள்ளன. இன்றும்சிலபின்தங்கிய கிராமங்களில் மாதவிடாய் காலப் பெண்கள் ஒதுக்குப் புறங்களில் வாழ்வதும், ஆண்களுக்கு அருகே செல்லமுடியாத இழிநிலையும் உள்ளது.
பெண்களுக்கு இயல்பாகவே உள்ள பொறுமை, தியாகம் விட்டுக் கொடுப்பனவு எல்லாம் ஆண்களின் ஆதிக்க வெறிக்கு அடங்கிப் போகும் நிலையை உருவாக்கி யுள்ளது. ஒரு பெண் கணவனைத் தெய்வமாகப் போற்றுவதும் தலை வனாக வணங்குவதும் அவளது மதிப்பார்ந்த பக்குவமான பக்தி நிலையாகும். இவற்றையெல் லாம் கன்னிகளும், மணவாழ் வுக்கு முழுக்குப் போடும் பெண்க ளும் கூட உருவாக்கியுள்ளனர். காதலிக்கும்போது "உனக்கு நான் எனக்கு நீ" என உயர்ந்த தத்துவம் பேசும் ஆண், தாலிகட்டும் போது தன்னுடையதும் உறவினுடைய துமான மதவிருப்பத்தையே நிறை வேற்றுகிறான். இதனால் காலம் காலமாகப் பின்பற்றி வந்த மதக் கொள்கைகளை விடுத்து, ஆணின் விருப்பத்தின்படி தாலி ஏற்கும் நிலை கூட பெண்ணுக்கு ஏற்படு கிறது.
மனிதரில் ஒருசாரார் மதங்களைப் பரப்புவதற்குப் பரப்புரை செய்வ தும் அதனை எதிர்த்து கிண்டல் செய்வதற்கு இன்னொரு சாராரு மாக வாழ்கின்றனர். அதைவிட மதங்களின் பெயரில் போட்டி பொறாமைகளும் ஒருவரை ஒரு வர் தாக்குவதும், பழிவாங்குவ தும், வார்த்தைகளால் நோகடிப்ப துமாக மனிதர் வாழ்வது வேத னையானது. மதங்களால் ஏற்ப டும் பிரச்சினை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.
மதங்களைப் பரப்புவதற்காக சிலைகளை நிறுவுவதோ, அத னால் காணிகளைச் சுவீகரிப்பதோ மானுட தர்மமாகாது. மாறாக, மனித வாழ்வின் அடிப்படை உரி மைகளைத் தட்டிப்பறித்து அவர்க ளது சந்தோசத்தைக் குழிதோண் டிப் புதைக்கும் செயலாக உள்ளது. மதப் பிரச்சினைகள் யாவும் தமி ழர் வாழும் இடங்களிலேயே பரவ லாக இடம்பெறுகின்றது.

> பெண்களுக்கு இயல் பாகவே உள்ள பொறுமை, தியாகம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை எல் லாம் ஆண்களின் ஆதிக்க வெறிக்கு அடங்கிப் போகும் நிலையை உருவாக்கி யுள்ளது. ஒரு பெண் கணவனைத் தெய்வ மாகப் போற்றுவதும் தலைவனாக வணங்கு வதும் அவளது மதிப் பார்ந்த பக்குவமான பக்தி நிலையாகும்.



மனிதனால் மதம் உருவாக்கப்பட் டது. மதம் மனிதனை உருவாக்க வில்லை. மனித சக்திக்கு அப்பாற் பட்ட சக்தியைக் கடவுளாக வணங் கிய மனிதன், மர வணக்கம், கல்வணக்கம், சூரிய வணக்கம் என மேற்கொண்டதை சிந்து வெளி நாகரிகம் அழகாகச் சொல் கிறது. அதேபோல் ஏழ்மையின் வடிவெடுத்த இயேசு அற்புதங்கள் பல செய்து, சிலுவை சுமந்து மரித்து உயிர்த்தெழுந்து கிறிஸ்த வமதமும், பிணிமூப்பு, சாக்காடு என்பவற்றை அனுபவசாலியாக உணர்ந்த புத்தரால் புத்தமதமும் தோற்றம் பெற்றன.
எந்த மதமும் பிரிவினை வாதத் தையோ, கருத்து வேறுபாடுக ளையோ சொல்லவில்லை. எல்லா மதமும் வாழ்வியல் தத்துவங் களை மிகத் தெளிவாகக் கூறுகின் றன. அப்படியிருக்க மதத்தின்பெ யரில் மனிதர்கள் பாகுபடுத்தப்படு வதும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என ஏற்றத்தாழ்வுகளை உருவாக் குவதும் நியாயமா? இன்னும் அறிவியலின் கதவைத் தட்டினால் கடவுளே இல்லை என்னும் தத்து வம் பேசப்படுவதைக் காணலாம். கடவுள் இல்லை என்போரும் இந்த உலகில் வாழ்கிறார்கள்.
ஆக மதத்தின் பெயரில் மனித நேயம் சூறையாடப்படுவதோ மன மகிழ்ச்சி காவு கொள்ளப்படுவதோ தவறான காரியம். நாம் செய்யும் நற்செயல்களால் உண்டான மகிழ்ச்சியில் இறைவனைக் காண லாம். விழுந்தவர்களைத் தூக்கி விட்டு பசித்தோர்க்கு உணவு கொடுத்து அழுவோரின் கண்ணீ ரைத் துடைத்து நாதியற்றோருக்கு ஆதரவளித்து வாழும்போது மனித நேயம் என்பது வெற்றிக் களிப்ப டையும் . இதை விடுத்து மதங்க ளின் பெயர் சொல்லி அடுத்தவரை நிந்திப்பதும் உயிரிழப்புக்குக் கார ணமாவதும் மானுட தர்மமா? சில மதங்கள் கடைப்பிடித்துவரும் தப்பான மனித வாழ்வுக்கு ஒவ் வாத விதிமுறைகளால் இன்று சமுதாயம் பேரிழப்புக்களைச் சத் திக்கிறது என்கிற உண்மையை மதவாதம் பேசுபவர்கள் அனைவ ரும் உணர்ந்து கொள்ள வேண் டும். சாவுஒன்றேஉண்மையானது. மகிழ்வுடன் வாழ மதக் கொள்கை களை விகாரமாக்காதீர்கள்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 'டிஜிட்டல்' மாய உலகைப் சரியாகப்புரிந்துகொள்ளுங்கள்

சமூகவலைத்தளங்களின்பரவல், அரசியல்உட்படப் பலதளங்களிலும்பெரும்உடைப்பையும்பாதிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியதைப் போன்றே, தனிமனித வாழ்க்கையிலும் இவை எல்லாவற்றையும் ஏற்படுத்துகிறது. சமூகத்தின்தார்மீகமதிப்புகளும்சிதைக்கப்பட்டமை இதில் மிகத்துன்பியலானது. சமூக ஊடகங்கள் அனைத்து எல்லைகளையும் கடந்தமை நன்மைகளைஏற்படுத்தியதைப்போன்றேதீமைகளையும்ஏற்படுத்தியுள்ளன.

எல்லாப் பக்கங்களிலும் உள்ள தீமைகளையும் புரிந்து கொள்ளவும் அவற்றை எதிர்கொள்ளவும் ஈழத் தமிழ்ச் சமூகம்தயாராகவேண்டியகாலச்சந்தியில்நின்றுகொண்டிருக்கிறது. ஆனால்அந்தஇடத்தில்தமிழ்மக்கள்சரியாக வழிநடத்தப்படுகிறார்களா என்பது கேள்விக்குரியதே!

போருக்குப் பின்னரான தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் வெளித்தாக்கங்கள்மிகப்பலமானவை. இதற்குமுன்னர் இந்தச் சமூகத்திற்குப் பரிச்சயமும் இல்லாதவை. அவற்றை எதிர்கொள்ள சமூகம் நன்கு பயிற்றுவிக்கப்படவேண்டியிருக்கிறது.

கடந்த சில தினங்களாக இளம் தாய் ஒருவர் தற்கொலை செய்துகொண்டமைதொடர்பானபதிவுஒன்றுமுகப்புத்தகத்தில் விரைவாகப் பரவி வருகின்றது. தன் மீதும் தனது சகோதரிகள் மீதும் அவதூறு பரப்பி விட்டார்கள் என்பதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தான் தற்கொலை செய்துகொள்கிறார் என்பதைக் காணொலியாகப் பதிவு செய்து அதனை பதிவேற்றியிருக்கிறார் அந்த இளம்தாய்.

"அடுத்தவர்குடும்பத்தைக்கெடுப்பதில்உங்களுக்குஅப்படியென்னசந்தோசம்?" என்று அவர்இந்தச்சமூகத்தின் முகத்தில்அறைந்தமாதிரிக்கேட்டிருக்கிறார். இனிமேல் இப்படிச்செய்யாதிருங்கள், அதற்கானபடிப்பினைதான் எனது சாவு என்பதாகவும் அவர் பதிவு செய்திருக்கிறார்.

தன்னுடையவாழ்க்கையைமட்டுமல்ல, தேவையின்றித் தன்னுடைய சகோதரிகளினுடைய வாழ்க்கையையும் இந்தச்சதிகாரர்கள் கெடுத்துவிட்டார்கள் என்கிறதுக்கத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமலேயே அவர் இந்தத் தவறான முடிவை எடுத்துள்ளார். அதனையும் அந்தக் காணொளியில் அவரே கூறுகின்றார்.

இந்தமிகத்தவறானமுடிவைஎடுப்பதற்குமுன்னர்அவர் ஒன்றைச்சிந்திக்கமறந்துவிட்டார். இதுபோன்றவக்கிர மனம்படைத்தவர்கள்எல்லாஇடங்களிலும்இருக்கவே செய்கிறார்கள். ஒவ்வொரு ஊர்களிலும், சந்திக்குச்சந்தி கூடிநின்றுஇப்படிவம்பளப்பவர்களைக்காணமுடியும். அவர்கள்தாங்கள்கேட்டவற்றையும்கற்பனைகளையும் திரட்டிஏதோதோபேசிக்கொண்டேதான்இருக்கிறார்கள்.

அன்றைக்குச்சந்தியில்இன்றுஊர்வம்பளந்தவர்கள்தான் இப்போது சமூக வலைத்தளங்களிலும் அதேபோன்ற காரியங்களைச்செய்கிறார்கள். அன்றும்தங்கள்நேரத்தை பக்குவமாகநல்லகாரியங்களில்செலவிட்டவர்கள்சமூக வலைத்தளங்களில் இன்றும்அதேபோன்றுதான்செயற்படுகிறார்கள்.

ஒருவேளைஇந்தஇளம்தாயைப்பற்றிச்சந்தியில்நின்று வம்பளப்பவர்கள்ஏதாவது பேசியிருந்தால்அவர்இலகுவில்அவர்களைக்கடந்துசென்றிருப்பார். இல்லையேல் கோபமிகுதியால்அவர்களுடன்நேரடியாகவாய்ச்சண்டை இட்டிருக்கவும்கூடும். ஆனால், முகப்புத்தகம்என்றதும் அதுஉலகம்முழுவதும்பரவியிருக்கும்என்கிறதவறான எண்ணத்தினால் ஒரு தவறான முடிவுக்கு உந்தப்பட்டுவிட்டார்.

முகப் புத்தகத்தில் வரும் தவறான விடயங்களை எல்லோரும்விரும்பிப்படிக்கிறார்கள்என்றுசொல்லமுடியாது. அதை விரும்புவோர் மட்டுமே தேடிப் படிக்கிறார்கள். அது ஊர்களிலும்வழமையானஒன்றுதான். அடுத்தவரின்அந்தரங்கம்பற்றியவதந்திக்கதைகளைவிரும்புவோர்அவற்றைத் தேடிக்கேட்டுஏனையோருக்கும்பரப்பவேசெய்கிறார்கள்.

சமூக வலைத்தளங்கள் என்பது இந்தச் சமூகத்திற்குள் ஏற்கனவே இருப்பவற்றின் மற்றொரு முகம்தான். எனவேஅங்கும்சிலர்இதேவேலையைச்செய்கிறார்கள். அதைத் தாண்டிய ஒரு பரிமாணத்திற்குள் சமூக வலைத்தளத்தில் இயங்குவோர் செல்ல முடியும் என்றாலும், எல்லோரும்அப்படியே இயங்குவார்கள் என்று உறுதிப்படுத்த முடியாது. எனவே அதில் வந்துவிட்ட அவதூறு ஒன்றுக்காக வாழ்க்கையே முடிந்துவிட்டது என்று நினைப்பது முட்டாள்தனம். அந்த முட்டாள் தனத்தில் இருந்துநமதுசமூகம்மீட்கப்படவேண்டும்.



# நுண்நிதி நிறுவனங்களால் நொந்து நூலாகும் நிலை!

செ.அன்புராசா அடிகள்

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் ஒருநாள், "சிறுப்பிட்டியில் கில்லாடிப் பெண் கைது" என்றதலைப்பில்உதயன்நாளிதழில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அதனைவாசித்தபோது 64 குடும்பப் பெண்களிடமிருந்து, ஒருவரிடமிருந்து 5000 ரூபா வீதம் என்ற ரீதியில் 3,20,000 ரூபாவை ஏமாற்றிப் பெற்றுக் கொண்ட 'கில்லாடிப் பெண்' ஒருவரைத் தாம் கைது செய்திருப்பதாகப் பொலிசார் தெரிவித்திருந்தனர் என விவரம் வெளியிடப்பட்டிருந்தது. அரச வங்கி ஒன்றில் வேலை பார்ப்பதாகப் பொய்யாகத் தம்மைஇனம்காட்டிக்கொண்ட அந்தப் பெண், வங்கியில் இருந்து ஒவ்வொரு வருக்கும் 5,00,000ரூபா வரையில் கடன் பெற்றுத் தருவ தாகக் கூறியே ஒவ்வொருவரிடம்இருந்தும்5000ரூபாவைப் பெற்றுள்ளார். பாதிக்கப்பட்ட பெண்கள் சிறுப்பிட்டி தெற்கு, சிறுப்பிட்டி மேற்கு, கைதடி, அச்செழு, புத்தூர், புத்தூர் கிழக்கு, காளியானைஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்கள் என மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது போன்ற வெவ்வேறு ஏமாற்றுச் சம்பவங்கள் அவ்வப்போது ஆங்காங்கே இடம்பெறுவதையும் செய்திகள் வாயிலாக அறிய முடிகிறது.

குறித்த இந்தச் சம்பவத்தோடு தொடர்புடைய செய்திக்கு 'கோதையினால் வாதைப்பட்ட பேதைகள்' என்ற தலையங்கமும்மிகப்பொருத்தமாகஅமைந்திருக்கும்.

ஒருவர்இருவர்ஏமாறலாம்! ஒரு பெண், ஏறக்குறைய ஒரே பிரதேசத்தைச் சேர்ந்த பல பெண்களைஇவ்விதம்ஏமாற்றுகிற அளவுக்கு எமது பெண்கள் புத்திக்கூர்மை அற்ற - எச்சரிக்கை உணர்வு அற்ற ஏமாளிகளா? என்ற கேள்வி மனதில் எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

இதுபோன்று, ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக்கூறிய இருவர், மதவாச்சியில் போலி முகவர் நிலையமொன்றைத் திறந்து ஏறக்குறைய 50 பேரிடம் தலா 50,000 ரூபா பணம் பெற்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றதை இங்கு நினைவுபடுத்துவது பலருக்கு ஒரு முன்னெச்சரிக்கை உணர்வை ஏற்படுத்துவதாக அமையும். இவ்வாறு, ஏமாற்றப்பட்டவர்களில் அனேகமானவர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தான் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது.

இன்றைய நவீன காலத்துக்கு ஏற்ப, புதுப்புது விதங்களில் வடிவமைக்கப்பட்ட ஏமாற்று வழிகளின் ஊடாக, தனிநபர்களும், நுண்நிதி நிறுவனங்களும் சாதாரண மக்களின் பணத்தைச் சுரண்டுவதற்குக் கங்கணம் கட்டி நிற்பது உணரப்படுகிறது.

இதனை மக்கள் நன்கு புரிந்து கொண்டு இவர்களின் ஏமாற்று வேலைகளுக்குள் சிக்காமல் தங்களைக் காத் துக்கொள்ள வேண்டியவர்கள் ஆகின்றார்கள்.

### நிதி நிறுவனங்களின் பெருக்கம் எதற்கு?

வங்கிகள், (லீசிங்) குத்தகைநிறுவனங்கள் (பினான்ஸ்), முற்கடன் வழங்கும் நிறுவனங்கள் என வடமாகாணத்தை மையமாகக்கொண்டு பல நுண் நிதி நிறுவனங்கள் தங்கள் அலுவலகங்களைத் திறந்து வைத்திருக்கின்றன. தங்கள் வருவாயைப்பெருக்கும்நோக்கில்தான் இத்தகைய நிலையங்களை, நிறுவிவைத்திருக்கிறார்கள்என்பதைப் புரிந்து கொள்ளாதவர்களாக எமது மக்கள், மாறியிருப்பதுதான் கவலையளிக்கிற விடயமாகும்.

இல்லையெனில், இத்தனை நுண்நிதி நிறுவனங் கள் வடமாகாணத்தில்மையம்கொள்ள வேண்டியது ஏன்? இத்தனை நுண்நிதி நிறுவனங்களும் வடமாகாணத்துக்குத் தேவைதானா? 2014ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 42 சதவீத பங்களிப்பைச் செய்த மேல் மாகாணத்துடன் ஒப்பிடுகையில், மிகக்குறைவான, 04 சதவீத உற்பத்தியையே வழங்கிய வடமாகாணத்தில் நுண்நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக இருப்பதாகத் தெரிய வருகிறது.

அவ்வாறாயின், இது எமது மக்களின் உழைப்பைச் சுரண்டுவதற்கான திட்டமிடப்பட்ட சதியா என்ற சந்தேகத்தை நுண்நிதி நிறுவனங்களின் பெரும் அதிகரிப்பு உருவாக்கியிருக்கிறது. எனவே தான், இந்தத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த அறிஞர் பெருமக்கள், சாதாரண ஏழைமக்கள் சுரண்டப்படாமலும், இத்தகைய நிதி நிறுவனங்களுக்கு இரையாகாமலும் இருக்க ஆக்கபூர்வ மான அறிவுறுத்தல்களை அவ்வப்போது அள்ளி வழங்கிக் கொண்டு இருக்கவேண்டிய மிகப்பெரும் கடப்பாட்டில் இருக்கிறார்கள்.

### மீற்றர் வட்டி!

இப்போது, வருவாயை அதிவேகமாகப் பெருக்க, 'மீற்றர் வட்டி' போட்டுத் தருகிறோம்" என்றுபோட்டிபோட்டுக்கொண்டு வீடுதேடிவருகிற ஏமாற்றுப் பேர்வழிகளிடம், இருப்பதையும் பறிகொடுத்துவிட்டுச் சிலர் மன நோயாளிகள் போல வாய் புலம்பித் திரிவதாகவும் சொல்லப்படுகிறது.

வங்கிகள், தமது இலாபத்தைக் கருத்தில் கொண்டிருந்தாலும், மக்களின் முன்னேற்றத்திலும் அக்கறை செலுத்துகின்றன என்

பதை மறுக்க முடியாது. அவை நம்பகத்தன்மை வாய்ந்தவை. வைப்புச் செய்கிற பணத்துக்கு உறுதிப்பாடு கிடைக்கிறது. அதேபோன்றுகடன்பெறுகிறபோது அதன் சாதக பாதகங்களை வங்கி அதிகாரிகள் விளக்கிக் கூறுவதால், கடன்பெறுபவர்கடனைமீண்டும் செலுத்துவதற்கான அனுகூலங்களைப் பரிசீலித்து முடிவு செய்து அவற்றைப் பெறக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

**நிதிநிறுவனங்களால் சீரழிவோர்**

'நிதி நிறுவனங்களால் சீரழியும் யாழ். மக்கள்' என்ற தலைப்பில், 2015ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் உதயன் நாளிதழ் பத்தி எழுத்துப் பகுதியில் "வடக்கு மாகாணத்தில் பொருளாதார ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்அடிப்படையில், நிதிநிறுவனங்களின் ஆதிக்கத்தால் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் கடன் சுமைகளில் இருந்து மீளமுடியாமல் தலைமறைவாகி இருக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளார்கள்" என நிதி நிறுவனங்களால் யாழ். மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் துறை சிரேஷ்ட விரைவுரையாளரொருவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

'கழுத்துப்பட்டி' கட்டிக்கொண்டு ஏமாற்றுபவர்கள், எப்படியும் தாம் சார்ந்த நிறுவனத்துக்குஇலாபம்ஈட்டிக்கொடுக்கும் இலக்குடன் பல்வேறு ஏமாற்று வழிகளில் செயற்படுவதைக் காணக்கூடியதாகஇருக்கிறது. 20,30ஆண்டுகளுக்கு முன்புசேர்ட்டுக்கு மேல் அணியும் கழுத்துப் பட்டியை அணிபவர்களாக இருந்தவர்கள், மிகப் படித்தவர்கள், உயர் அதிகாரிகள், வைத்தியர்கள் போன்றவர்கள்தான்.

**சீட்டுக்களால் சீரழிவோர்**

அண்மையில் வெளிநாட்டிலிருந்து எனது நண்பர் ஒருவர் காணொளி ஒன்றை 'வைபர்'ஊடாக அனுப்பி வைத்திருந்தார். அந்தக் காணொளியில் உள்ள பாடலொன்றை ஈழத்தைச் சேர்ந்த ஒருவர் பாடியுள்ளார். அதன் உள்ளடக்கம் சீட்டுக் கட்டுவது பற்றியதாகும். புலம்பெயர் நிலத்தில் சீட்டுக்களால் சீரழிந்தவர்களும், சீட்டுக்களை எடுத்துக்கொண்டு நாடுவிட்டு நாடு கடந்து ஒளிந்தோடி வாழுகிற எம்முடைய வீரர்களினதும் வீராங்கனைகளினதும் வரலாறு மிக நீண்டது. சீட்டைத் தொடக்கியவன்(ள்) வாழமுடியாமல் வீழ்ந்துபோனதும், சீட்டை எடுத்துக்கொண்டு ஓடியவன்(ள்) வீடு வாங்கி, காணிபூமி வாங்கி, கடை போட்டு, வட்டிக்குக் கொடுத்து வாழ்வதும் எம்மில் பலர் அறியாததொரு விடயம்!

உள்நாட்டிலும், 'எமது சொந்தக் கதை சோகக்கதை'யாய்இவ்விடயம்தொடர்வதாகத்தான் தெரிய வருகிறது. இந்தச்சீட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கும்'குத்தகை நிறுவனங்களுக்கும் இடையில் நிறையத் தொடர்புகள் உண்டு என்பதால்தான் சீட்டுக்கட்டுகிற விடயமும் இங்கு சேர்த்துக் குறிப்பிடப்படுகிறது. ஆயினும், சீட்டுக்கட்டும் நோயிலிருந்து இன்றும் எமது சமூகம் விடுபட்டதாகத் தெரியவில்லை! அவ்வாறான ஓர் அனுபவத்தைத் தான் இந்தக் காணொளி தருகிறது.

**'ஐயையோ சீட்டுக்காசு'**

அந்தக் காணொளியில் உள்ள பாடல் வரிகள் உங்கள் வசதிக்காக இங்கே பதி விறக்கம் செய்யப்பட்டுள்ளன. (இராகத்துடன் பாடிப்பாருங்கள்: படம் கும்கி, பாடல்மெட்டு-'ஐயையோஆனந்தமே...'): "ஐயையோ சீட்டுக்காசு, தாச்சிக்காரன்சுத்திப்போட்டான், ஓடியோடி உழைச்சு, நான் சேத்து வைச்ச சீட்டு, மாதம் மாதம் கட்டி, நான் போட்டு வைச்ச சீட்டு, அவனோ அதை எடுத்து, ஓடி ஐயோ போட்டான் ஐயையோ சீட்டுக்காசு... சரணம்1: ஊரிலிருந்தவன் இங்கு வந்தும், அந்தக் கள்ளத்தனம் மாறயில்ல, இஞ்ச வந்தும் அதே சுத்துமாத்து, அவனவிட்டுப்போகல்ல, நான் வீடு வேண்டச் சீட்டுப்போட்டனான், நான் கடைசிச் சீட்டு எடுக்க இருந்தனான், அறுவான், பத்தியெரிவான், ஐயையோ சீட்டுக்காசு... சரணம்2: என்ர மனிசியும் கொழும்பில நிண்டு இன்னும் வரவுமில்லை, நான் வீடு வேண்டக் கட்டிவைத்த அந்தச் சீட்டைத் தரவுமில்லை, அவன் காசை வேண்டி ஓடிப்போயிட்டான், இத நினைச்சு எனக்கு தலையில் முடியும் போட்டுது, அப்பாஎன்ரகாசு, ஐயோஅது போச்சு - ஐயையோசீட்டுக்காசு..."

இந்தப் பாடலை, வாசகர்கள் கட்டாயமாக காணொளியில் பார்க்கவேண்டும். பார்த்தால், மற்றவர்களைப் பார்க்கத் தூண்டுவதோடு சீட்டுக்களால் சீரழிந்துபோகும்நம்மவர்களின்நிலமைகளைக் கொஞ்சமேனும் புரிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டும். இந்தப் பொறியில் இருந்து தாங்களாகத் தப்பித்துக் கொள்வதற்கான வழி புலப்படும். கையில்இருந்தபணத்தைப்பறிகொடுத்துவிட்டுப்பிலாக்(பலா)காயைப் பாத்த பேயன்மாதிரித் திரிகிற எம்மவரைப் பார்த்து இதற்குமேல் என்ன கூறுவதென்றே தெரியவில்லை!

உண்மையில், 'தகுதியைமீறி வாங்கப்படும் கடனுக்கு வட்டியாய் மானத்தையும்சேர்த்துக்கட்டவேண்டிவரும்' என்ற முகநூல் நண்பர் ஒருவரின் வரிகளில் நிறைய அர்த்தங்கள் இருப்பதாகவே தெரிகிறது. கடன் வாங்குவோர், 'குத்தகை' பெறுவோர், ஏன் சீட்டுக் கட்டுவோர் போன்றோர் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய வரிகள் இவை.

**குத்தகையால் விளைந்த வில்லங்கங்கள்**

'குத்தகை'கொடுக்கல் வாங்கல்களால் பல்வேறுபட்ட வேதனைகளும், துன்பங்களும், பிரச்சினைகளும் சமுதாயத்தில் இன்று நிலவி வருவது கண்கூடு. பெற்றுக்கொண்ட முதலையும், முதலுக்குரிய வட்டியையும், வட்டியினுடைய குட்டியையும் கொடுக்க முடியாத சூழலில் வாழுகிறவர்கள், ஊரை விட்டு வேறு இடங்களுக்குச் சென்று மறைந்து வாழுதல், வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடுதல், வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து தவறான முடிவெடுத்தல் போன்றவற்றால் இருக்கிற துன்பங்களோடு இன்னும் அதிக துன்பங்களைத் தாங்களே தேடிக்கொள்வதோடு, தங்களை நம்பி வாழும் குடும்பத்தவர்களுக்கும் உறவுகளுக்கும் துன்பத்தைத் தேடிக்கொடுக்கிறார்கள் என்பது நடைமுறையில் காண்கிற ஒருவிடயமாக இருக்கிறது.

மேலும், குடும்பங்களில் பல பிளவுகளும் விரிசல்களும் இக்கடன் தொல்லைகளால் ஏற்படுகின்றன. இழந்துபோனதை மீட்க அல்லது வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப சட்ட விரோதமாக, சமூக வாழ்வுக்கு ஒவ்வாத, நெறிபிறழ்வான முறைகளில் முயற்சி செய்யத் தலைப்படுகிறார்கள். இது, பலகுடும்பங்களின் நெறி பிறழ்வுக்கு வழிவகுத்திருக்கிறது. செய்துவந்த தொழிலையே தொடரமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கும், வேறு முயற்சிகளில் ஈடுபடமுடியாத மனோநிலைக்கும் இவ்வாறானவர்கள் தள்ளப்படுகிறார்கள்.

இத்தகைய நுண்நிதி நிறுவனங்களின் உச்ச இலக்கு, பணம் 'கறப்பதையே' நோக்காகக் கொண்டிருப்பதால், பணத்தைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழலில், எவ்வித விதிவிலக்கும் இல்லாமல் கடன் பெற்றவரின் நிகழ்காலத்துச் சூழ்நிலைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல், கொடுத்ததைப் பறித்துக்கொண்டு செல்கிறார்கள். எனவே, நுண்நிதி நிறுவனங்களில் கடன்கள், குத்தகைக் கடன்களைப்பெறுவதைத்தவிர்ப்பது, சாதாரண மக்கள் தங்கள் இருப்பை இழந்து போகாதிருக்கத் துணை செய்யும்!




ஆனால், இப்போதுமேற்சொன்னவர்களோடு பல வகைப்பட்ட ஏமாற்றுப் பேர்வழிகளும்'கழுத்துப்பட்டி' கட்டிக் கொண்டு பணமோசடி செய்ய வீடு தேடிக்கூட வருகிறார்கள் என்பதை மக்கள்புரிந்துகொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே, மக்கள் இந்த விடயத்தில் மிக விழிப்புடன் நடந்துகொள்ளவேண்டி இருக்கிறது.

**நுண்நிதி நிறுவனங்களை மூடுமாறு ஆர்ப்பாட்டம்**

நுண்நிதி நிறுவனங்களை மூட வலியுறுத்தி வவுனியாவில் கடந்த வருடம் ஐப்பசி மாதத்தில் ஒரு நாள் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது. நுண்நிதி ('மைக்ரோ கிரடிற்') நிறுவனங்கள், 'குத்தகை நிறுவனங்கள் பலருக்குக் கடன்களை வழங்குகின்றன. குறிப்பாக குடும்பப் பெண்களை இலக்கு வைத்து, அவர்களின் உழைப்பை இலகுவாகச் சுரண்டிச் செல்லும் விதமாக இந்நுண்நிதி நிறுவனங்களால் கடன்கள் வழங்கப்படுகின்றன. இதனால், குடும்பப் பெண்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் இலகுவாக உள்ளாக்கப்படுகின்றனர். குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாகும் நிலமைக்குத் தள்ளப்படுகின்றன எனக் கோடிட்டுக் காட்டும் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பு', மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்கு எதிராகக் குறித்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தமை அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது.

> நுண்நிதி நிறு வனங்களை மூட வலியுறுத்தி வவுனியாவில் கடந்த வரு டம் ஐப்பசி மாதத்தில் ஒரு நாள் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது. நுண்நிதி(மைக்ரோ கிரடிற்) நிறுவ னங்கள், குத்தகை (லீசிங்) நிறுவனங்கள் பல ருக்குக் கடன்களை வழங்குகின்றன. குறிப்பாக குடும்பப் பெண்களை இலக்கு வைத்து, அவர்களின் உழைப்பை இலகுவாகச் சுரண்டிச் செல்லும்விதமாக இந்நுண் நிதி நிறுவனங்களால் கடன்கள் வழங்கப்படுகின்றன.



# வாசகர் திருமுகம்

## பாராமுகம் ஏனோ?

போரின் அவலங்களின் பின்னர், வடபகுதிக்கான ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியமை, பல சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்து பழக்கப்பட்ட எமது மக்களுக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தந்தாலும், அவர்கள் தற்போதும் இடையூறுகளின் மத்தியிலேயே ரயில் பயணங்களைச் செய்ய வேண்டியுள்ளது. கிடைப்பதே போதும் என்ற திருப்தியில் வாழப்பழகிக்கொண்ட எம்மவர்கள், தற்போது தங்கள் வசதிக்கேற்ப இருக்கைகள் பதிவு செய்து பயணிக்க முடிந்தாலும், முதியோர் மற்றும் சிறுவர்கள் மிகுந்த சிரமங்களுடன், பயணிக்க நேர்கிறது. மின் விசிறிகள் இயங்காமை, எதிரே பொருத்தி இருக்கும் உணவை வைத்து உண்பதற்கான சிறிய மேசைகள் கழன்று விழும் நிலை,, துர்நாற்றம் வீசும் கழிப்பறைகளால் அருவருப்பைச் சகித்துக் கொண்டு பலமணிநேரம் பயணிக்க நேர்வது போன்ற சிரமங்கள் பழைய நினைவுகளைக் கிளறி விடுகின்றன. எம்மில் சிலர் கச்சான் கோதுகள், வெற்று குளிர்பான டப்பாக்கள் என்பவற்றால் இருக்கைகளுக்கு அருகே குப்பைசேர்ப்பதும் சூழல் பாதிப்பு அதிகரிக்கக் காரணமாகின்றது. ஆண்டுகள் பல கடந்தும், பழையவை திருத்தப்படாமை, இதுபோதும் உங்களுக்கு என்ற மனப்பாங்கில் நல்லாட்சி அரசும் பாராமுகம் காட்டுவதும், சொகுசு வாகனங்களில் பயணிக்கும் எமது தலைவர்களும் சாதாரண பொது மக்களின் குறைபாடுகளை கவனத்தில் கொள்ளாது தமக்கு கிடைப்பதே லாபம் என்ற நோக்கோடு செயற்படுவதும், ஆரம்ப வகுப்பு சிறுவர்கள் போன்று ஆளை ஆள் குற்றம் காண்பது, சண்டையிடுவது போன்றவையும் பல வருடங்களாய் நடந்தேறும் கசப்பான உண்மை நிகழ்வுகள். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளாமல் எமது அரசியல் தலைமைகள் இது விடயத்தில் அக்கறை இல்லாது இருப்பது விசனம் தருமொன்றாகும். சம்பந்தப்பட்டோருடன் கலந்து பேசி எமது மக்கள் சிரமங்களற்ற ரயில் பயணம் மேற்கொள்ள வசதி செய்து கொடுப்பது எமது அரசியல் தலைமைகளது பொறுப்பல்லவா? தமது பொறுப்பை உணர்ந்து இவர்கள் இது விடயத்தில் காணப்படும் குறைபாடுகளைப் போக்கி பயணிகளுக்கு உதவ முன்வருவார்களா?

*எஸ். சுப்பிரமணியம்*
*கல்வயல், சாவகச்சேரி*

**அடிக்கிற வெயிலுக்கு வெளியே போயிட்டு வீட்டுக்கு வந்தால் முகம் இப்படித்தான் தீஞ்சிடுது...**



**அடிச்சதால் அவர் மண் எண்ணெய் போத்திலை எடுத்திட்டாரு.... அய்யய்யோ அப்புறம்?**



**ரேஷன் கடைக்குப் போய் எண்ணெய் வாங்கிட்டு வந்ததால விட்டுட்டேன்..**

**சைக்கிளில் போனால் எந்த பொண்ணும் பார்க்க மாட்டேங்குறா. அதுதான் நானும் வாங்கிட்டேன்....**






'லேடி சுப்பர் ஸ்ரார்' என்று அன்போடு அழைக்கப்படும் நயன்தாராவுக்கு அவரது ரசிகர்கள் 6 அடி உயரத்துக்கு பதாகை வைத்து அசத்தியுள்ளனர். இந்திய சினிமா வரலாற்றில் முதன் முறையாக 60 அடி பதாகை வைக்கப்பட்ட முதல் நடிகை என்ற பெருமையைப் பெற்றுள்ளார் நயன்தாரா. நயன்தாரா நடிப்பில் உருவான 'டோரா' திரைப்படம் உலகம் முழுவதும் வெளியாகி வெற்றி நடைபோட்டு வருகிறது. தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள திரையரங்குகளில் ரஜினி, கமல், விஜய், அஜித் போன்ற முன்னணி கதாநாயகர்களுக்கு வைக்கப்படும் பெரிய பதாகைகள் போன்று நயன்தாராவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.




இந்தப் பதாகை சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது.

தமிழ் சினிமாவில் கதாநாயகர்களுக்கு இணையான கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து நாயகிகளின் நாயகியாகத் திகழ்ந்து வரும் நயன்தாராவை ரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர்.

இந்த ஆண்டு நயன்தாரா நடிப்பில் வெளியான முதல் படமான 'டோரா' திரைப்படம் திகில் அம்சங்களுடன் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஏசுதாஸ்** @samyesudoss · 16h

பணத்தால் எல்லாவற்றையும் சாதித்து விடலாம் என்று எண்ணி விடாதீர்கள். பிணமான பிறகு உங்களால் மண்ணுக்கு உரமாகக் கூட முடியாது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** மற்றவரை நம்பி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். கண்களின் பாதுகாப்பில் தகுந்த கவனம் தேவை. நண்பரால் உதவி உண்டு.

**இடபம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். லாபம் உயரும். பணியாளர்கள் பணியை விரைந்து முடிப்பர். பெண்கள், குடும்ப வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வர்.

**மிதுனம்:** சுய கௌரவத்துக்காகப் பணம் செலவழிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். மனைவியின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவார்கள். பெண்கள் ஆடை, நகை வாங்குவர். அரச வகையில் நன்மை உண்டாகும்.

**கன்னி:** குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். உறவினரால் உதவி உண்டு.

**துலாம்:** மற்றவர் விடயத்தில் தலையிட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள் ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர். பெண்கள், குழந்தைகளின் நலனில் அக்கறை கொள்வர். எதிர்பார்த்த சுபசெய்தி வந்துசேரும்.

**தனுசு:** இனிய பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர். அரசு வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பெண்கள் ஆடை, நகை வாங்குவர்.

**மகரம்:** முக்கிய பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆளாகலாம். அடுத்தவர் பார்வையில் அதிக பணம் செலவழிக்க வேண்டாம்.

**கும்பம்:** பெற்றோரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமார். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பிள்ளைகளின் செயல்பாடு ஆறுதல் அளிக்கும்.

**மீனம்:** தடைகளை முறியடித்து முன்னேறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்பர்.


# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | | 5 | | | |
| | 5 | 2 | | 7 | | 4 | 3 | |
| 7 | | | | | | | | 1 |
| | | 6 | 4 | | 7 | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| | | 4 | 8 | | 1 | 7 | | |
| 4 | | | | | | | | 2 |
| | 8 | 3 | | 1 | | 6 | 9 | |
| | | | 5 | | 8 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 4 | 5 | 9 | 7 | 6 | 1 | 3 |
| 5 | 1 | 9 | 3 | 6 | 8 | 4 | 7 | 2 |
| 3 | 7 | 6 | 2 | 1 | 4 | 5 | 9 | 8 |
| 4 | 8 | 7 | 9 | 5 | 1 | 3 | 2 | 6 |
| 1 | 6 | 3 | 4 | 7 | 2 | 8 | 5 | 9 |
| 2 | 9 | 5 | 8 | 3 | 6 | 1 | 4 | 7 |
| 7 | 4 | 2 | 6 | 8 | 5 | 9 | 3 | 1 |
| 6 | 3 | 1 | 7 | 4 | 9 | 2 | 8 | 5 |
| 9 | 5 | 8 | 1 | 2 | 3 | 7 | 6 | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



**நோயாளி:** ஒரு மாசமா என்னால் வாயைத் திறக்கவே முடியலை..

**மருத்துவர்:** என்னாச்சு?

**நோயாளி:** போன மாசம் எனக்கு கல்யாணம் ஆகிடுச்சு.




ராசிகளுக்கான

# சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

## மேடம்

புத்தாண்டை வெற்றியோடு தொடங்கவுள்ளீர்கள். 2017ஆம் ஆண்டில் வரவு அதிகரிக்கும். வரவு இருந்தாலும் அவசர தேவைக்கு எடுத்து உபயோகிக்க இயலாது.
கண்ணுக்குத் தெரியாத வகையில் சேமிப்பு உயருமே அன்றி, அன்றாட செலவுகளுக்கு உதவாது. இருப்பினும் மனோ தைரியம் கூடும். எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள்.
அதேநேரத்தில் எந்தவொரு விடயத்திலும் உடனடி முடிவுகளைத் தவிர்க்கவும். எதையும் ஒருமுறைக்கு இருமுறை ஆராய்ந்து, குடும்பப் பெரியவர்களுடன் கலந்து ஆலோசித்துப் பின்னர் முடிவெடுத்தால் காரியத்தில் கால தாமதம் இருந்தாலும் வெற்றி உண்டு.
வாக்குறுதிகளைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே ஒற்றுமையுணர்வை வளர்க்கப் பாடுபடுவீர்கள். உடன்பிறந்தோருடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். சொத்து, பாகப்பிரிவினை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் உங்களுக்குச் சாதகமாக அமையும். தாயார் வழி உறவினர்களுக்கு உதவப்போய் தர்மசங்கடமான சூழலுக்கு ஆளாக நேரிடும். அதனால் வருத்தம், ஆதங்கம் அதி கரிக்கும்.
இருப்பினும் எதையும் திடமாக யோசித்து தீர்க்கமாக முடிவு எடுப்பீர்கள். திடீர் விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும்.
எதிர்பார்த்த கடனுதவி தடையின்றிக் கிட்டும். இதர கடன்பிரச்சினைகளைக் கட்டுக்குள் கொண்டு வரு வீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி புதிய சேமிப்பில் ஈடுபடுவீர்கள்.
திருமணத்துக்காகக் காத்திருப்போரின் இல்லங்களில் கெட்டிமேளம் கொட்டும். ஆன்மிக, தர்ம காரி யங்களில் ஈடுபடுவீர்கள். பயணங்களால் ஆதாயம் இருக்கும். ஆனால் பயணத்தில் கூடுதல் எச்சரிக்கை அவசியம்.
மாணவர்கள் ஞாபக மறதியைத் தவிர்க்க கூடுதல் எழுத்து, கூட்டுப் பயிற்சி நன்மை தரும்.
மருத்துவ துறையினர், சமையல் மற்றும் கட்டடக் கலைஞர்களுக்கு அதிர்ஷ்டமான ஆண்டாக அமையும். உங்கள் பேச்சு மற்றவர்களால் தவறாகப் பொருள் கொள்ளப்படும் வாய்ப்பு உள்ளதால் பெண்கள் அளவோடு பேசுவது நல்லது. எந்தவொரு விடயத்தையும் கணவரின் ஆலோ சனையின் பேரில் முடிவெடுத்து செய்து வருவது உத்தமம்.
உடல்நிலையில் கவனம் அவசியம்.
தொழிலில் கூடுதல் முயற்சியால் மட்டுமே உங்களால் எதையும் சாதிக்க முடியும். ஏற்றுமதி, இறக்குமதி, இரும்பு, கம்பி, பழைய சாமான்கள் வியாபாரம், சிமெந்து போன்ற தொழில்கள் ஆதா யத்தைக் கொடுக்கும்.
உத்யோகத்தர்கள் பதவி உயர்வுடன் இடமாற்றத்தைச் சந்திக்க நேரிடலாம்.



# கோடை வெயிலை சமாளிக்க பயனுள்ள வழிமுறைகள்

கோடை என்று வந்து விட்டாலே கை நிறைய பிரச்சினைகள்தான். உடல் பாதிப்பு, சரும பாதிப்பு, தலைமுடி பாதிப்பு, உஷ்ண கட்டிகள் என ஒரு ஆறு மாதம் நம்மை புரட்டி எடுத்துவிடும். ஆகவருடந்தோறும் கோடையின் கடுமை கூடிக் கொண்டே போவதால் ஒவ்வொரு வருடமும் பாதுகாப்பு முறைகளை வலியுறுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

- ◆ சதை வலி, வயிற்று வலி, கை, கால்கள் வலி இவை அனைத்தும் இக்காலத்தில் சர்வ சாதாரணமாய் ஏற்படுகின்றது.
- ◆ கொட்டும் வியர்வை, அதை தொடர்ந்து சோர்வு, தலை சுற்றல், தலைவலி, வயிற்று வலி, சதை பிடிப்பு என்று உடலில் நீர் வற்றுவதால் அதிக பாதிப்புகள் ஏற்படுகின்றன.
- ◆ வாய் உலர்ந்து விடுகின்றது. கண் வறண்டு சருமம் வறண்டு வியர்வை கூட இல்லாத நிலைக்கு உடல் காய்ந்து விடுகின்றது. சதைகளில் பிடிப்பு, வயிற்றுப் பிரட்டல், படபடப்பு போன்றவை ஏற்படுகின்றன.
- ◆ அதிக நேரம் வெயிலினில் இருந்தால் சருமம் கரி போல் கறுத்து விடுகின்றது.
- ◆ உடல்முழுவதும் வேர்குருவும் அதில் ஏற்படும் கிருமி தாக்கு தலால் அரிப்பும் ஏற்படுகின்றது.
- ◆ பாதங்களில் கிருமி தாக்குதல் ஏற்படுகின்றது.
- ◆ பொடுகு தொல்லை அதிகமாகி சொறிவதால் தலை புண்ணாகி விடுகின்றது.
- ◆ இக்கடுமையானகோடையில்உடல்செரிமானத்திற்கு எது எளிதோ அதையே உணவாகக் கொள்ள வேண்டும். மோர், கொழுப்பில்லாத தயிர், நீர் சத்து நிறைந்த பழங்கள் இவற்றினை உட்கொள்ள வேண்டும்.

# மகிழ்ச்சியின் ரகசியங்களை தெரிந்து கொள்ளுங்கள்



**மகிழ்ச்சி மனிதர்கள்:**
எப்போதும் சோகத்திலும் விரக்தியிலும் புலம்பிக்கொண்டிருப்பவர்களுடன் இருந்தால் எம்மையும் அந்த 'வியாதி' தொற்றிக்கொள்ளும். நாமே தேடித் தேடி சோக நினைவுகளை மீட்டு, சோக இசையை வாசித்துக்கொண்டிருப்போம். எனவே எப்போதும் உற்சாகமாக, மகிழ்ச்சியாக இருக்கும் மனிதர்களுடன் பழகுங்கள். உங்களையும் மகிழ்ச்சித் தீ பற்றிக்கொள்ளும்.

**போதை பாதை:**
கடுமையாக உழைப்பவர்களும், எப்போதும் நெருக்கடியில் பணிபுரிபவர்களும், கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்கிறேன் என்று அந் தந்த நாளின் முடிவில் மது போதை போன்றவற்றை நாடுகிறார்கள். இது மிகவும் தவறு. இது ஆரம்பத்தில் அமைதி, மகிழ்ச்சி தருவது போலத் தோன்றினாலும், நாளடைவில் உடல் நல, மனநல பாதிப்புகளை ஏற்படுத்தி மகிழ்ச்சியை ஒட்டு மொத்தமாகச் சூறையாடிவிடும்.

**சுற்றுலா:**
அடிக்கடி வெளியிடங்களுக்குச் சென்றுவருபவர்களும், சுற்றுலாவில் நாட்டமுள்ளவர்களும் அதிக மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறுகிறது ஓர் ஆய்வு. புதிய இடம், புதிய நபர்கள் எப்போதுமே ஓர் உற்சாகம் தருவார்கள். எனவே, வாரயிறுதிச் சுற்றுலாவாக இருக்கட்டும், ஒரு வார காலச் சுற்றுலாவாக இருக்கட்டும். அடிக்கடி எங்காவது சென்று வாருங்கள்.

## வரலாற்றில் இன்றைய தினம்

### 06.04.2017

1385 - போர்த்துக்கல் அரசராக முதலாம் யோன் நியமிக்கப்பட்டார்

1580 - இங்கிலாந்து வரலாற்றில் பெரிய நில நடுக்கமொன்று பதியப்பட்டது

1793 - பிரான்ஸியப் புரட்சியின்போது மக்கள் பாதுகாப்பு கமிட்டி குடியரசின் குரலாக ஒலித்தது

1841 - வில்லியம் ஹென்றி ஹரிசனின் சாவை அடுத்து இரண்டு நாள்களின்பின் அமெரிக்க அரசதலைவராக ஜோன் ரைலர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

1869 - செலுலோயிட்டுக்கான காப்புரிமம் வழங்கப்பட்டது

1896 - ஏதென்சில் முதலாவது நவீன ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கப்பட்டன. உரோமப் பேரரசர் முதலாம் தெயோடெஸிசால் 1,500 ஆண்டுகளுக்கு முன்தடை செய்யப்பட்ட நிலையில் முதன்முதலாக நவீன ஒலிம்பிக் விளையாட்டுக்கள் கொண்டாடப்பட்டன.

1909 - வட துருவத்தை றொபேட் பீரி மற்றும் மத்தியூ ஹென்சன் சென்றடைந்தனர்.

1917 - முதலாம் உலகப்போரில் ஜேர்மனி மீது அமெரிக்கா போர்ப் பிரகடனம் செய்தது.

1926 - ஐக்கிய விமானச்சேவையின் தொடக்கமான வார்ணி விமானசேவை தனது முதலாவது வர்த்தக ரீதியிலான பறப்பை மேற்கொண்டது

1930 - மண் மற்றும் உப்பைக் கையிலேந்தி பிரித்தானிய சாம்ராச்சியத்தின் அத்திபாரத்தை ஆட்டம் காணச் செய்யப் போகிறேன் எனக் கூறி காந்தி உப்பு சத்தியாக்கிரகத்தை தொடங்கினார்.

## நாளை

**பங்குனி-25**
வியாழக்கிழமை -07.04.2017
திதி: ஏகாதசி மு.ப.11.08
நட்சத்திரம்: மகம் பி.இ.01.11
சுபநேரம்:06.08-07.09 வரை
ராகுகாலம்:12.09-01.39 வரை

### பத்திரிகைச்...

ஒருவரான அமைச்சர் நிமல் சிறிபாலடிசில்வா கொந்தளித்தார். குழுவில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் தமிழ்ப் பத்திரிகைகள் தவறாகச் செய்தி வெளியிட்டுள்ளன எனத் தெரிவித்து, அந்தப் பத்திரிகைகளை வழிநடத்தல் குழுவின் ஆய்வுக்காகத் தூக்கிப் போட்டு இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.

வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று ஆரம்பமானதுமே, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொழும்பிலிருந்து வெளியாகும் மூன்று தமிழ்ப் பத்திரிகைகளை தூக்கிப் போட்டார். வழிநடத்தல் குழுவின் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வு தொடர்பாக மூன்று பத்திரிகைகளும் முன்பக்கத்தில் முக்கிய செய்தியைப் பிரசுரித்துள்ளன என்றும், அவை தவறான திரிபுபடுத்தப்பட்ட தகவல்கள் என்றும் சுமந்திரன் கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பொதுவாக்கெடுப்புக்குத் தயாரில்லை என்றும், அரசமைப்புத் திருத்தத்திற்கு மாத்திரமே சுதந்திரக் கட்சி இணங்கும் என்றும் வெளியான செய்திகள், சுதந்திரக் கட்சிக்கு எதிரானவை என்று அந்தக் கட்சியை வழிநடத்தல் குழுவில் தலைமை தாங்கும் உறுப்பினர் நிமல் சிறிபால டிசில்வா இதன்போது தெரிவித்துள்ளார்.

"அரச தலைவரின் நிலைப்பாடும், கட்சியில் உள்ள எங்களின் நிலைப்பாடும் வேறு வேறாக இருக்கலாம். அதிகாரப் பகிர்வு, தேர்தல் முறைமை மறுசீரமைப்பு, நிறைவேற்று அதிகாரம் என்பன தொடர்பில் வழிநடத்தல் குழுவில் ஆராயப்பட்ட பின்னரே அரசமைப்பில் மாற்றம் செய்யப்பட வேண்டும். இதற்காக பொது வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டியிருந்தால் போகலாம். நாம் அரசியல்வாதிகள். பொதுவாக்கெடுப்புக்குச் செல்வதாக இருந்தால் அதில் வெற்றி பெற வேண்டும். அதற்கான சரியான பரப்புரையை மேற்கொள்ள வேண்டும். இவற்றையும் கருத்தில் எடுத்தே பொது வாக்கெடுப்புக்குச் செல்ல முடியும். அதற்காக அதிகாரப் பகிர்வுக்கு நாம் எதிரானவர்கள் இல்லை" என்றார் நிமல்.

பத்திரிகைகளில் வெளியான செய்தி பொய்யானது என்று வழிநடத்தல் குழுவினால் உத்தியோக பூர்வ அறிக்கை அனுப்பப்பட வேண்டும் என்று தான் கோரியதற்கு வழிநடத்தல் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் இணங்கினர் என்று சுமந்திரன் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார். அதன் வரைவை தயாரித்து வழங்கும் பொறுப்பும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.(உ-5)

### காணாமற்போனோர்...

உறவினர்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றமை குறித்துக் கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனோரைக் கண்டுபிடிப்பதற்காக நாடாளுமன்றில் சட்டம் ஒன்று நிறைவேற்றப் பட்டுள்ளது. அவ்வாறு நிறை வேற்றப்பட்ட தோடு சரி. அதனைத் தொடர்ந்து எதுவும் நடக்கவில்லை.

அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் அது சபாநாயகரால் கையொப்பமிடப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்பட வேண்டும். ஆனால்,அந்தச் சட்டம் இன்னும் அனுப்பப்படவில்லை. அவ்வப்போது எழும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு செய்யப்படுகின்ற வேலைகளில் ஒன்றுதான் இந்தச் சட்டவரைவு நிறைவேற்றம்.

இதனால் காணாமற்போனோர் அலுவலகமும் அமைக்கப்படவில்லை; காணாமல் போனோரைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளும் தொடங்கப்படவில்லை. காணாமற்போனவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த அலுவலகம் அமைக்கப்படவில்லை என்றால் இந்தப் போராட்டங்கள்,பிரச்சினைகள் முடிவின்றித் தொடருமே தவிர ஒருபோதும் முடியாது. ஆகவே, அரசு மக்களை ஏமாற்றாது உடனடியாக காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்க வேண்டும். தமிழர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை உடன் நிறைவேற்ற வேண்டும்.என்றார். (து-3)

காளிகாதேவி ஆலயம் மல்லாகம்

**பொதுக்கூட்ட அறிவித்தல்**

நாளை (07.04.2017) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்ட பத்தில் பொதுக்கூட்டம் இடம்பெறும்.

எனவே மகாசபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர், பரிபாலனசபை,
காளிகாதேவி ஆலயம், மல்லாகம்.

## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு மகாதேவன் (ஆசாரியார்)



யாழ். காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு மகாதேவன் நேற்று (05.04.2017) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் காந்தமலரின் அன்புக்கணவரும் நளாயினி, கல்யாணி, கவிதா, சாந்தன், விஜிதா, மனோ ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் களபூமி தில்லைமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கரப்பிட்டியந்தனை,**
**களபூமி காரைநகர்.**

தகவல்:
**குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி




03.04.2017 அன்று
அமரத்துவம்
அடைந்த
**திருமதி**
**இராசாத்தி ஜெயம்**
அவர்களின் பிரிவால்
துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**15, மூன்றாம் குறுக்குத்தெரு,**
**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்.**

**தேவராசா குடும்பம்.**

## நாகமுத்து நடராசா



கம்மாலையடி சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து நடராசா கடந்த (03.04.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - இராசம்மா (அசுவதி) தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக்கணவரும் றஞ்சித்ராஜ், றெஜிந்தினி, றஜிவ்பிரசாத் பிரசாந்தராஜ், வினோத்ராஜ், அஜிந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும் அன்ரனிராஜ், தர்சினி (செந்தூரி), தர்சினி ஆகியோரின் மாமனாரும் றகானாவின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற சரஸ்வதி, அன்னலட்சுமி, ராசலட்சுமி, சேனாதிராசா, சற்குணராசா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக் கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

## செல்வி ஸ்ரீபாரதி சிவசாமி



இல. 18, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கொள்ளுப்பிட்டியை வதிவிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான செல்வி ஸ்ரீபாரதி சிவசாமி நேற்று (05.04.2017) புதன்கிழமை காலமானார்.


அன்னார் சின்னத்தம்பி சிவசாமி (இளைப்பாறிய அதிபர், கொழும்பு) மற்றும் காலஞ்சென்றசிவசாமிபுனிதவதிதம்பதியரின் பாசமிகு மகளும் ஸ்ரீரஞ்சன் (அரச அச்சக கூட்டுத்தாபனம்), ஸ்ரீ கிருஷாந்தி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம்), ஸ்ரீசுமதி(கனடா), ஸ்ரீசாருமதி (பிரான்ஸ்), ஸ்ரீவளர்மதி (முன்னாள் ஆசிரியர், சர்வதேச பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருள்ஜோதி, உமாபதிசிவம்(ஓய்வுநிலைக் கணக்காளர், சீநோர் நிறுவனம்), சரவணநாதன்(கனடா), செந்தில்நாதன்(பிரான்ஸ்), சுகர்தன்(முன்னாள் ஆசிரியர், சர்வதேச பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் தனுப்பிரியா, [illegible], சாருஜன், கார்த்திகா ஆகியோரின் பெரியம்மாவும் சகீதா(சௌத்ரி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக [illegible] மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 18, வேம்படி வீதி,**
**யாழ்ப்பாணம். 021 300 3404**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## ஆண்டவன் சந்நிதானத்தில் ஐந்தாம் ஆண்டை நிறைவு செய்யும் எங்கள் அருமையான திருமதி திரேஸ் அன்னமேரி (துங்கமணி) சவரிமுத்து அவர்களின் நினைவுகூருதல் தினம் இன்றாகும் 06.04.2017



**பூலோகம் வந்தது**
**19.07.1947**

**பரலோகம் சென்றது**
**06.04.2012**

**ஐந்து ஆண்டுகள் சென்றாலும்**
**ஆறாத துயரங்களோடு வாழும்**

**"தாய்வீடு"**
**4ஆம் குறுக்கு வீதி,**
**பருத்தித்துறை.**

**உனது**
**அன்புள்ளங் கொண்ட**
**குடும்பத்தினர்கள்.**

## போருக்கான...

குழுவினருக்கும் இடையே முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று மதியம் 12.30 மணியளவில் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பின் முடிவில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:
ஆஸ்திரேலிய அரசால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களின் முன்னெற்றம் தொடர்பில் நேரில் ஆராய்வதற்காகவே யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்ததாக அமைச்சர் குழுவினர் என்னிடம் தெரிவித்தனர். வட்க்கு மாகாண நிலமைகள் குறித்து கேட்டறிவதற்காக என்னையும் அவர்கள் சந்தித்தனர். இதன்போது 3 முக்கியமான விடயங்களை ஆராய்ந்தோம். வடக்கு மாகாண சபையின் தற்போதைய அபிவிருத்தி தொடர்பான நிலமைகள் எவ்வாறான முன்னேற்றத்தில் இருக்கின்றன. புலம் பெயர்ந்த நாடுகளை சேர்ந்தவர்களின் பொருளாதார முதலீடுகள் எவ்வாறான நிலமையில் இருக்கின்றன. போருக்குப் பின் உளரீதியான முன்னேற்றத் தில் மக்கள் எந்த நிலையில் உள்ளனர் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினோம்.
எமது பெண்களின் பாதுகாப்பு நிலமை எவ்வாறு இருக்கின்றது என்பது தொடர்பாக எங்களுடன் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஆஸ்திரேலியப் பிரதிநிதிகளுக்கு விளக்கங்களை வழங்கினார். "தமிழ் பெண்களுக்கு இன்றுவரை பாதுகாப்பு இல்லாத தன்மையே காணப்படுகின்றது. வறுமைக் கோட்டுக்குக் கீழேயே அதிகளவான பெண்கள் வாழ்ந்து வருகின்றனர். பல சிக்கல்களால்தான் இந்த நாட்டை விட்டு வெளியேறி பிற நாடுகளிடம் தமிழ் மக்கள் தஞ்சம் கோருகின்றனர். உங்கள் நாட்டில் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஏராளமானவர்கள் இருக்கின்றனர். அவர்களை மனிதாபிமான அடிப்படையில் நடத்துங்கள்" என்று அனந்தி சசிதரன் வலியுறுத்தினார். எனினும் இந்த விடயம் தொடர்பாக அந்த நாட்டுப் பிரதிநிதிகள் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. கொழும்பில் வைத்து யாராவது வடக்கு மாகாண சபையைப் பற்றி அவர்களிடம் குறையாக கூறினார்களோ தெரியவில்லை. வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்குகின்ற நிதியை முழுமையாக செலவு செய்வதில்லை என்றும் நிதி திரும்பி போகின்றதா? என்றும் ஆஸ்திரேலிய அமைச்சர் என்னிடம் கேட்டார். மாகாண சபைக்கு ஒதுக்கப்படும் நிதியில் இருந்து ஒரு சிறு தொகை பணம் கூட திரும்பிச் செல்வதில்லை. மாகாண சபைக்கு மேலதிகமாக இன்னும் நிதி தேவை யாகவே உள்ளது என்று அவருக்குப் பதிலளித்தேன்.
எமது மக்களுக்கு சுழல் நிதியம் ஒன்றை ஏற்படுத்தி ஒரு தொகை பணத்தை வழங்குவதன் ஊடாக மக்கள் தமது வாழ்வாதாரத்தை வளர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறு அவர்கள் வாழ்வாதாரத்தில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் இருந்து சிறிய தொகைகளாக மீண்டும் அந்த நிதியை செலுத்தக்கூடியதாக அமையும் என்று ஆஸ்திரேலியப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை ஒன்றையும் முன்வைத் தேன். அதற்கான அதிகாரம் அவர்களுக்கு இருக்குமோ என்று எனக்குத் தெரியவில்லை.
மக்களுக்கான அபிவிருத்திகளை மேற்கொள்ளும் சூழ்நிலையில் எமது பிரதேசங்களில் ஏராளமான இராணுவத்தினரை நிலைகொள்ள வைத்திருப்பது மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது என்றும் ஆஸ்திரேலிய அமைச்சரிடம் சுட்டிக்காட்டினேன் என்றார் முதலமைச்சர்.
(வ-8)

### மரண அறிவித்தல்

## திருமதி பூமணி சின்னத்துரை



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் கொக்குவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் பிரான்ஸை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூமணி சின்னத்துரை நேற்று (05.04.2017) புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குருநாதர் மீனாட்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்துரையின் (வடிவேலு-முன்னாள் கிராம சேவை அலுவலகர், தென்மராட்சி) அன்பு மனைவியும் புவனேஸ்வரனின்(சிவலிங்கம்) அன்புச் சகோதரியும் சுமதி (ஜேர்மன்), சுகந்தினி(நோர்வே), கௌரிசன் (ஆசிரியர், யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற சிவசுதன், சிவபரன்(பிரான்ஸ்), சிவகரன்(பிரான்ஸ்), சுதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் பத்மபாதன் (ஜேர்மனி), மதிவண்ணன்(நோர்வே), தீபா (முகாமைத்துவ உதவியாளர், பிரதேசசெயலகம், யாழ்ப்பாணம்), சர்மலா(பிரான்ஸ்), விஜிதா (பிரான்ஸ்), துரைராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் மோகனன், நிதர்சனன், தரனிகா(ஜேர்மனி), கௌசிகா, பபிஷா, கார்திக் (நோர்வே), தேனுவர்சன் (யா/இந்துக் கல்லூரி), டனுசிகன் (யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), மனுசிகன், வேதிகா, யசிக்கா(பிரான்ஸ்), சிஸ்னியா, டிஷிகரன் (பிரான்ஸ்), வினோஜ், கஸ்வின், சஸ்வின் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**71, கோயில் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**சி. கௌரிசன்(மகன்)**

### மரண அறிவித்தல்

## செல்லப்பா கதிர்காமத்தம்பி

**(ஓய்வு பெற்ற ஆசிரியரும், சென்.அன்ரனிஸ் கல்லூரி - ஊர்காவற்றுறை, உடுவில் மகளிர் கல்லூரி, ஓய்வு பெற்ற அதிபரும் சண்முகநாதன் மகாவித்தியாலயம் - கரம்பன், நவாலி இந்து மகாவித்தியாலயம் வட இலங்கை பத்திரிகையாளர் சங்க தலைவரும், அகில இலங்கை சமாதான நீதிவான்)**



தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கதிர்காமத் தம்பி நேற்று (05.04.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - மீனாட்சி தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் இரட்ணேஸ்வரியின் அன்புக்கணவரும் ஜெயமாலா (ஜேர்மனி), சியாமளா (கனடா), ஜெயக்குமார் (கனடா), கருணேஸ்வரன் (ஜேர்மனி), நிரஞ்சன் (லண்டன்), இராமேஸ்வரன் (ஜேர்மனி), மதுரேஸ்வரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற யோகேஸ்வரன் (ஜேர்மனி) மற்றும் குமாரவேல் (கனடா), நளினி (கனடா), சிவகௌரி (ஜேர்மனி), சுமித்திரா (லண்டன்), சுகிலா (ஜேர்மனி), மனோகரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமாமனாரும் காலஞ் சென்றவர்களான கந்தையா, பாக்கியலட்சுமி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும் சஞ்சீவன், சுஜீவ், அருண், நிஷான், பிரஷாந், பிறிந்தா, விதுஷா, பிரவீன், சஹானா, சயந்தா, சிந்துஜா, கௌசல்யா, அஸ்வினிகா, வைஸ்ணவி, லோகிதன், மதுகரன், மதுஷாயினி, மதுராம், ஸ்ரீராம், சாயிகரன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2017) வெள்ளிக் கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாவடிப்பிள்ளையார் கோயிலடி,**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**
**021 222 4162**
**077 639 4744**

**தகவல்:**
**மனைவி ( இரட்ணேஸ்வரி)**
**மற்றும் குடும்பத்தினர்**

### மரண அறிவித்தல்



## காசிப்பிள்ளை கந்தசாமி

புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கந்தசாமி நேற்று (05.04.2017) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்புமருமகனும் ரஞ்சினியின் அன்புக்கணவரும் சபேசன், சுரேன் (UK), துஷ்யந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி, விதுரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுர்ஜனா, சாரண்ஜன், கவிசஜன், டக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனும் கமலாம்பிகை, தேவசாயி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்..


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**021 223 0868**

### மரண அறிவித்தல்

## சொக்கலிங்கம் தியாகராசா

**(ஓய்வு பெற்ற நுண்ணாய்வாளர், யாழ். போதனா வைத்தியசாலை)**



குமரகோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், செட்டிவளவு ஒழுங்கை, இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் தியாகராசா (03.04.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விமலரத்தினத்தின் அன்புக்கணவரும் கோபாலசிங்கம் சின்னத்துரை காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் இராசரத்தினம், மகாலஷ்மி, விஜயலஷ்மி ஆகியோரின் சகோதரரும் அன்னரத்தினம், சபாரத்தினம் காலஞ் சென்றவர்களான விசயரத்தினம், நிர்மலா தேவி, சிவசம்பு ஆகியோரின் மைத்துனரும் சுமதி (சுவிஸ்), துளசி (ஆசிரியை யா/உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலநாதன் (சுவிஸ்), ராஜ்மோகன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர் வீதி அபிவிருத்தித்திணைக்களம்) ஆகியோரின் மாமனாரும் மேனராகவன், நெரேஸ்மேனன், விபூஜா, கவின்ராஜ் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செட்டிவளவு ஒழுங்கை,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## அரச...

தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை தலைமை அமைச்சருடனான, கேள்வி நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"பூர்வீக கிராமமான முள்ளிக்குளத்தில் வாழ்ந்த மக்கள் 2007 ஆம் ஆண்டு எந்தவித போர் நடவடிக்கையும் இல்லாத நிலையிலும் 3 நாள்களில் மீண்டும் மீள்குடியேற்றப்படுவீர்கள் என்ற உத்தரவாதத்துக்கு அமைய வெளியேற்றம் இடம்பெற்றது. மக்களின் பூர்வீக நிலங்களில் மிகப்பெரிய கடற்படை முகாமொன்று அமைக்கப்பட்டுள்ளது. மக்களின் வீடுகளில்கடற்படையினரின்குடும்பங்களும், அங்கிருந்த பாடசாலையில் கடற்படையினரின் பிள்ளைகளும் கல்வி கற்று வாழ்ந்து வருகின்றதை தலைமை அமைச்சர் ஏற்றுக்கொள்வாரா? வெளியேற்றப்பட்ட மக்கள் 2012 ஆம் ஆண்டு மலக்காடு என்ற பிரதேசத்தில் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி மீளக்குடியேற்றப்பட்டுள்ளனர் என்பதை அறிவாரா? அவ்வாறாயின் அம்மக்களைதமது பூர்வீக இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுப்பாரா?" என்று சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதில் அளித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இந்தக் கடற்படை முகாமானது போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதற்காகவும், சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை தடுப்பதற்காகவுமே அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த முகாம் உள்ள பகுதியில் 500 ஏக்கர் காணி 2012 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டதுடன், பின்னர் முள்ளிக்குளம் பகுதியில் மக்களைக் குடியேற்றுவதற்காக 252 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டது. மொத்தம் 752 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

முகாம் அமைந்துள்ள பிரதேசமானது வில்பத்து தேசிய வனத்தின் வடக்கு எல்லையிலாகும். இது வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கே சொந்தமானது. கடற்படை முகாம் அமைந்துள்ள பகுதிக்குள் றோமன் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றும், றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் ஒன்றும் அமைந்துள்ளதால் அதனை உள்ளடக்கிய 84 ஏக்கர் காணி கடற்படையால் விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்குச் செல்லும் வீதி மறுசீரமைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது, தேவாலயத்துக்கும், பாடசாலைக்கும் நீர் மற்றும் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களையும் வழங்கியுள்ளோம். இந்திய அரசின் கடனுக்கு அமைய 134 வீடுகளும், கடற்படையால் 27 வீடுகளும், மீள்குடியேற்ற அமைச்சால் 26 என மொத்தம் 187 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நீர் விநியோகமும், வீதிகள் மறுசீரமைப்பும் கடற்படையின் மேற்பார்வையில் செய்யப்படுகின்றது.

கடற்படை முகாம் அமைந்துள்ளது அரச காணியில் மாத்திரமே. இதில் எந்தவித தனியார் காணிகளும் இல்லை. மக்களை அவசரமாக மீள்குடியேற்றவேண்டும் என்பதே எமது நோக்கம். அதற்காக முடிந்தளவு இராணுவ முகாம்களை அரச காணிகளுக்குக் கொண்டு செல்வதற்கே நாங்கள் முயற்சிக்கின்றோம். இதேவேளை, பிரச்சினைகள் இருக்குமாயின் அது சம்பந்தமாக பேச்சு நடத்தி தீர்வுக்கு வரமுடியும் - என்றார். (த-5)

## சாவு எண்ணிக்கை...

சாவு எண்ணிக்கை நூறைத் தாண்டியது என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை தெரிவித்தது. 400 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அசம்பாவிதத்தை அடுத்து ஐக்கிய நாடுகள் சபை நேற்று மதியம் (இலங்கை நேரப்படி) அவசர அவசரமாகக் கூடியது. இந்த இரசாயனத் தாக்குதல் போர்க் குற்றம் என்ற அறிவிப்பையும் அது வெளியிட்டது.

சிரியாவில் நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்ற பயங்கரமானதும் கொடூரமானதுமான சம்பவங்கள் அங்கு தொடர்ந்து போர்க் குற்றங்கள் நடைபெற்று வருவதையும், பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்கள் மீறப்படுவதையும் சுட்டிக் காட்டுகின்றன. தனது பொறுப்புக்கு ஏற்ப இத்தகைய குற்றங்களுக்குக் காரணமானவர்கள் மீது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை உரிய நடவடிக்கை எடுக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குட்டரெஸ் தெரிவித்தார். (விரிவான செய்தி பக்கம் 14) (ம)

## மின்சாரக்...

இப்போது பேசுவதில்லை.இதனால் அரசியல் நோக்கம் கருதியே அப்போது நாம் இதைப் பேசி வந்தோம் என்று சொல்கின்றனர். உண்மையில்,மின்சாரக் கதிரை ஆபத்து இன்னும் நீங்கவில்லை.வேறொரு வடிவில் அது மகிந்தவை நோக்கி வந்துகொண்டிருக்கின்றது.

நாம் இதை மறந்துவிட்டுவேறு பிரச்சினைகள் பற்றி பேசுகின்றோம். காணாமல் போனோர் அலுவலகம் ஊடாகத்தான் மகிந்த மின்சாரக் கதிரையில் ஏற்றப்படப் போகின்றார். அவரை அந்தக் கதிரையில் ஏற்றும் ஒரே நோக்குடன் தான் இந்த அலுவலகம் அமைக்கப்படப் போகின்றது.

ஜனநாயக விரோதமான முறையில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டமானது காணாமற்போனோரின் உறவினர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும் காணாமற்போனோரைக் கண்டு பிடிப்பதற்குமே பயன்படுத்தப்படும் என்று சிலர் நம்பிக்கொண்டு இருக்கின்றனர். அப்படி எதுவும் நடக்காது.

இந்தச் சட்டத்தின் மூலம் புலிகளும் படையினரும் சமப்படுத்தப்பட்டுள்ளனர். காணாமற்போனோர் தொடர்பில் வீடியோ, ஈமெயில் போன்ற சாட்சிகளை இந்த அலுவலகம் உண்மையான சாட்சியாக ஏற்றுக்கொள்ளும். விசாரணையாளர்கள் விரும்பிய நேரத்தில் அனுமதி இன்றி எந்தவோர் இராணுவ முகாமுக்குள்ளும் செல்ல முடியும்.

வேண்டிய ரகசியங்களைப் பெற முடியும். வெளிநாடுகளில் இருந்தவாறே சாட்சியம் வழங்க முடியும். குற்றவாளிகளாகக் காணப்படும் படையினருக்கு எதிராக போர்க் குற்ற நீதிமன்றில் வழக்குத் தொடர முடியும். வெளிநாடுகள் நேரடியாகத் தலையிட முடியும்.

இறுதியில் மகிந்தவே போர்க் குற்றவாளியாக காணப்படுவார். மின்சாரக் கதிரைக்கு அவர் அனுப்பப்படுவார். இந்த அலுவலகம் மூலம் இதுதான் நடக்கப் போகின்றது - என்றார். (த-3)

## 5 வருடங்களில்...

கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குற்றப் பரிசோதனைத் திணைக்களத்தால் நிறுவப்பட்டுள்ள கடல் வழியாகச் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடுப்பதற்கான பிரிவினரால் இலங்கைக் குடிமக்கள் 6176 பேர் கடந்த 5 வருடத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிணை நிபந்தனைகள் கடுமையாகக் காணப்பட்டமையால் பிணை பெற்றுக்கொள்ள முடியாமலுள்ள சந்தேகநபர்கள் எவரும் தடுப்புக் காவலில் வைக்கப்படவில்லை. எனினும், பிணை பெறுவதற்காக மேல் நீதிமன்றத்துக்குப் பிணைக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் இரண்டு பேர் சுமார் 18 மாத காலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாகக் கடல் வழியாக வெளிநாடு செல்வதுடன் தொடர்புடைய 544 விசாரணைகளில் 246 விசாரணைகள் பூர்த்தி செய்து, 74 விசாரணைகள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறே, அந்த விசாரணைகளில் 172 விசாரணைகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைக்க வேண்டியுள்ளன. மீதி 126 விசாரணைகளைத் துரிதமாக பூர்த்தி செய்து சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பின்னர், தனது முதலாவது மேலதிக கேள்வியைத் தொடுத்த வாசுதேவ நாணயக்கார, கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு பல ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை எனில், வழக்கு விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை எனில் அவர்களைக் குற்றங்களில் இருந்து விடுவித்து, வழக்குகளில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கமுடியுமா?" என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், "குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் இது சம்பந்தமாக அறிக்கையொன்றைக் கோரி இவர்களை விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (த-4)

## இந்தியப்...

கண்டனத்துக் குரியது. இவ்வாறு மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்களின் தலைவர் யஸ்ரின் சொய்சா தெரிவித்தார்.

வடக்குக் கடலில் இடம்பெறும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி மற்றும் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய படகுகளை விடுவிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பேச்சு இடம்பெறவுள்ளது. அது தொடர்பிலான முன்னாயத்தமாக வடக்கிலுள்ள 4 மாவட்டங்களின் மீனவர் பிரதிநிதிகள் கொண்ட குழுவை மீன்பிடித்துறை அமைச்சர் கலந்துரையாடலுக்காக அழைத்திருந்தார். கலந்துரையாடல் மீன்பிடி அமைச்சில் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பில், மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்களின் தலைவர் யஸ்ரின் சொய்சா தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள இந்திய இழுவைப் படகுகளை விடுவிப்பது தொடர்பில் வடபகுதி மீனவர்களின் கருத்து கேட்கப்பட்டுள்ளது. அதற்கு, வடக்கில் இருந்து சென்றவர்கள், படகுகளை விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் அவ்வாறு கூறினாலும் உண்மையில் வட பகுதி மீனவர்களின் கருத்தாக அதனைக் கூற முடியாது. ஏனெனில் இந்த மீனவர் அமைப்புக்கள் கொழும்புக்குச் சென்றது கூட அதிகமான மீனவர்களுக்குத் தெரியாது. மீனவர்களின் கருத்தாகக் கூறும் ஓர் விடயம் தொடர்பில் சங்கங்கள் தமது மீனவர்களிடம் கருத்தை அல்லது சம்மதத்தைப் பெற்றுச் சென்றிருக்கவேண்டும். ஆனால் இங்கு அவ்வாறு எதுவுமே செய்யப்படவில்லை. இந்தியாவின் இழுவைப் படகுகளினால் எமது மீனவர்களின் கோடிக்கணக்கான சொத்துகள் நாசமடைந்தன என்பதனை மறந்து எந்தவிதமான ஒரு நிபந்தனைகளும் இன்றி இந்த அனுமதி வழங்கப்பட்டமை கண்டிக்கத்தக்கதுஎன்றார்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் பேச்சில் கலந்து கொண்ட மன்னாரைச் சேர்ந்த ஆலத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, எதிர்கால இலக்குக் கருதியே மேற்படி தீர்மானத்தைக் கூறினோம். 2015 ஆம் ஆண்டுக்கும் முன்பு கைப்பற்றப்பட்ட படகுகளை மட்டும் விடுவிப்பதற்கே இணக்கத்தைத் தெரிவித்தபோதும் இறுதி முடிவு அமைச்சர் வசமே.

அத்துடன் தனியாக இந்திய மீனவர்களின் விடயங்களை உரைப்பதற்காகச் செல்லவில்லை. எமது மாவட்டங்களின் தேவை , பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடினோம். வடக்கின் 4 மாவட்டப் பிரதிநிதிகளும் பங்கு கொண்டிருந்தனர்-என்றார். (த-4101)

## வேலைதேடும்...

பட்டதாரிகள் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

தமக்கான அரச வேலை வாய்ப்பை வழங்கக் கோரியும்,தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்களில்உரிய நடைமுறையைப்பின்பற்றக் கோரியும் கடந்த 38 நாள்களாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாகக் கால வரையற்ற போராட்டத்தில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டம் குறித்து அவர்கள் தெரிவித்ததாவது:

நாம் அமைதியான வழியில் எமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். இதுவரை எமக்கான தீர்வு அரச தரப்பினரால் வழக்கப்படவில்லை. வடக்கு மாகாண முதலமைச்சர் எமது பிரச்சினை தொடர்பாகக் கடந்த வாரம் அரச தலைவரிடம் வலியுறுத்தியுள்ளார். சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் எமது பிரச்சினைக்கான தீர்வைப் பெற்று தரும்படி அரச தலைவரிடம் கூறியுள்ளார். ஆயினும் தீர்வு கிடைக்கவில்லை.

எதிர்வரும் சித்திரை புதுவருடப் பிறப்பின் பின்னர் எமக்கான தீர்வு வழங்கப்படுமென அரச தரப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும் எழுத்து மூலமான உறுதிமொழிகள் வழங்கப்படவில்லை. அதனால் நாம் தொடர்ந்து போராடுவோம். தீர்வு விரைவில் கிடைக்கவில்லை என்றால் வடக்கு மாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்களை முற்றுகையிடும் போராட்டம் நடைபெறும் என்றனர். (த-ரி)

## வெளிநோயாளர்...

சைட்டம் தனியார் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் மருத்துவர்கள் ஒருநாள் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். இதனால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உட்பட வடக்கிலுள்ள மாவட்ட, ஆதார, பிரதேச வைத்தியசாலைகளில் சிகிச்சை இடம்பெறாது என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் வைத்தியசாலைகளின் ஏனைய மருத்துவப் பிரிவுகள் வழமைபோலச் செயற்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4-101-ரி)

## அரசமைப்பை...

றியபோதே அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க்குற்ற விசாரணை அறிக்கையில் உள்ள 46 தனி நபர்களின் பெயர்களில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பெயரும் இருந்தது. இதனாலேயே அவர் தனது ஆட்சிக் காலம் முடியும் முன்பே தேர்தலுக்குச் சென்றார். பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அமைச்சர் வேட்பாளராக சமல் ராஜபக்சவை அறிவிக்கும்படி அவர் கோரியிருந்தார். அதற்கு அரச தலைவர் மைத்திரி இணங்கவில்லை என்பதால் அவர் தனி அரசை அமைக்கப் போனமையால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அரசொன்றை அமைக்க முடியாது போனது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்ளக விசாரணையே நடைபெறும் என்று அரச தலைவர் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். சிலர் பன்னாட்டு நீதிபதிகளை இலங்கைக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தும் வகையில் அரசமைப்பை மாற்றியமைக்குமாறு கூறுகின்றனர். இலங்கையின் இறையாண்மையில் பன்னாட்டுச் சமூகம் தலையிட முடியாது.

பன்னாட்டு நீதிபதிகளை இங்கு அழைத்து வந்து விசாரணை நடத்து வகையில் ஒருபோதும் அரசமைப்பு மறுசீரமைப்புகள் இடம்பெறாது. அதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அனுமதியளிக்காது என்றார். (த-5)

## சிலாவத்துறை...

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தித் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.


முஸ்லிம் காங்கிரஸின் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் சல்மான், 600 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட சிலாவத்துறையில் 450 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளில் வீடுகளும், விவசாய நிலங்களும் உள்ளன. 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட மக்கள், மீள்குடியேற்றப்பட்ட போதிலும் அங்கு கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது. 60 ஏக்கருக்கு மேற்பட்ட தனியார் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. கடற்படையிடம் உள்ள தனியார் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் பதில் வழங்கிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்கு சிலாவத்துறைக் கடற்படை முகாம் எமக்கு அத்தியவசியமாகின்றது. எனக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய கடற்படை முகாமுக்காக 34 ஏக்கர்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளன. அதிலும் 6 ஏக்கர்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. விடுவிக்கப்பட்ட காணி உரிமையாளர்களில் 38 பேர் உயிருடன் இல்லை. தற்போது 28 ஏக்கர்கள் மாத்திரமே சிலாவத்துறைக் கடற்படை முகாமுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றதுடன் பாதுகாப்பு சமநிலை கருதி இதனைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்றார்.

இடையில் குறுக்கிட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது என்று நினைக்கின்றேன். சிலாவத்துறை நகரத்தில் உள்ள கடைத் தொகுதிகள், வீடுகள் என்பனவும் கடற்படை முகாமுக்குள்ளே உள்ளன. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நகரின் மையப்பகுதி பயன்படுத்தப்படுகின்றது. மக்கள் நகரத்தை விடுவிக்குமாறே கோருகின்றனர்என்றார்.

இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர், போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்தவே இந்த முகாம் அத்தியவசியமாகின்றது என்று கடற்படை தெரிவிக்கின்றது. நீங்கள் குறிப்பிடும் பிரச்சினைகள் சம்பந்தமாக சிங்கள, தமிழ் புத்தாண்டுக்குப் பின்னர் விரிவாக ஆராய்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் என்றார். (த-5)

## எறும்பு புற்றை நோக்கி செல்ல வழிகாட்டுவோம்





## ஆழமறியாமல்...

எங்கும் வறட்சி. நரி ஒன்று நீர்தேடி அலைந்து திரிந்தது. இறுதியில் ஒரு கிணற்றைக் கண்டு அதன ருகே சென்று பார்த்தது. கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கு கப்பி முறை அமைக்கப்பட்டிருந்தது. அதன்படி கப்பிக்குள் செலுத்தப்பட்ட கயிற்றின் ஒரு முனையிலே வாளி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. நரி கிணற்றினுள்ளே எட்டிப் பார்த்தது. கிணற்றுள் தாராளமாக நீர் இருந்தது. அதனைக் கண்ட நரி வாளியினுள் தாவி ஏறி அமர்ந்து கொள்ள வாளி 'விர்ரென' கிணற்றினுள்ளே சென்றது. நரி வயிறு நிறைய தண்ணீர் குடித்த பின்னர் எப்படி வெளியேறுவது என யோசித்தது. மாலை நேரமுமானது. நேரம் ஆக ஆக நரிக்கு அச்சம் தோன்றியது. மேலிருந்து யாராவது கயிற்றை இழுத்தாலன்றி தான் வெளியேற முடியாது என யோசித்துக் கொண்டிருக்கையில் கிணற்றடிக்கு ஓர் ஓநாய் வந்து சேர்ந்தது. அப்போது கிணற்றுள் சத்தம் கேட்கவே அது கிணற்றை எட்டிப் பார்த்தது. அங்கே நரி இருப்பதைக் கண்டு "அடடா நரித் தம்பி உள்ளே என்ன செய் கிறீர்கள்?" என்றது. நரி சற்று யோசித்து விட்டு "நான் இப்போது சொர்க்கத்தில் இருக்கிறேன். இது என்ன அருமையான இடம் தெரியுமா? இங்கு இருப்பவர்கள் மீன், கோழி, ஆடு எல்லாம் தந்து என்னை அபாரமாக உபசரிக்கிறார்கள். உணவு தேடி அலைய வேண்டிய தேவையே இல்லை. பேசாமல் இங்கேயே தங்கி விடலாமென முடி வெடுத்துள்ளேன் என்றது. நரி கூறியவற்றைக் கேட்கக் கேட்க ஓநாயின் வாயில் நீர் ஊறியது. "அப்படியா? அது சரி உந்த சொர்க்கத்துக்கு நீ எப்படிச் சென்றாய்" என இயல்பாகக் கேட்பது போல பாசாங்கு செய்தது. நரியோ "நான் இதோ தொங்கும் இக்கயிற்றின் ஒரு முனையைப் பிடித்த படியே இங்கே வந்து சேர்ந்தேன்" என்றது. அடுத்த நிமிடம் ஓநாய் கயிற்றின் மறு முனையில் கட்டப்பட்டிருந்த வாளிக்குள் குதித்தது. அந்த வாளி சர சரவென்று கிணற்றின் உள்ளே போயிற்று. இப்போது நரி இருந்த வாளி மேலே வரத் தொடங்கியது. வழியில் ஓநாயை சந்தித்த நரி "நான் இப்போது சொர்க்கத்தை விட மேலான இடம் நோக்கிப் போகிறேன். நீர் சொர்க்கத்தைப் பார்த்து விட்டு வந்து சேரும்"என்று கூறிச் சிரித்தபடி மேலே வந்து கிணற்றுச் சுவரில் தாவிக் குதித்து ஓடியது. பாவம்...ஓநாய்.



**ஒரு செயலைச் செய்ய முன்பு பலமுறை யோசிக்க வேண்டும்.**

**எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு**
**- குறள் 467**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### குளத்தில்...

சிக்குண்டு இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருபாலை கிழக்கைச் சேர்ந்த முருகேசு அருளானந்தம் (வயது62) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

"சடலமாக மீட்கப்பட்ட நபர் நாகவிகாரைக்கு தாமரைப் பூ கொடுப்பவர். வழமைபோன்று நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமையும் தாமரைப் பூக்கள் பறிப்பதற்கு வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். அன்று அவர் வீடு திரும்பி வரவில்லை. வீட்டுக்காரர்கள் அவரைத் தேடியுள்ளனர். வழமைபோன்று குளத்துக்குச் செல்வார் என்ற அடிப்படையில் அங்கு சென்று தேடியுள்ளனர். குளத்தின் கரையில் பொருள்கள் சில இருப்பதைக் கண்டு குளத்தினுள் தேடுதல் நடத்தியுள்ளனர். தாமரைக் கொடிகளுக்குள் சிக்குண்ட நிலையில் அவரது சடலத்தை மீட்டனர்" என்று விசாரணைகளை மேற்கொண்ட திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மு.உதயசிறி தெரிவித்தார்.

(வ-5,4,12)

### இடைக்கால...

அறிக்கையை விரைவுபடுத்துவதற்காக மூன்றாவது நாளுக்கு நீடிக்கப்பட்ட தற்போதைய அமர்வு மீண்டும் இரண்டு நாள்களுக்குச் சுருக்கப்பட்டதுடன் அடுத்த கூட்டம் மே மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றபோது அதன் இடைக்கால அறிக்கை இறுதி செய்யப்படவில்லை. இதனால், முன்னரே திட்டமிட்டபடி குழுவின் இடைக்கால அறிக்கையை இந்த மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது சாத்தியமாகாது என்று சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த இடைக்கால அறிக்கை கடந்த நவம்பர் மாதமே நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அனைத்துக் கட்சிகளிடையேயும் தெளிவான இணக்கம் எட்டப்படாததால் அது பின்னர் கைவிடப்பட்டது. அதைத் தொடர்ந்து நிலமைகள் சீரடைந்ததும் இடைக்கால அறிக்கை மீளத் தயாரித்து இந்த மாதத்தில் முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் தற்போதும் கட்சிகள் இடையில் முழுமையான இணக்கம் எட்டப்படாததன் காரணத்தால் அறிக்கையை இந்த மாதத்தில் முன்வைப்பது சாத்தியமற்றது என்று கூறப்படுகிறது.

நவம்பர் மாதத்தில் கைவிடப்பட்ட இடைக்கால அறிக்கையிலிருந்து, எல்லாக் கட்சிகளும் இணங்கிய விடயங்களைத் தொகுத்து அடுத்த வழிநடத்தல் குழுவின் கூட்டத்திற்கு முன்னர் வரைவாகச் சமர்பிப்பது என்று நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்த வரைவைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஜயம்பதி விக்ரமரத்ன ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வழிநடத்தல் குழுவின் கூட்டம் மூன்றாவது நாளாக இன்றும் நடக்க இருந்தது எனினும் தவுல்தெண ஞானிஸ்வர தேரரின் இறுதிக் கிரியைகளுக்குத் தலைவர்கள் செல்லவேண்டி இருப்பதால் வழிநடத்தல் குழுவின் கூட்டம் மே மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் இடைக்கால அறிக்கை இறுதி செய்யப்பட்டால் அதன் பின்னர் அது உடனடியாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ- 5)

### முதலாவது...

நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின் படுகொலை தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம். றியால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 சந்தேகநபர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் கோபிக்கு முதலாவது சந்தேகநபர் கொலை மிரட்டல் விடுத்தார் என்று பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டது.

"எம்மை பழிவாங்கும் நோக்குடன் பொய் குற்றச்சாட்டுச் சுமத்தி கைது செய்துள்ளார். நாம் வெளியில் வந்த பின்னர் அவரைக் கண்டால் வெட்டுவோம்" என்று 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து பொலிஸ் உத்தியோகத்தருக்கு சந்தேகநபர்கள் கொலை மிரட்டல் விடுத்தனர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில், ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அந்தக் குற்றசாட்டை கடந்த வருடம் நவம்பர் 28ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர்கள் ஏற்றுக்கொண்டனர். இந்த நிலையில் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முதலாவது சந்தேகநபருக்கு எதிராக கொலை மிரட்டல் குற்றச்சாட்டை முன்வைத்து பொலிஸார் புதிய வழக்கு ஒன்றை நேற்றுத் தாக்கல் செய்தனர். இதுதொடர்பான விசாரணையை எதிர்வரும் 19ஆம் திகதி வரை மன்று ஒத்திவைத்தது.

(வ-37)

### ரணிலின்...

ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவைதொடரும்வரை அரசமைப்புக் குறித்து இணக்கப்பாட்டுக்கு வரமுடியாது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தலைமை நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கான சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளல் தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஏகாதிபத்தியவாதியான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க பதவி விலகவேண்டும். தனக்குத் தேவையான ஒருவரை அரச தலைவர், தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டாலும் அரசில் நாம் இணையமாட்டோம். சில விடயங்களில் இணக்கப்பாட்டுக்கு வருவது பற்றி பரிசீலிக்கலாம்.

தலைமை அமைச்சர் ரணில்·விக்கிரமசிங்க தலைமையிலான அரசு கொண்டு வரும் யோசனைகளில் அச்சுறுத்தல் தன்மை இருக்கின்றது. இந்த அரசு விரட்டியடிக்கப்படும் என்றார்.

(த-5)

## சாணக் கோலம்

ஒரு வகை வண்டுகள் தமது பின்னங் கால்களால் சாண உருண்டைகளை உருட்டித் தள்ளிச் செல்வதைப் பொதுவாக அவதானிக்கலாம். வண்டு உருட்டும் சாண உருண்டை வண்டின் வடிவத்திலும் பெரிதாக இருக்கும். சில வேளைகளில் ஒரு 'ரெனிஸ்' பந்தின் அளவிலும் இருக்கும். இதனை இத்தனை சிரமத்தோடு வண்டு ஏன் உருட்டிச் செல்கின்றது? இந்த வண்டு தான் வசிப்பதற்கு ஏற்ற ஓரிடத்தைக் கண்டு பிடித்ததும் அவ்விடத்தில் ஒரு நிலவறையை அகன்று அதனுள் தான் உருட்டிவரும் சாண உருண்டையைப் பாதுகாப்பாக வைக்கின்றது. பின்னர் அதன் மீது முட்டைகளை இடுகின்றது. முட்டைகள் பொரித்து குஞ்சுகள் வெளி வந்ததும் அக்குஞ்சுகளுக்கு உணவாக இச்சாணம் பயன்படுகிறது. பெண் வண்டு ஒரு வருடத்தில் நான்கு முட்டைகளை மட்டுமே இடும். அதனால் அது சேகரிக்கின்ற இந்த சாண உருண்டை குஞ்சுகள் வளரப் போதுமானது.





# இறுதிக்குள் கால்பதித்தது உடுவில்

யாழ்ப்பாணம், ஏப். 6
யாழ்ப்பாண மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணி இறுதிக்குத் தகுதிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து வேல ணைப் பிரதேச செயலக அணி மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியின் 38ஆவது நிமிடத்தில் உடுவில் அணியின் சார்பாக ஜெகன் முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த பத்து நிமிடத்தில் பதிலடி கொடுத்தது வேலணை. 55ஆவது நிமிடத்தில் உடுவில் சார்பாக மற்றொரு கோல் பதிவாக முடிவில் அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது. (ம-108-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 6
**எவ்.ஏ.கிண்ணம்**
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. இந்தத் தொடரில் கொழும்பு பொலிஸ் பார்க் மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இலங்கை பொலிஸ் அணி மோதவுள்ளது.

**அரியாலையின் கரப்பந்தாட்டம்**
அரியாலையின் 98ஆவது சுதேசிய கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட அணிகளுக்கு இடையில் இரு பிரிவாக கரப்பந்தாட்டத் தொடர் நடத்தப்படுகிறது. இந்தத் தொடர்களின் அரையிறுதிகள் சில அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இரவு 7 மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான அரையிறுதியில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு விளையாட்டுக் கழ கங்களுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் ஆவரங் கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இள வாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 6
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக் கழக அணிக்கும் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டமொன்று வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (ம-23)

# யாழ்ப்பாணம் மத்தி, இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 6
யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 13 வயதுப்பிரிவில் நடத்தும் தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சாரங்கன் 70 ஓட்டங்களையும், சஞ்சேயன் 68 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் சார்பில் டினோசன் 5 இலக்குகளையும், விஸ்ணுகாந் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
273 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 102 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து 170 ஓட்டங்களால் வெற்றிபெற்று கம்பீரமாக இறுதிக்குச் சென்றது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.
பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் சார்பில் நிகேஸ், கவிதாசன் இருவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)

# கோல்டன் பிரதர்ஸ் - ஜங்ஸ்ரார் இறுதியில் மோதுவதற்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 6
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் கோல்டன் பிரதர்ஸ் - யங்ஸ்ரார் அணிகள் இறுதியில் பலப்பரீட்சை செய்யத் தகுதிபெற்றன.
சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காகவே இந்தத் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் அரையிறுதிகள் நடைபெற்றன.
சனிக்கிழமை இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் மருதநிலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
இந்த ஆட்டத்தில் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வடதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# நடப்புச் சம்பியன் என்று நிரூபித்தது ஹைதராபாத்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரை வீழ்த்தியது நடப்புச் சம்பியனான ஹைதராபாத்.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஹைதராபாத்தின் தலைவர் வோர்ணர் தடுமாறினாலும் சக ஆரம்ப வீரரான தவான் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஹென்றிக்ஸ், யுவராஜ் இணை பெங்களூரின் பந்துவீச்சை நொறுக்கித் தள்ளியது. ஹென்றிஸின் அரைச்சதம் 34 பந்துகளிலும் யுவராஜின் அரைச்சதம் வெறும் 23 பந்துகளிலும் பதிவாகின. ஹென்றிக்ஸை வீழ்த்தினார் சாகல். 62 ஓட்டங்களுடன் யுவராஜ் ஆட்டமிழந்தார். முடிவில் ஹைதராபாத் 4 இலக்குகள் இழப்புக்கு 207 ஓட்டங்களைக் குவித்தது.
பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூருக்கு ஆரம்ப இணை 54 ஓட்டங்கள் வரை தாக்குப்பிடித்து அடித்தளத்தை பலமாக அமைத்தது. ஆப்கான் வீரர் ரசீட் கான் மண்டீப்பை வீழ்த்தி இணைப்பாட்டத்தைப் பிரித்தார். 103 மீற்றர் உள்ளடங்கலாக 3 சிக்சர்களை விளாசி நிலைக்க ஆரம்பித்த கெய்லை பவிலியனுக்குத் திருப்பினார் கூடா. கெய்லின் ஆட்டமிழப்பு ஹைதராபாத்தின் வெற்றியை கிட்டத்தட்ட உறுதி செய்தது. ஏனெனில் கோக்லி, வில்லியர்ஸ் ஆகியோர் நேற்றைய அணியில் இருக்கவில்லை. 172 ஓட்டங்களில் பெங்களூர் சகல இலக்குகளையும் இழக்க 35 ஓட்டங்களால் வென்றது ஹைதராபாத். (ம)



# முதன்முறையாக 8 நகரங்களில் ஐ.பி.எல். தொடக்க விழா

வழக்கமாக ஐ.பி.எல். தொடக்க விழா முதலாவது ஆட்டம் நடைபெறும் நகரில் மட்டும் கோலாகலமாக நடத்தப்படும். ஆனால் நடப்பு வருடம் முதல் முறையாகத் தொடரில் பங்கேற்கும் எட்டு அணிகளினதும் சொந்த நகரங்களில் நடத்தப்படுகிறது.

தொடக்க விழாவை அனைத்து அணிகளின் உள்ளூர் ரசிகர்களும் கண்டுகளிக்க வாய்ப்பு அளிக்





கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு அணியும் தனது முதலாவது உள்ளூர் ஆட்டத்தில் களமிறங்கும் போது ஆட்டத்துக்கு முன்பாகத் தொடக்க விழா நடத்தப்படவுள்ளது.

ஐ.பி.எல். தொடரின் முதலாவது ஆட்டம் ஹைதர்ாபாத் - பெங்களூர் அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கு முன்பாக அதாவது மாலை 6 மணியளவில் இருந்து தொடக்க விழா ஆரம்பமானது.

இதைத் தொடர்ந்து புனே, குஜராத், கொல்கத்தா, பஞ்சாப், டெல்லி, பெங்களூர், மும்பை ஆகிய இடங்களிலும் அடுத்தடுத்து தொடக்க விழா ஏற்பாடுகள் மிகவும் கோலாகலமாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம)


# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 6

திக்கம் சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் தனது மைதானத்தில் வடமாகாண ரீதியில் கபடித் தொடரை நடத்தி வருகிறது. இந்தத் தொடரில் பெண்கள் பிரிவில் இன்று காலை 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கியம் அணியை எதிர்த்து வல்வை அணி மோதவுள்ளது. காலை 8.15 மணிக்கு பண்டத்தரிப்பு ஜசிந்தா அணியை எதிர்த்து அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-422)




# ஊக்கமருந்து பாவனையில் முதலிடத்தில் ரஷ்யர்கள்




ஊக்கமருந்தை அதிக அளவில் பயன்படுத்தும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பட்டியலில் ரஷ்யர்கள் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளனர்.

பன்னாட்டு ஊக்கமருந்து தடுப்புச் சம்மேளனம் கடந்த 2015 ஆம் ஆண்டில் எந்த நாட்டவர்கள் அதிக அளவில் ஊக்கமருந்தை உபயோகப்படுத்தினர் என்ற பட்டியலை வெளியிட்டுள்ளது. 176 நபர்களுடன் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. 129 நபர்களுடன் இத்தாலி இரண்டாம் இடத்திலும், 117 நபர்களுடன் இந்தியா மூன்றாம் இடத்திலும் உள்ளன.

2013 ஆம், 2014 ஆம் ஆண்டுகளிலும் ரஷ்யா, இத்தாலி, இந்தியா ஆகிய நாடுகளே முறையே முதல் மூன்று இடங்களையும் பிடித்திருந்தன.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த வருடம் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடரில் கலந்துகொள்ளவிருந்த ஏராளமான ரஷ்ய வீரர்கள், வீராங்கனைகள் அதற்கு முற்பட்ட ஒலிம்பிக் தொடர்களான லண்டன் மற்றும் பீஜிங் தொடர்களில் ஊக்கமருந்தை உபயோகித்தனர் என்று தெரிவித்து ரியோ ஒலிம்பிக் தொடரில் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனால் ரியோ ஒலிம்பிக்கில் ரஷ்யாவின் பதக்க வேட்டை பாதியாகக் குறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

நம்பத்தகாத வகையில் இந்த ஊக்கமருந்துப் பயன்பாடு அமைந்ததை அடுத்து பன்னாட்டு ஊக்கமருந்து தடுப்புச் சம்மேளனம் முன்னைய ஒலிம்பிக் தொடர்களில் வீரர், வீராங்கனைகளிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகளை மீண்டும் பரிசீலனை செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பஞ்சாப்பில் இசாந் இணைவு

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணியில் இசாந் சர்மா விளையாடவுள்ளார்.

ஐ.பி.எல். தொடருக்கான ஏலத்தில் இசாந் சர்மா எடுக்கப்படவில்லை. பஞ்சாப் அணியில் இடம்பிடித்திருந்த துடுப்பாட்ட வீரர் முரளி விஜய் காயம் காரணமாக தொடரில் இருந்து முழுவதுமாக விலகியுள்ளார். இதனால் பிறிதொரு வரை ஒப்பந்தம் செய்யக் கூடிய வாய்ப்பு அந்த அணிக்கு இருந்தது. அந்த அடிப்படையிலேயே பஞ்சாப்பில் இசாந் சேர்க்கப்பட்டார். (ம)

# கட்டாயத்தில் பங்களாதேஷ்

இலங்கைக்கு எதிரான ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் பங்களாதேஷுக்கு உள்ளது.

தொடரில் இரண்டு ஆட்டங்கள். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் ஏனைய வீரர்கள்


மோர்ரசா

இலங்கை வெற்றிபெற்றது. எனவே இன்றைய ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது இலங்கையைப் பெரிதாகப் பாதிக்காது. ஆனால் தொடரை 1:1 என்று குறைந்த பட்சம் சமநிலையில் முடிக்க இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறவேண்டும் என்ற நெருக்கடி பங்களாதேஷுக்கு இருக்கவே செய்கிறது.

இதைத்தவிர இன்றைய ஆட்டமே பங்களாதேஷ் அணியின் தலைவர் மோர்ரசாவின் இறுதி ஆட்டமுமாகும். எனவே அவரை வெற்றியுடன் வழியனுப்பி வைக்க அந்த அணியின் ஏனைய வீரர்கள் முனைப்புக் காட்டுவார்கள் என்பதால் இன்றைய ஆட்டத்தின் மீது அதிகளவில் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரும், ஒருநாள் தொடரும் 1:1 என்று சமநிலையிலேயே முடிவு கண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



*நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் ஹைதராபாத் - பெங்களூர் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்துடன் நேற்று ஆரம்பமானது. தொடருக்கான தொடக்க விழா 8 அணிகளின் சொந்த இடங்களிலும் நடைபெறுகிறது. இதனால் அணித்தலைவர்கள் ஒன்றாகச் சந்திக்கும் வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது என்று குற்றச்சாட்டு வைக்கப்பட்ட நிலையில் எட்டு அணிகளின் தலைவர்களும் நேற்றுமுன்தினம் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தலைவர்களின் சந்திப்பின்போது எடுத்துக்கொள்ளப்பட்ட செல்பியே இது. (ம)*

# ரி-20 அரங்கில் இருந்து மோர்ரசா விடைபெறுகிறார்

பன்னாட்டு ரி-20 அரங்கில் இருந்து பங்களாதேஷ் அணியின் தலைவர் மோர்ரசா இலங்கைக்கு எதிரான தொடருடன் விடைபெறுகிறார்.

பங்களாதேஷ் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்திலேயே தனது ஓய்வு முடிவை மோர்ரசா அறிவித்தார்.

இதுதான் பங்களாதேஷ் அணிக்காக நான் விளையாடும் கடைசி ரி-20 தொடர். இந்தத் தொடருடன் பன்னாட்டு ரி-20 அரங்கில் இருந்து விடைபெற்றுச் செல்கிறேன். பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, எனது குடும்பம், நண்பர்கள், அணி வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல் கடந்த 15 முதல் 16 வருடங்களாக எனக்கு ஆதரவாக இருந்த ரசிகர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என மோர்ரசா மேலும் தெரிவித்தார்.

இதனால் இலங்கைக்கு எதிராக இன்று நடக்கும் ரி-20 ஆட்டம்தான் மோர்ரசாவின் இறுதி ரி-20 ஆட்டமாக அமைந்துள்ளது. 33 வயதாகும் மோர்ரசா இதுவரை 52 ரி-20 ஆட்டங்களில் விளையாடி 368 ஓட்டங்கள் சேர்த்ததுடன், 39 இலக்குகளையும் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

யாழில்

# உங்களுடன் நேரடியாக...

தனது ஒரே ஒரு வியாபார பங்காளருடன் இணைந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருட்களுக்கும் அள்ளி வழங்குகிறது

## ஏராளமான பரிசுப்பொருட்கள்


யின்

# மாபெரும் வீதிவிழா

**08.04.2017 சனிக்கிழமை**

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (நளின் காட்சியறைக்கு முன்பாக).

## மரண அறிவித்தல்



### Dr. K.S. பரம்சோதிநாதர்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr . K. S. பரம்சோதிநாதர் நேற்று (05.04.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மதியாபரணம் - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் Dr. P. கிருஸ்ணவேணியின் அன்புக்கணவரும் பிரேந்திரா, தாமரா (மருந்தாளர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை), துஷாரா (லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவக்கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோ. திவாகரின் மாமனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2017) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T. P : 077 955 7830

தகவல்:
குடும்பத்தினர்

## வேலையாள்கள் தேவை

இலங்கையில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிற்கு விற்பனைப் பிரதிநிதிகளும் முகவர்களும் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு. 076 348 4732, 076 348 4740

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் A9 வீதியில் கச்சேரிக்கும் புங்கன்குளம் சந்திக்கும் இடையில் ஒரு பரப்பு 2.75 குழி அளவு கொண்ட காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு.
076 549 6763, 077 240 9217

## பராமரிப்பாளர் தேவை

வயதான மூதாட்டி ஒருவரை பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் (பணிப்பெண்) தேவை. சம்பளம் 20,000 இற்கு மேல்
வயது :- 35 - 50 தொடர்பு-078 443 2743

DLB
CAR PLUS
சீட்டிழுப்பு இலக்கம் 01
சீட்டிழுப்பு திகதி 2017.04.05
வெற்றி இலக்கங்கள்
09 13 31 E
05 118
32,879,480/=

Galaxy Star
வெற்றி வாரம் 150
திகதி 05.04.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
06 04 15 22 59
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,490,748/-
09.04.2017 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2863 திகதி: 05.04.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
17 52 72 74 L
போனஸ் இல.
34
புதன்கிழமை ஜக்பொட்
ரூ. 55,669,612/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு 1919



## நியாயத்தின் பாதையில்

வணக்கம், நாம் ஃபெயார்ஃபர்ஸ்ட்

ஃபெயார்ஃபர்ஸ்ட் நிறுவனம், யூனியன் அஷ்யூரன்ஸ் ஜெனரல் மற்றும் ஏசியன் அலையன்ஸ் ஜெனரல் நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு, ஃபெயார்ஃபக்ஸ் குழுமத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் ஓர் நிறுவனமாகும். நீங்கள் இதுவரை அனுபவித்த இணையில்லா காப்புறுதி, மீள்காப்புறுதி சேவைகளை, உலகில் முதற்தர பொதுக்காப்புறுதி நிறுவனமான ஃபெயார்ஃபக்ஸ் குழுமத்தின் பக்கபலத்துடன் தற்பொழுது பெற்றுக்கொள்ளலாம். நாங்கள் சிக்கலான காப்புறுதி சேவைகளை இலகுவான முறையில் வழங்குவதையே விரும்புகின்றோம். தனி நபருக்கும், வியாபாரங்களுக்கும், பெரு நிறுவனங்களுக்கும் எமது பல்துறை நிபுணத்துவம் வாய்ந்த 1400 ஊழியர்கள் மற்றும் 57 சேவை நிலையங்களினூடாக இணையில்லா சேவையை பெற்றுக்கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றோம். மேலும் மற்றவர்கள் எவ்வாறு எங்களை கவனிக்க வேண்டுமென்று விரும்புகின்றோமோ அதே போன்ற கவனிப்பை உங்களுக்கும் வழங்குவதற்கு உறுதி பூண்டுள்ளோம். எப்பொழுதுமே இவ்வாறான சேவைகளை வழங்குவது இலகுவான காரியமல்ல, இருப்பினும் இதற்கான முழு முயற்சியையும் எடுப்பது நியாயமானதொன்றாகும்.

www.fairfirst.lk 0112 428 428 (24x7 துரித அழைப்பு)

பிரத்தியேக தேவைகளுக்கான காப்புறுதி:
தனியார் கார்கள் | மோட்டார் சைக்கிள்கள் | முச்சக்கர வண்டிகள் | வீடுகள் | வீட்டு உடமைகள்
விபத்து | பயணம் | ஆரோக்கியம்
வர்த்தக மற்றும் வியாபார தேவைகளுக்கான காப்புறுதி:
வர்த்தக வாகனங்கள் | ஃப்ளீட் | கடல் மார்க்க | சொத்து மற்றும் கட்டுமானம் | பொறுப்பு
ஊழியர் அனுகூலங்கள் | குழும ஆரோக்கியம்

fairfirst
INSURANCE
A FAIRFAX Company

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.